# விடுதலைப்புலிகள்

குரல் – 120 கார்த்திகை, 2004 அன்பளிப்பு – 10/=



- சமாதானத்தை கழுமரத்திற்கு... 03
- சமாதானத்தின் எதிர்காலமும்... 04
- சிங்கள-தமிழ் கலைக்கூடல் 14
- விதைநிலங்களும் நினைவு... 05
- விடுதலைக்கானதே விதைப்பு 06
- அவன் நிறையவே சாதிக்க... 07


# தமிழீழம் என்ற இறுதிமார்க்கத்திற்கு தள்ளிவிடும் புறநிலையை உருவாக்காதீர்

**ஜனாதிபதி சந்திரிகாவிடமும் அவர் கூட்டாட்சி அமைத்திருக்கும் கட்சிகளிடமும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடமும் எமது விடுதலை இயக்கம் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறது. அதாவது, தமிழ்மக்களது இனப் பிரச்சினையின் அடிப்படைகள் குறித்து, அவர்களது மூலாதாரக் கோரிக்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை குறித்து உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாகப் பகிரங்கப்படுத்துங்கள்.**

**இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி நாம் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்தும் சிறைப்பட்டுக் கிடக்கமுடியாது.**

**இவ்வாறு இலங்கையின் அரசியல் நெருக்கடிமிக்க இக்காலகட்டத்தில் விடுதலைப்புலிகளின் கொள்கை நிலைப்பாடாக தேசியத் தலைவரின் மாவீரர்நாள் உரையை அனைத்துத் தரப்பும் எதிர்பார்த்திருந்த வேளையில் தமதுரையில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

உரையின் முழு விபரம் வருமாறு:

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று ஒரு புனிதமான நாள். தமது உன்னதமான உயிருக்கும் மேலாக, தமது தேசத்தின் விடுதலையை அதியுன்னதமானதாக நேசித்து, அந்த உயரிய இலட்சியத்திற்காகச் சாவைத் தழுவிக் கொண்ட எமது மாவீரர்களை நாம் போற்றி வணங்கும் நன்னாள்.

எமது மாவீரர்களின் வீரஞ்செறிந்த போராட்ட வாழ்வையும் அவர்களது ஒப்பற்ற தியாகங்களையும் அற்புதமான அர்ப்பணிப்புகளையும் நெஞ்சில் நிறுத்தி நினைவுகூரும் இத் திருநாளில் ஒரு முக்கிய விடயத்தைக் கவனத்திற் கொள்ளுமாறு நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்த எமது வீர விடுதலைப் போராட்டத்தில் எமது மாவீரர்கள் புரிந்த மகத்தான தியாகங்கள் காரணமாக ஒப்பற்ற போரியற் சாதனைகளை நாம் நிலைநாட்டினோம். உலகமே வியக்கும் வகையிற் போர் அரங்குகளில் எதிரிப் படைகளை விரட்டியடித்து வெற்றிகளை ஈட்டினோம். சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருந்த எமது தாயக மண்ணின் பெரும் பகுதியை மீட்டெடுத்து அங்கெல்லாம் எமது நிர்வாக ஆட்சியதிகாரத்தை நிறுவினோம். உலக நாடுகளின் உதவியுடன் கட்டியெழுப்பப்பட்ட சிறீலங்கா அரசினது ஆயுதப் படைகளுக்கு ஈடாகப் படை வலுச் சமநிலையை நிலைநாட்டினோம். தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சர்வதேசமயப்படுத்தி, உலகத்தின் கவனத்தை எம் மீது திருப்பினோம். எனினும் எமது மாவீரர் கண்ட இலட்சியக் கனவு இன்னும் நிறைவுபெறவில்லை. எமது தாயகமண் இன்னும் முழுமையாக விடுதலை

(உரையின் தொடர்ச்சி 15ஆம் பக்கத்தில்)



மாவீரர் நாளன்று தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் உரையாற்றியபோது...

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# தலைவரின் மாவீரர்நாள் உரை சொல்லும் அரசியல் செய்திகள்

புலிகளின்குரல்

இந்தவருட (2004) மாவீரர்நாள் உரையில் தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் முக்கியமான பல அரசியல் செய்திகளைக் கூறியுள்ளார்.

கடந்த மூன்றாண்டுகால சமாதான முன்னெடுப்புகளும், அதன்போது நடந்த ஆறுசுற்று பேச்சுவார்த்தைகளும் எந்தவித பயனுமின்றி முடிந்துள்ளன என்று கூறியுள்ள தலைவர் அவர்கள் சந்திரிகா அம்மையாரின் தலைமையிலான அரசு சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு எந்தவகையிலும் ஒத்துழைக்க வில்லை என்று குற்றம் சாட்டியுள்ளார்.

“போருமின்றி - நிலையான சமாதானமுமின்றி - இயல்பு நிலையுமின்றி - இடைக்காலத் தீர்வுமின்றி - இனப்பிரச்சினைக்கு முடிவுமின்றி நாம் ஒரு அரசியல் வெறுமைக்குள் வாழ்ந்து வருகின்றோம்” என்று தலைவர் அவர்கள் வேதனையுடன் கூறியுள்ளார்.

சந்திரிகா அம்மையாரின் தலைமையிலான கூட்டணி அரசின் குழறுபடிக் கொள்கைகளையும் - அது சமாதான முயற்சிகளில் காட்டுகின்ற சதித்தனமான அரசியலையும் தலைவர் அவர்கள் தனது உரையில் விரிவாக அம்பலப்படுத்தியுள்ளார்.

இனவாதமும் - மதவாதமும் - இராணுவவாதமும்தான் சிங்கள அரசியலின் தாரக மந்திரங்களாக உள்ளன. தமிழருக்கு நீதி வழங்கவேண்டும் என்ற எண்ணமோ! இனப்போருக்கு அரசியல் தீர்வு காண்பதில் கருத்தொற்றுமையோ! சிங்கள தேசத்திடம் இல்லை. தென் இலங்கையின் உண்மையான அரசியல் யதார்த்தம் இதுதான் என்று தலைவர் ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிங்கள நாடாளுமன்றுக்கு நடந்த பொதுத்தேர்தல் இலங்கைத்தீவு இரு தேசங்களாகப் பிளவுபட்டுள்ளது என்ற உண்மையையே எடுத்துக்காட்டியுள்ளது என்று தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார். சிங்கள தேசத்தில் சிங்கள - பௌத்த மேலாண்மை வாதம் மேலோங்கி நிற்க - தமிழர் தாயகத்தில் புலிகள் இயக்கத்தை தமிழரின் ஏகபிரதிநிதிகளாக மக்கள் அங்கீகரிக்கவும் - புலிகளின் இடைக்கால வரைபு திட்டத்திற்கு தமிழரின் ஆணையும் கிடைத்தது என்று பகுப்பாய்வு செய்துள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முதற்கட்டமாக இடைக்கால நிர்வாக அமைப்பை புலிகள் ஏன் முன்வைத்தனர் என்பதற்கு தலைவர் அவர்கள் தனது உரையில் விளக்கமளித்துள்ளார். அதேசமயம் நிரந்தரத் தீர்வுபற்றியே பேசவேண்டும் என்று அம்மையார் அடம்பிடிப்பதற்கான காரணம் என்னவென்று எடுத்துக்கூறி - அம்மையாரின் இனவாத உள்ளக்கிடக்கையை உலகிற்கு அம்பலப்படுத்தியுள்ளார்.

இடைக்கால நிர்வாக ஒழுங்கு நடைமுறைச் சாத்தியமானது. இனப்போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தை கட்டியெழுப்ப - தமிழ்மக்களை இயல்பு வாழ்க்கை வாழச்செய்ய அது உதவும்.

அம்மையாரின் நிரந்தரத்தீர்வு நிலைப்பாடு சாத்தியமற்றது. அது பேச்சை இழுத்தடிக்கும் சதிநோக்கம் கொண்டது. சர்வதேசத்தை ஏமாற்றி - பணம் கறக்கும் இலக்குக்கொண்டது என்ற உண்மையை தலைவர் அவர்கள் விளக்கியுள்ளார்.

புலிகளின் இடைக்கால வரைபில் ஏதாவது சர்ச்சைகள் இருப்பின் பேச்சுமேசையில் அவற்றை விவாதித்துக்கொள்ளலாம் என்று தலைவர் யதார்த்தபூர்வமாக அரசுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இடைக்கால அமைப்பு செம்மையாகச் செயற்பட்டால் நிரந்தரத் தீர்வுபற்றிய பேச்சுக்களைத் தொடக்கலாம் என்று யதார்த்தபூர்வமாக தலைவர் கருத்துக் கூறியுள்ளார்.

தலைவரின் இந்த நிலைப்பாடு சர்வதேச சமூகத்திற்கும் உடன்பாடானதாகவே இருக்கும். அந்தளவுக்கு சமாதான முயற்சியில் நெகிழ்ச்சிப்போக்கையும் - நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகளையுமே தலைவர் முன்வைத்துள்ளார்.

இறுதியாக தலைவர் அவர்கள், சிங்கள தேசத்தின் முக்கிய அரசியற் கட்சிகளுக்கு ஒரு பகிரங்க வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

அதாவது, “தமிழ்மக்களது இனப்பிரச்சினையின் அடிப்படைகள் குறித்து - அவர்களின் மூலாதார கோரிக்கைகளான தாயகம் - தேசியம் - சுயநிர்ணய உரிமை குறித்து அவர்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாகப் பகிரங்கப்படுத்துங்கள்” என்று கோரியுள்ளார்.

தமிழரின் இனப்பிரச்சினைக்கு சிங்களக் கட்சிகள் முன்வைக்கும் தீர்வு இராணுவ வழிமுறையிலானதா! அல்லது அரசியல் வழிமுறையிலானதா! என்பதை சர்வதேசம் கண்டுகொள்ளவேண்டும் என்பதே தலைவரின் நோக்கமாகும்.

அதேசமயம், சமாதானப் பேச்சிற்கு உயிர்கொடுக்க சிங்கள அரசு தவறுமேயானால் அதன் விளைவுகளுக்கு புலிகள் இயக்கம் மீது பழிசுமத்தக்கூடாது என்பதையும் தலைவர் அவர்கள் சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சு நடக்கும் - இடைக்காலத்தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதற்கும், அதற்காகக் காத்திருப்பதற்கும் ஒரு எல்லை உண்டு. இதை அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

“இந்த எல்லைக்கோட்டை நாம் அடைந்துவிட்டோம்” என்று தலைவர் அவர்கள் வேதனையுடன் சுட்டிக் காட்டியுள்ளார்.

தனது உரையை முடிப்பதற்கு முன்னர் தலைவர் அவர்கள், சிறிலங்கா அரசுக்கு ஒரு அவசர அழைப்பையும் விடுத்துள்ளார்.

அதாவது “நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில், நிபந்தனையற்ற முறையில், காலந்தாமதிக்காது, பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.” என்று தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அரசால் இவ் அழைப்பு நிராகரிக்கப்படுமானால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் தலைவர் எடுத்துக்கூறியுள்ளார்.

“இவ்வேண்டுகோளை நிராகரித்து காலத்தை இழுத்தடித்து, எமது மக்களின் துயரவாழ்வை நிடித்துச்செல்ல சிங்கள அரசு முற்படுமானால் நாம் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத்தவிர எமக்கு வேறுவழியில்லை.” என்று உறுதிபடக் கூறியுள்ளார்.

இதேசமயம், உலக நாடுகளுக்கும் தலைவர் அவர்கள் ஒரு கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

“எமது நியாயமான நிலைப்பாட்டின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்படி வேண்டிக்கொள்கின்றோம்” என்று கூறியுள்ளார்.

தலைவரின் மாவீரர்நாள் உரை தமிழர் தரப்பு உள்ளக்கிடக்கையை நன்கு பிரதிபலித்துள்ளதுடன், சிங்கள அரசிற்கு ஒரு முடிவெடுக்கவேண்டிய தேவையையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சிங்கள அரசு போரை நடாத்தப்போகின்றதா! அல்லது சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கப்போகின்றதா! என்பது அடுத்த சில வாரங்களுக்குள் தெரிந்துவிடும். ●

## மானச்சிகரத்தின் மகுட தீபம்

வானிருக்கும் மட்டும் நீ
வாழவேண்டும் – எம்மை
மண்ணிருக்கும் மட்டும் நீ
ஆழவேண்டும் – நீயிருக்கும் போதே
நாங்கள் மீளவேண்டும் – எங்கள்
நிம்மதியின் சந்நிதியே – உன்னை
வாழ்த்தவேண்டும்.

வானத்தின் எல்லை
போதவில்லை – உன்
வீரத்தின் எல்லை
சொல்ல

பூக்களின் மென்மை
போதவில்லை – மன
ஈரத்தின் தன்மை
சொல்ல

இரும்பெல்லாம்
நொருங்கும் – உன்
உறுதிகண்டு

கருங்கல்லே
உருகும் – உன்
கருணை பார்த்து

புயலுக்கு வேகம்
பழக்கினாய்
பூமிக்கு பொறுமை
புகட்டினாய்
தாய்மைக்குப் பாசம்
வழங்கினாய்

நீருக்குள்
நெருப்பெரிக்கும்
நெறியைக்
கொடுத்தாய்

பூவுக்குள்
பூகம்பத்திறனைப்
புகுத்தினாய்

சாவுக்குள் சாதனைச்
செயலை நடத்தினாய்

இமயம்
நிமிர்ந்து நோக்கும்
ஈகம் கொண்டாய்

இதயம்
எங்கும் வாழ்த்தும்
பேரை வென்றாய்

மானச்சிகர
முகட்டில்
மகுட தீபமனாய்

குளிர்மை கொடுக்கும்
நிலவானாய்

குறையா வீரக்
கொழுந்தானாய்

மன்னா
எங்கள் உயிரானாய்
மங்காதொழிரும்
சுடரானாய்

வானவில்லின்
அழகானாய்
ஈழம் செய்யும்
உளியானாய்
வீரம்
விளைக்கும் வயலானாய்
விடுதலைப் பயிரின்
மழையானாய்

துன்பம்
தாங்கும் துணையானாய்
இன்பம்
தந்த உறவானாய்

வங்கத்தருகில்
வரலாற்றை
வரித்துக் கொண்ட
வல்லவனே

நீ
வாழ்ந்திடும் மண்ணில்
வாழ்ந்திடல் எண்ணி
பெருமிதம் கொண்டோம்
நிறைவாய்

நீ
ஆயிரம் கோடி
ஆண்டுகள் ஈழம்
ஆண்டிட வேண்டும்
தலைவா.





# இமாலய வியப்பு

**– க.வே.பாலகுமாரன் –**

எல்லா வகையிலும் எம்மால் எட்டமுடியாத உயரத்திலுள்ளவர் பற்றி எழுதுவதற்கு இப்படியொரு வாய்ப்புக் கிட்டியமை எனக்கு எதிர்பாராதது. ஆனால் இவ்வாறு எழுதுவதன் மூலமாவது அவரை ஏதோவொரு வகையில் எட்டவோ, தொடவோ முடிந்தது பற்றி எனக்குப் பெரு மகிழ்ச்சி. இவற்றினைவிட நன்றியை, பிறர் நயப்பைக்கூட எதிர்பார்க்காத அவருக்கு இப்படியாவது எமது பெரு நன்றியை பேரன்பை செலுத்த முடிந்ததே என்கிற ஆறுதலும் கிட்டுகின்றது.

ஆனால் வாய்ப்பு கிடைத்தாலும் எதனை, எப்படியெழுதுவது? எழுது வோர்கள் அனைவருமே அவரை முழுமையாக உணர்ந்தவர்கள் என்றாகுமா? எந்தவொரு தத்துவத்திற்கும் வடிவத்திற்கும் விளக்கத்திற்கும் இலக்கணத்திற்கும்

> **பிரபாகரன் அவர்கள் தனது பணிமூலம் தமிழ்த் தேசிய இனத்தினை ஒரு கட்டுக்கோப்பான, தனது விடுதலைக்காக பல்வேறு தளங்களில் போராடுகின்ற நவீன தேசியங்களின் பண்புகள் பொதிந்த ஒரு முன்னணி அணியாக்கிவிட்டார். அதாவது அவரே தமிழ்த் தேசிய இனத்தினை இணைக்கிற காக்கிற மாபெரும் சக்தியாகிற அதேவேளை அவரே அதன் உருவமுமாகிவிட்டார். இதுவொரு வரலாற்றின் புதிய பரிமாணம். தலைவர்கள் தேசியப் போராட்டத்தினை முன்னெடுத்தமை பற்றி அறிந்திருக்கிறோம். ஆனால் இங்கோ தலைவனே தேசியத்தின் வடிவமாகிவிட்டதை காண்கின்றோம். இதனாலே அவரை தேசியத்தின் தலைவன் என்கிறோம்.**

உள்ளடக்கமுடியாத மனிதர் பற்றி எப்படியெழுதுவது. எந்தவொரு வரலாற்றின் தீர்க்கமான கட்டங்களிலும் எந்தவொரு எதிர்பார்ப்பிற்கும் ஊகத்திற்கும் தோல்வியையும், எதிரிக்கு எப்பொழுதும் அதிர்ச்சியையும், நண்பருக்கு எப்பொழுதும் வியப்பையும் இடைவிடாது பிறப்பிக்கின்றவர் பற்றி எவராலும் எழுதமுடியுமா? ஆகவே எழுதுவது என்பது பயனற்ற முயற்சிதான். ஆயினும் எழுதமுடியாது என்பது பற்றியாவது எழுத முடிகின்றதே என்பதுதான் எமது வெளிப்பாடாக அமைகின்றது. அதேவேளை இவ்வளவிற்கும் வியப்பூட்டுகிற பிரபாகரன் அதே வேளை எந்தளவிற்கு கீழுறங்கி சக மனிதர்களோடு, போராளிகளோடு, முதியோ ரோடு, நண்பர்களோடு, சிறு பிள்ளைகளோடு இயல்பாக அவர்கள் தள்ளிப்போகாமல் பார்த்து தன்னோடு அரவணைத்து அவர்கள் மகிழ்ச்சியடையும் வண்ணமும் தாழ்வுணர்ச்சியடையாமலும் அதேவேளை அவர்கள் தங்களை இப்பெரும் தலை வன் எவ்வளவு தூரம் மதிக்கின்றான் என்பதன் வழி தங்கள் மதிப்பினை உணர்கின்ற வகையிலும் பெறுகின்ற உளவியல் ஊக்க பரிமாணத்தினை எப்படி விளக்குவது? ஆனால் விளக்கத்தான் வேண்டுமென்பதற்காகவே இங்கே எழுத நேரிடுகின்றது.

எனது வியப்பினை, உள்ளத்தில் கிளர்ந்தெழும் உயரிய சிந்தனை யோட்டத்தினை பெருமிதத்தின் பூரிப்பினை இப்பொழுது பட்டியலிட முனைகின் றேன். கீழ்மையடைந்து அடிமை வாழ்வை வாழ்கின்றோமே என்பதனை மறந்து சிதைந்து சீரழிந்து உதிரிகளாக பிளவுண்ட ஒரு தேசிய இனத்தினை எவ்வாறு அவர் ஒழுங்குபடுத்தினார்? ஒருமுகப்படுத்தி ஒன்றிணைத்தார்? இணைந்தவொரு ஆற்றல்மிக்க அரசியல், இராணுவ, இராசதந்திர வன்மை நிறைந்த அணியாக்கி அதனை சருவதேச முன்றலிலே எவ்வாறு அவர் முன்னிறுத்தினார்? இங்கேதான் எனது வியப்பு விரிகின்றது. ஒரு தேசிய இனத்தின் இணைக்கும் பண்புகளே எம்மை பிரித்தன. இறைநெறியோ, மொழிப்பற்றோ, வதிவிட வாழ்வுரிமையோ எம்மை இணைக்கவில்லை. மாறாக பிரதேசவாதம் எம்மைப் பிரித்தன. மதம் எம்மை மாற்றானாக்கி யது. இதன் விளைவென்ன? 1970களில் தமி ழன் கதை முடிந்த கதையென்றானது. தப்பித்தலே, தாயகம் விட்டு புலம்பெயர்வதே இறுதி வழியென்றானது. தமிழன் எனச் சொல்வதே இழிவானது. இந்நிலை நீடித்திருந்தால் என்னவாகியிருக்கும்? உலகின் அழிந்து படுகிற மொழியாக தமிழும் அழிந்து படுகின்ற இனமாக தமிழனும் ஐ.நாவால் பிரகடனப்படுத்தப்படும் நிலையல்லவா தோன்றியிருக்கும்.

இக்கட்டத்தில்தான் பிரபாகரன் அவர்களின் வருகை நிகழ்கின் றது. அவர் மட்டுமல்ல இன்னும் பலரினதும் வருகையும் நிகழ்ந் தது. ஆனால் வரலாறு வழங்கிய வாய்ப்பினை அவர் ஒருவரால் மட்டுமே நிறை வேற்ற முடிந்தது. ஏனையோர் பின்வாங்கி யதும் பழைய நிலைக்குச் சென்றதுவும் அதற்குக் காரணங்கள் தேடுவதில் இன்றள வும் காலம் கழிப்பதுவும் எவ்வளவு நகைப்பிற்குரிய விடயம். இன்று பிரபாகரன் அவர்கள் தனது பணிமூலம் தமிழ்த் தேசிய இனத்தினை ஒரு கட்டுக்கோப்பான, தனது விடுதலைக்காக பல்வேறு தளங்களில் போராடுகின்ற நவீன தேசியங்களின் பண்புகள் பொதிந்த ஒரு முன்னணி அணியாக்கி விட்டார். அதாவது அவரே தமிழ்த் தேசிய இனத் தினை இணைக்கிற காக்கிற மாபெரும் சக்தியாகிற அதேவேளை அவரே அதன் உருவமுமாகிவிட்டார். இதுவொரு வரலாற்றின் புதிய பரிமாணம். தலை வர்கள் தேசியப் போராட்டத்தினை முன்னெடுத்தமை பற்றி அறிந்திருக்கின்றோம். ஆனால் இங்கோ தலை வனே தேசியத்தின் வடிவமாகிவிட்டதை காண்கின் றோம். இதனாலே அவரை தேசியத்தின் தலைவன் என்கின்றோம்.

இதற்கான அவரது உழைப்பை, சிந்த னையை, ஏற்பாடுகளை, அவரை உயி ரென மதித்து செயற்பட்டோர் சிந்திய குருதியை, பட்டதுயரை எவராலும் மறக்கமுடியுமா? இன்று பிறநாட்டு அறிஞர், ஆர்வலர் என பல்லோரும் அவர் முன்னே பணிந்து அவரைக் காணப்பெறும் பேறென நினைத்து மகிழும் நிலை தோன்றியிருக்கின்றது. இதற்கொரு வரலாற்றுக் காரணமிருக் கின்றது. "மனிதம் தளிர்க்கவேண்டும், மானுடம் பிழைக்கவேண்டும்" என்று முனைந்த வித்தகன் கார்ல் மாக்சின் சமூக வளர்ச்சிக் கோட்பாட்டினடிப் படையிலான ஆண்டான் அடிமை சமூ கக் காலகட்டத்திலே தோன்றிய அடி மைத் தளையை அறுக்க ஸ்பாட்கஸ் போன்றோர் தோற்றிய போராட்டத்தின் இன்றைய தொடர்ச்சியாக அவர் காணப்படுகின்றார். மனிதகுல விடுதலை வரலாற்றின் இன்றைய இணைப்புச் சங்கிலி அவரே.


எனது அடுத்த இமாலய வியப்பு என்ன வென்றால் அவர் இதுவரை காலமும் பயன்படுத்திய அனைத்து இராணுவ, அர சியல், இராசதந்திர உத்தி கள், அணுகுமுறைகள் எல்லாமே உள்ளடக்கிய போரியல் சிந்தனைமுறை பற்றியது. எங்கிருந்து இத்தனையாற்றல்களையும் அவர் பெற்றார்? அலுப்பு சலிப்பற்று ஓய்வற்று இடை விடாது சிந்தனையில் ஈடு பட்டிருக்கும் அவர் மன உலகம் பற்றியே நான் பெரிதும் வியக்கின்றேன். அவர் மனவுலகத்தின் பல் வேறு தளங்களிலே சம காலத்திலே பல்வேறு அர சியற் போராட்டங்கள், இரா ணுவப் போர்கள், இராச தந்திரச் செயற்பாடுகள் எல்லாமே தனித்தனியாக நிகழ்த்தப்படுவதாக நான் உணர்கிறேன். இத்தகைய அதியற்புத ஆற்றல்கள் கைவரப்பெற்றவர் என்று சொல்வதைவிட அவ் வாற்றல்களை அவர் தனக்குள் கிளர்ந்தெழ வைக்கின்றார் என்பதே பொருத்தமானது. இவ்வா றாகும் அவர் பெருமனிதராக ஏனையோருக்கு தான் தோற்றிவிடக் கூடாதென்பதற்காக இயல்பு வாழ்வை பேணுகின்ற விதமே இன்னொரு இமாலய வியப் பிற்குரிய விடயம். இச் சமநிலையைப் பேண அவரிடம் எவ்வளவு மனத்திடம் வேண்டும். இன்னொரு அதிசய மென்னவென்றால் அவரிடம் காணப்படும் அபாரமான எளிமை. மிக முதிர்ந்த மனநிலையையும் மிக இளைய மனநிலையையும் சமகாலத்திலே ஒருவர் பேணுகின்றார் என்பது எம்மால் நினைத்தும் பார்க்க முடியாத விடயம். ஏனைய பிறமனிதருக்கு அவர் புகட்டும் பாடம் வரிகளில் அடக்கமுடியாதவை.

இங்கேதான் அவர்வழி வரலாற்றுத்தாய் உணர்த்தும் அரிய செய்தி மனிதருக்காக வெளிப் படுகின்றது. மனிதரிடை மறைந்திருக்கும் மாபெரும் ஆற்றலை உணர்வது, அதனை வெளிப்படுத்துவது என்பதுதான் அவர்வழி நிகழ்வதாக உணர்கின்றேன். நவீன அறிவுலகத்தின் அதியற்புத மனிதப் பிறவியாக அவரை நான் உணர்கின்றேன். "உன்னையே நீ அறிவாய்" என்பார்கள். அவர் தன்னையே தானறிந்து தன்னையே தான் நம்புகின்றார். அவர் "இயற்கை யிடமோ, மனிதனிடமோ தோல்வியை ஒப்புக்கொள் ளப் போவதில்லை." ஏனெனில் அவர் தனது இன் றைய நிலையை அடைவதற்கு "எவருக்கும் கடமைப் பட்டவர்" அல்லர். அவ்வாறே அவர் உருவாக்கிய அணி இன்று உலகின் கவனத்தை ஈர்த்து தமி ழினம் தலைநிமிர்ந்து தாழ்வுச்சிக்கல் அகன்று இனமானம் பெற்று வாழ வழிவகுத்துக் கொண்டிருப் பதை நாம் காண்கின்றோம். அதற்காக அந்தப் போராளிகள் அணியே தேசியத் தலைவருக்கு பெரு நன்றிக்கடன் செலுத்த கடமைப்பட்டிருக்கின்றது. ஏனெனில் ஒவ்வொரு போராளிக்குள்ளும் மறைந் திருக்கும் அரிய ஆற்றலை அவனோ, அவளோ உணர வழிவகுத்த திறன் அவரிடமேயிருந்தது.

மனித குலத்திற்கே பிரபாகரன் மூலம் சொல்லப்படும் பெறுமானம்மிக்க அறிவியல் உணர் த்துகையை இன்றைய நவீன ஆய்வாளர் ஆய்வு களில் காண முயல்கின்றார்கள். மனிதனுக்குள்ளே மறைந்திருக்கும் அரிய ஆக்கத்திறனை, ஆற்றலை, புதிதாக உலகைப் படைக்கும் ஆற்றலை அவன் உணர்ந்திருக்கின்றான். அதை அவன் உணர்ந்தால் அவனை வெல்ல எவராலும் முடியாது என்கிற பேருண்மையை பிரபாகரன் ஆய்வுகூட ஆய்வுகளின் வழியன்றி போராட்டவழி நின்று நிரூபித்த விதம் நிச்சயமாக அறிவியலாளர் ஆய்விற்கு பின்னொரு காலம் முதன்மைப் பொருளாக அமையப்போகும். எனவேதான் இன்று அவருக்கு அருகாமையிலிருக்க, அவரைக்காண, உணர எம்மக்கள் அலையாக மோது கின்றார்கள். இது 'தரிசனம்' பெறும் காட்சியல்ல. அவர்மூலம் பரவும் பேராற்றலின் பேரொளி வட்டத் தின் கதிர் வீச்சிற்குட்படுவதன் தாக்கம் தம்மையும் உயிர்ப்பிக்கும் என்பதன் வெளிப்பாடேயிது. எனவே தான் இன்றைய நூற்றாண்டின் வரலாற்றின் விளை பொருள் அவரேயாகின்றார்.

ஒவ்வொரு நூற்றாண்டிலும் அவ்வவ் கால கட்டத்திற்கேற்ப மனித விடுதலையை தொடர்வதற் காக உருவாகிய தலைவர்களை நாம் கண்டுள்ளோம். அவ்வவ் காலகட்டங்களில் உள்ள சூழ்நிலை இத்த கைய விடுதலையை யாசிப்பதாக உந்தித்தள்ளுவ தாக அமைவதையும் பார்க்கின்றோம். ஆனால்

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)





# வேவுக்கால மழைமேகம்

## (மழையில் வேவுப்புலிகளின் சம்பவம்)

**- துளசிச்செல்வன் -**

### மேகம் - 01

மழை அழகானது. வீட்டினுள் இருந்து கொண்டு சாளரத்தின் வழியே மழையை இரசிப்பது எவ்வளவு சுகம். ஏதாவது சிற்றுண்டியை கொறித்தபடி தேனீர் பருகுவது எவ்வளவு சுவாரசியம். மழையை சந்தோசமாக அனுபவிக்கத் தெரிந்தவர்களிற்கு அது காலத்தின் கொடை. அந்த உயிர் சிலிர்க்கும் குளிர் எத்தனை ஞாபகங்களை கிளறும். எத்தனை கவிஞர்கள் என்னென்ன விதமாக மழையைப் பாடியிருக்கிறார்கள்.

ஓ... மழையே! நீ காலத்தின் கொடை.

அவர்கள் மழையை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இரசிக்கவில்லை. அந்தக் காட்சிகள் அவர்களோடு ஒட்டவும் இல்லை. வானம் பூமிக்கு நீர்க்கொத்து வழங்கும் அபூர்வம் ஏனோ அவர்களைக் கவரவில்லை. அவர்களுக்கு மழை அழுது கொண்டிருப்பது போலத்தான் பட்டது. எத்தனை பேருக்கு இப்படியிருக்குமோ. மழைத்துளிகளில் நனைந்து சிலிர்த்துப் போயிருக்கும் மரங்களைப் பார்க்கிறார்கள். அவை இறந்த காலத்திற்குள் அவர்களை அழைத்துச் செல்கின்றன.

மணலாற்றுக் காடுகளில் வேவுக்காக அலைந்த நாட்கள். ஒருநாள் வேவுக்காக புறப்பட்டார்கள். தங்கியிருந்து வேவு பார்த்துவிட்டு வர வேண்டும். எனவே சில உலருணவுப் பொருட்கள் தோற்பையில் கனத்தன. மழைகாலம் என்பதால் தண்ணீர் கலன்கள் சுமக்கும் வேலையிருக்கவில்லை. காட்டிலே அருவிகளும், மோட்டைகளும் அவர்களிற்கும், மிருகங்களுக்குமாகத்தானே நிரம்பிக் காத்திருக்கின்றன. குண்டு, குப்பி அவற்றோடு தகவல் திரட்ட பயன்படும் வேறுசில பொருட்களும் சரி பார்க்கப்பட்டது. நகரத் தொடங்கினார்கள். அவர்கள் சரி பார்த்துக்கொண்டு செல்லும் பொருட்களும், அவர்களது உடலில் உயிரும் இருந்தால் போதும் அவர்கள் தம்பணியை முடித்துத்தான் முகாம் திரும்புவார்கள். நகர ஆரம்பித்தபோதே மழை தூறத் தொடங்கிவிட்டது. மழைக்காலம் என்பதால் அதை எதிர்பார்த்தார்கள். தூறத்தொடங்கிய மழை மெல்ல மெல்ல தூமித்தது. உடல் நனையாது மரங்களிற்குள் நிற்கவேண்டும்போல மனம் சொன்னது. மழைத்துளிகள் மேலாடைகளை நனைத்துவிட்டன. கொஞ்சம் கொஞ்சமாய் நடுங்கத் தொடங்கியது. பற்கள் கிடுகிடுவென்று அடித்தன.

இன்னும் பலமணிநேர நடைக்குப் பின்தான் அவர்கள் போகவேண்டிய இடம். இடையே ஆறுகள், சேற்றுக்குளம்... தரவைகள் இப்போது தலையிலிருந்து எல்லாம் முழுமையாக ஊறிவிட்டன. ஆங்காங்கே மயிர்சிலிர்ப்பி குடங்கியபடி மரங்களிற்குள் ஒதுங்கிய மான், புலுட்டைகள் ஓடக்கூட முடியாது மெல்ல நடந்து அவர்கள் செல்ல, பார்த்து நின்றன. எங்கேயாவது குடங்கிக்கொண்டு நிற்க வேண்டும் என்றுதான் இவர்களது உடல் கெஞ்சியது. இது வழமைதானே. அவர்களது கால்களும், தோள்களும் கண்களும் ஓய்வு கேட்டுக் கெஞ்சாத நாளில்லையே...

மழையில் நனைந்து ஆனந்தப் பட்டபள்ளிக்கால வாழ்வை நினைத்தபடி நடந்தார்கள். மழையே நன்றி. உன் தொல்லை தாங்காது எதிரி இப்போது காவலரணிற்கு வெளியேவராது உள்ளே இருப்பான். சிகரட் பிடித்துக்கொண்டு தன் காதலி பற்றியோ, மனைவி பற்றியோ நினைப்பில் களித்துக் கொண்டிருப்பான். அவனது முகாமிற்குள் நுழைந்தாலும் சத்தம் வராது நடக்கலாம். சத்தமெழுந்தாலும் மழையே! உன் பெரிய இரைச்சல் எல்லாவற்றையும் மறைத்துவிடும். அவர்கள் முகத்துவார முகாமை அடைய முன் எதிர்கொண்ட தரவைக்குள் சேற்றில் அமிழ்வதும், அடுத்தவர் உதவியோடு மீள்வதுமாக ஒவ்வொரு அடியையும் எண்ணி எண்ணி எடுத்து வைத்தனர். கரையில் ஏறினார்கள். நுளம்புகள் மொய்த்தன. உடையில் மழைத் தண்ணீரில் கலந்த சேறு கடிக்கத் தொடங்கின. அக்குள் பகுதிகள் அரித்தன. ஒருவர்பின் ஒருவராக நடந்து கொண்டிருந்தார்கள்.

இரவு சிறு பற்றைகளை மறைப்பாக்கி பாதுகாப்பான இடமொன்றில் தங்குகிறார்கள். மழை விடவேயில்லை. அங்க அசைவுகள் அத்தனையையும் நிறுத்திவிடுமளவிற்கு உடல் விறைத்திருந்தது. இன்னும் பணி ஆரம்பிக்க முன்னரே வெப்பசக்தி முழுமையாக குறைந்துவிட்டது. மூச்சு மட்டும் இப்போது சுட்டபடி வெளிவந்தது. கைகளும், கால்களும் தொடுகை உணர்வை கொஞ்சம் கொஞ்சமாக இழந்துவிட்டன. தோளில் சுமை. அவற்றோடு இரவு ஓரிடத்தில் தங்கினார்கள். மழை சோனாவாரியாக பொழிந்துகொண்டிருந்தது. எந்தப் பாதுகாப்பு வசதிகளுமற்ற அவர்களை கடும் குளிரும், கொடிய நுளம்புகளும் வேண்டியவரை வதைத்தன. உலர் உணவுகளை சாப்பிட்டும், மழைத் தண்ணீரைக் குடித்துக்கொண்டும் பல நாட்கள் அவர்கள் வாழ வேண்டியிருந்தது.

ஒவ்வொரு பகுதியாக வேவுவேலைகள் ஆரம்பமாகியது. மழை விடுகின்றபாடாக இல்லை. உடல் உபாதைகளில் அவஸ்த்தைப்பட்டாலும், அதற்கு முக்கியத்துவம் கொடுக்காது பணியை முதன்மைப்படுத்தினார்கள். ஒருநாள்... இரண்டு நாள் என்று நாட்கள் பெருத்தன... கொண்டுபோன உலருணவும், அவர்களின் உடலில் இருந்த தெம்பும் அறவே முடிந்துவிட்டன. நடைகளில்கூட தள்ளாட்டம் தெரிந்தது. ஓயாத மழையோடும், உலராத உடுப்புகளோடும் அவர்கள் மூன்றுநாளைக் கழித்திருந்தார்கள். இன்னும் ஓரிரு வேலைகள் இருந்தன. இன்னும் ஒரு இரவோடு அவர்கள் அதையும் முடிக்கத் தீர்மானித்தார்கள்.

இறுதிக்கட்ட வேலைகள் இயலாமையிற்கூடாகவும் நடந்துகொண்டிருந்தன. அவர்கள் வெளியே போகவேண்டிய நேரம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. உடலின் வலு அனைத்தையும் திரட்டி நகர்ந்து கொண்டிருந்தார்கள். நள்ளிரவு கடந்து அதிகாலை வந்தது. அந்தளவோடு அவர்கள் வேலை முடித்துவிடுவார்கள். சிலர் வேலை முடித்துச் செல்வதற்கு ஒன்றாகும் இடத்திற்கு நகரத் தொடங்கியிருந்தார்கள். இன்னும் சிலர் மட்டும் வரவேயில்லை. உடல் அசதியில் அவர்கள் எங்கேயும் விறைத்து மயங்கிப்போயிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த நிலையிலேயே ஒவ்வொருவரும் வந்திருந்தனர். ஒரு காலடி தூரம் நகரவே சிரமமாயிருந்தது. மழை இரைந்தபடி கொட்டிக் கொண்டிருந்தது. இரைச்சலையும் மேவி பெரிய சத்தம். காடே அதிர்ந்து அடங்கியது. தூக்கம் கலைந்து குரங்குகள் கொப்பில் தாவி சத்தமிட்டன. என்ன நடந்தது என்பதைச் சில கணத்திற்குள் எல்லோரும் அறிந்தார்கள்.

“மிதிவெடி வெடிச்சிட்டுது”

இத்தனை காலமும் அவர்களோடு ஓயாது வேவுப்பணியில் நடந்தவனின் கால்களில் ஒன்று முழங்கால் வரை சிதைந்து போயிருந்தது. வேதனை தாங்காது வாய்விட்டுக் கத்தக்கூட முடியாத நிலை. பல்லைக் கடித்து வேதனையை தனக்குள்ளே அடக்கினான். இன்னொரு பகற்பொழுதை அங்கே கழிக்கமுடியாது என்ற ஆபத்தை உணர்ந்தார்கள். அவர்கள் எதிரியின் பிரதேசத்தை கடக்க முதல் பொழுது விடிந்துவிடும் என்ற அபாயமும் இருந்தது. நிற்பதும், நகர்வதும் ஆபத்தானதாயிருந்தது. அதுவும் நடக்கக்கூட முடியாதவர்கள் எப்படி அந்த நீண்ட பிரதேசத்தைக் கடக்கப் போகிறார்கள். அதற்குள் ஒருவனுக்குக் காயம். அவனை எப்படியும் காப்பாற்றவேண்டும். முதலில் மூன்றுபேர் சேர்ந்து அவனைத் தூக்கி ஓடுகின்றார்கள். அது சிரமமாயிருக்கிறது. பின் இரண்டு பேர்.. அதுவும் சிரமமாகவுள்ளது. கடைசியாக தனியொருவன்.

எங்கிருந்து இந்தப் பலம் வந்தது. தானே நடக்கமுடியாது சிரமப்பட்டவன். எப்படி இந்தக் கடற்கரை மணலிற்குள்ளாலும், அலைகளிற்குள்ளாலும் இன்னொருவரைச் சுமந்துகொண்டு ஓட முடிகிறது. தோழனைக் காப்பாற்றவேண்டும் என்ற துடிப்பு. எவ்வளவு உன்னத பலத்தை அவனிற்குள் கொடுத்திருக்கிறது. நட்பிற்கு எவ்வளவு வலிமை. எதிரிப் பிரதேசம் கடந்து எங்கள் பிரதேசம் வந்து சேரும்போது, நெல்சனை சுமந்து வந்த கலையரசன் மயங்கிவிழுந்தான். அந்த வேவின்போது மெல்ல மெல்ல தங்கள் உடலைக் கரைத்தவர்கள், சண்டையின்போது உயிர்கரைந்தார்கள். அதுவும் ஒரு மழைநாளில் நடந்தது. கலையரசனை இழந்த சோகத்தோடு தோழர்களைப்போல வானமும் அழுது கொண்டிருந்தது. இப்படிப் பல நாட்கள் பலபேருக்கு கழிந்திருக்குமோ?

> அவன் மெல்ல நடந்து வீட்டினுள் நுழைந்தான். அம்மாவிலிருந்து தண்ணீர் கொட்டிக்கொண்டிருந்தது. முழுமையாக நனைந்துவிட்டாள். தலைநிமிர்த்திப் பார்த்தபோது அவளிற்கு அழுகை வந்தது. ஏதை நினைத்து அழுகிறாள்... அது தெரியாது. ஆனால் அழுகையின் முடிவில், “மோனை! இதைக் கொண்டுபோய் பேசில் (முகாம்) வையன். இதாவது நனையாமல் இருக்கட்டும்...”

காற்றோடு கூடிவந்த மழைத்தூவானம் நிகழ்காலத்திற்குள் அழைத்தது. இப்போது பெய்து கொண்டிருக்கும் மழை ஓரளவு ஆறுதலளித்தாலும், இன்னும் ஒழுக்கு வீடுகளும், அகதிவாழ்வு முடியவில்லையே என்று கவலையிருந்தது. சீரில்லாத பாதைகள், அவலம் எல்லாம் தீர்ந்து எப்போது எல்லோருக்கும் ஆனந்தமான மழை பெய்யப்போகிறது. ஒருவருக்கும் சுடாது எல்லோருக்கும் குளிரும்படி எப்போது மழை பொழியும்?

---

### மேகம் - 02

மழை சினமூட்டுமளவிற்கு ஓயாது பெய்துகொண்டிருந்தது. அதன் இரைச்சல் பலமானதாக இருந்தது. அதை சங்கீதமாக இரசிக்க அங்கே யாரும் இருக்கவில்லை. யார் நின்றால்கூட இந்தக் காவலரண் வாழ்க்கையில் அது சங்கீதமாக கேட்காது. உதிர்ந்த பூ ஒன்றின் மீது மழைத்துளி சொட்டிக்கொண்டிருந்தது. அந்தப் பூவில் சேற்றுமண் அப்புவதும், கழுவுவதுமாக கழிந்தது பொழுது. மழைநீர் சில பூக்களை இழுத்துச் சென்று கொண்டிருந்தன. அவைகளும் ஆடியசைந்து நீரோட்டத்துடனே போய்க் கொண்டிருந்தன. பூக்கள் மெல்ல, மெல்ல முகங்களாக மாறின. சிரித்தபடி, ஆழமாகச் சிந்தித்தபடி. இப்படிப் பல வடிவங்களில்... நீரோட்டத்தின் வேகமான சுழிப்புகளிற்குள் சிக்கியபடி சிவாவின் சிரித்த முகம்... சேரனின்... கள்ளமில்லா பாசம் பொழியும் முகம்... வேகமாக ஓடிக்கொண்டி ருக்கும் கால வெள்ளத்தில் பின்நோக்கி நினைவுகள் நடந்தன.

> எங்கிருந்து இந்தப் பலம் வந்தது. தானே நடக்கமுடியாது சிரமப்பட்டவன். எப்படி இந்தக் கடற்கரை மணலிற்குள்ளாலும் அலைகளிற்குள்ளாலும் இன்னொருவரைச் சுமந்துகொண்டு ஓடமுடிகிறது. தோழனைக் காப்பாற்றவேண்டும் என்ற துடிப்பு எவ்வளவு உன்னத பலத்தை அவனிற்குள் கொடுத்திருக்கிறது. நட்பிற்கு எவ்வளவு வலிமை.
> எதிரிப் பிரதேசம் கடந்து எங்கள் பிரதேசம் வந்து சேரும்போது....

சிவாவும்..., சேரனும் வயதிலும் தோற்றத்திலும் இளையவர்கள். அது ஜெயசிக்குறுய் நெருக்கடிச்சூழல்... ஜெயசிக்குறுய் இராணுவத்தின் முன்னணி நிலைகளை ஊடுருவது மிகக் கஸ்ரம். நெருக்கமாக காவலரண் அமைக்கப்பட்டிருக்கும். தடைகளைத் தாண்டி மண்ணணைகளில் ஏறினாலும் உள்ளே நுழையமுடியாது. இதுவரை பல தடவை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. சில வீரச்சாவுகளும், விழுப்புண்களும்தான் மிச்சம். முயற்சிகள் கடும் தோல்விகண்டன. உள்ளே நுழைந்து தகவல் திரட்டுவதிலேயே அடுத்தகட்ட தாக்குதல்கள் தங்கியிருக்கிறது.

அன்றிரவு சிவாவும், சேரனும் உள்ளே நுழைவது என்ற ஓர்மத்தோடு புறப்பட்டபோது மழை லேசாகத் தூறிக்கொண்டிருந்தது. வயது முதிர்ச்சியோ, அனுபவ முதிர்ச்சியோ அதிகமில்லாதவர்கள். உறுதி மட்டும் உயரமாக நிற்க, “உள்ளே செல்கிறோம்” என்று புன்னகையோடு விடை பெற்றார்கள். இவர்களை வழியனுப்பவும், பாதுகாப்பு வழங்கவும் சென்றவர்கள் தடையோடு தங்கிவிட, இருவரும் ஒவ்வொரு தடையையெட்டி உள்ளே சென்றார்கள். ஆபத்தை எதிர்பார்த்து அங்குலம், அங்குலமாக நகரவேண்டிய பிரதேசம். அதற்குள் நிறைய கதைத்துக்கொண்டு வந்தான் சேரன்.

“மச்சான்! கண்டு அடிச்சால் உள்ளுக்க பாய்வம்...”

சில காலடித்தூரம் கடந்து மறுபடியும் சிவாவின் காதுக்குள் கிசு கிசுப்பான்.

“ஓராளெண்டாலும் உள்ளுக்க நிண்டு வேலை செய்யவேணும்...”

சில அடிதூரம் சென்றிருப்பார்கள். விழிப்போடு இருந்த எதிரி சுடத் தொடங்குகிறான். சில வேட்டொலிகள். பின் எல்லா இடமும் அமைதி. மழை கடும் இருட்டு. அவர்களிற்கு என்ன நடந்தது என்பது தெரியாது. விடை கொடுத்தவர்களது மனசு பதைபதைப்போடு இருண்டு கிடந்தது.

மழை விட்டு விட்டுத் தூறிக்கொண்டிருந்தது. காயப்பட்டால் மழைக்குப் பெரிதும் சிரமப்படுவார்கள். வீரச்சாவென்றால்... ஐயோ!... அவர்களது வித்துடல்கள் மழையிலேயே கிடக்கப்போகிறது. ஊதி பெருத்து உருமாறும் அவர்களது கோலத்தைக் கற்பனைபண்ண முடியாதிருந்தது. காலையில் அவர்களிற்குக் கிடைக்கும் இரகசிய வழித்தகவல் மூலம் சேதியறிந்தனர். ஒரு வித்துடலை எதிரிகள் கண்டுவிட்டார்கள். மெல்லிய அரும்பு மீசையுள்ள சிறிய தோற்றமாம். அது சேரன், அப்ப சிவா...!? அவனை இன்னும் அவர்கள் காணவில்லையா? அல்லது காயப்பட்டு எங்கேயும் காடுகளிற்குள் உயிருக்காய் போராடிக்கொண்டிருப்பானா? இரவுகளும், பகல்களும் வந்துபோயின. சிவா உயிரோடு இருப்பான் என்ற நம்பிக்கை தேய்ந்துவிட்டது. குறைந்தளவான உணவுப் பொருட்களையே கொண்டு சென்றதால், என்ன கஸ்ரப்பட்டும் மூன்று நாளிற்குமேல் நிற்கவே முடியாது. அதுவும் விட்டு, விட்டுப் பெய்து கொண்டிருக்கும் மழைக்குள்.

எட்டாவது நாள் சிவா இனி வர மாட்டான் என்று மனம் உறுதியாக நம்பத் தொடங்கியது. அவன் வாழ்வின் வேவுநாட்கள் ஒன்றன்பின் ஒன்றாக நினைவில் தொடர்ந்தன. ஒன்பதாவது நாள் பத்திரிகையில் அவனது வீரச்சாவுச் செய்தியை வெளியிட ஆயத்தங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. பத்தாவது நாள்.. அதிகாலை அவன் வந்தான். தோற்றம் மாறியிருந்தது. பற்கள் பழுப்பேறியிருந்தன. முடிகள் கலைந்து, ஆழுக்காய் இருந்தது. நனைந்து கிழிந்துபோன ஆடைகளும் சேற்றில் ஊறியிருந்தது. காயங்களோடு கால்கள். மழை அவனை வலுவாகப் பாதித்திருந்தது. சீ மழையே! ஈரமில்லாத மழையே! இப்படிக் கொடுமைப்படுத்தி விட்டாயே...

ஆதரவாக சிவாவின் கைகளைப் பற்றிய போது, “சேரன் சொன்ன வரிகளை நினைத்துக் கொண்டே, இவ்வளவு நாளும் இராணுவ முகாமிற்குள்ளேயே நின்று, தகவல் எடுத்துக்கொண்டு

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

# சந்திரிகாவுடன் சமாதானம் பயனற்ற முயற்சியா!



தேக்க நிலையிலுள்ள சமாதான முயற்சிகளை முன்னகர்த்திவிடும் நோக்குடன் கிளிநொச்சி வந்திருந்த நோர்வே வெளிவிவகார அமைச்சரை தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் சந்தித்து நீண்டநேரம் உரையாடியிருந்தார்.

பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்குச் சில புதிய ஆலோசனைகளையும் தலைவர் பிரபாகரன் அவர்கள் நோர்வே அமைச்சரூடாக முன்வைத்திருந்தார்.

அவற்றை சனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கு எடுத்துக்கூறி - ஆக்கபூர்வமான பதிலை அவரிடமிருந்து பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையில் நோர்வே அமைச்சர் கொழும்பு சென்றிருந்தார்.

ஆனால், வழமைபோலவே அம்மையார் ஆக்கபூர்வமாக பதில் வழங்கத் தவறிவிட்டார்.

இதனால் நோர்வே வெளிவிவகார அமைச்சரின் சமாதான விஜயம் வெற்றிபெறாமலே முடிந்துவிட்டது. சமாதானத் தூதரும் வெறுங்கையுடன் நோர்வே திரும்பிச் சென்றார்.

இதே போன்றுதான் ஜப்பானியச் சமாதானத் தூதர் அகாசியும் சமாதான நம்பிக்கையுடன் இலங்கைக்கு விஜயம்செய்து - வெறுங்கையுடன் நாடு திரும்பினார்.

சிங்கள அரசின் கடும் போக்கு ஜப்பானியத் தூதுவருக்கு சினமூட்டியுள்ளது. அதனால்தான் சமாதான முயற்சிகள் முன்னேற்றமடையாமல் சிங்கள அரசிற்கு நிதி வழங்க முடியாது என்று கொழும்பில் வைத்தே அறிக்கைவிட்டார். அதுமட்டுமல்ல, விரைவில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாது விட்டால் வாக்களிக்கப்பட்ட டோக்கியோ நிதி இலங்கைக்கு வழங்கப்படாமல் வேறு நாடுகளுக்குத் திருப்பிவிடப்படலாம் என்றும் காட்டமாக அறிவிப்புச் செய்திருந்தார்.

> இந்தச் சமாதான காலத்தில் வெளியிடப்பட்ட 2005ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில் பாதுகாப்பு செலவினத்திற்கு ஏழாயிரம் கோடி ரூபாவிற்குமேல் ஒதுக்கப்பட்டுள்ளது. போர் கடுமையாக நடந்த காலத்தில்கூட இவ்வாறானதொரு பெருந்தொகைப் பணத்தை பாதுகாப்பு நிதிக்கென சிங்கள அரசு ஒதுக்கவில்லை. இம்முறை அவ்வாறு பெரும் நிதி பாதுகாப்புச் செலவினத்திற்கென ஒதுக்கப்பட்டது அம்மையாரின் உண்மைச் சொரூபத்தை அம்பலமாக்கியுள்ளது.

இந்த இரண்டு சமாதானத் தூதர்களின் இலங்கை விஜயத்தினது முக்கிய அம்சம் யாதெனில் இவர்கள் இருவருமே புலிகள் அமைப்பின் சமாதான விருப்பை அதற்கான அவர்களது பொறுமையை பாராட்டிவிட்டே சென்றமையாகும்.

சமாதானப் பேச்சிற்கு அடிப்படையாக புலிகள் இயக்கம் சமர்ப்பித்த இடைக்கால மாதிரி வரைபை சர்வதேச சமூகம் பாராட்டியுள்ளது. அதேவேளை, அந்த மாதிரி வரைபிலுள்ள சர்ச்சைக்குரிய விடயங்கள் என சிங்கள அரசு சுட்டிக் காட்டியுள்ள அரசியல் விடயங்களை பேச்சு மேசையில் விவாதிக்கப் புலிகள் தயார் என அறிவித்துள்ளதும் சர்வதேச சமூகத்திற்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது.

இந்த நிலையில், பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க விடாது முட்டுக்கட்டையாக இருப்பது சிங்கள அரசதரப்பின் கடும்போக்கான நிலைப்பாடே காரணம் என்பது சர்வதேச சமூகத்தின் பொதுவான நிலைப்பாடாகும்.

இந்த உண்மையை சர்வதேச நாடுகள் உத்தியோக பூர்வமாக அறிவிக்காதுவிட்டாலும், அங்கொன்றும் இங்கொன்றுமாக சர்வதேச இராஜதந்திரிகள் சிலர் இக்கருத்தை பகிரங்கமாகக் கூறியுள்ளனர்.

தமிழ் - சிங்கள இன மோதலை அமைதிவழியில் அரசியல் தீர்வுமூலம் தீர்த்துவைக்கும் நோக்கம் சந்திரிகா அம்மையாருக்கு இல்லை என்பது தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தாகும். போர்மூலம் புலிகளை வென்று - தமிழ் இனத்தை ஒடுக்குவதே அம்மையாரின் ஆழ்மன ஆசையாகும்.

இதுவரை நாளும் உதட்டளவில் அம்மையார் பேசிவந்த பசப்பான சமாதான வார்த்தைகளை இப்போது அவர் போட்டுடைத்து - தனது உண்மையான நோக்கத்தைப் புலப்படுத்திவிட்டார்.

இந்தச் சமாதான காலத்தில் வெளியிடப்பட்ட 2005ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில் பாதுகாப்பு செலவீனத்திற்கு ஏழாயிரம் கோடி ரூபாவிற்குமேல் ஒதுக்கப்பட்டுள்ளது. போர் கடுமையாக நடந்த கடந்த காலத்தில்கூட இவ்வாறானதொரு பெருந்தொகைப் பணத்தை பாதுகாப்பு நிதிக்கென சிங்கள அரசு ஒதுக்கவில்லை. இம்முறை அவ்வாறு பெரும் நிதி பாதுகாப்புச் செலவீனத்திற்கென ஒதுக்கப்பட்டது அம்மையாரின் உண்மைச் சொரூபத்தை அம்பலமாக்கியுள்ளது.

சந்திரிகா - ஜே.வி.பி அரசு ஒரு போருக்குத் தயாராகி வருகின்றது என்பதுதான் இன்றைய யதார்த்தமாகும்.

போருக்குத் தேவையான ஒரு உடனடி அரசியல் காரணத்தையும் அது கண்டுபிடித்துள்ளது. அதுதான் அம்மையார் விதித்துள்ள ஒரு புதிய நிபந்தனையாகும்.

பேச்சுவார்த்தை நடாத்த சம்மதமா! இல்லையா! என்று டிசெம்பர் மாதம் தொடங்கமுன்னர் புலிகள் இயக்கம் அரசுக்கு அறிவிக்க வேண்டும் என்று அம்மையார் நிபந்தனை விதித்துள்ளார்.

பேச்சுவார்த்தைக்கு வர மறுத்துவருவது சிங்கள அரசுதான். ஆனால், புலிகள் இயக்கம்மீது அந்தக் குற்றச்சாட்டை அம்மையார் சுமத்தியிருப்பது உண்மையில் ஒரு கேலிக்கூத்து. ஆனால், அம்மையார் இதை ஒரு போருக்கான சாட்டாகவே பயன்படுத்த முனைகின்றார்.

> பேச்சுவார்த்தைக்கு வர மறுத்துவருவது சிங்கள அரசுதான். ஆனால், புலிகள் இயக்கம் மீது அந்தக் குற்றச்சாட்டை அம்மையார் சுமத்தியிருப்பது உண்மையில் ஒரு கேலிக்கூத்து. ஆனால், அம்மையார் இதை ஒரு போருக்கான சாட்டாகவே அதைப் பயன்படுத்த முனைகின்றார்.

புலிகள் இயக்கம் சமாதானப் பாதையில்தான் கடந்த மூன்று வருடங்களாக நிற்கின்றனர். இனப் போருக்கு முடிவுகட்டும் நோக்குடன் இடைக்கால மாதிரி வரைபொன்றை அரசுக்கு சமர்ப்பித்துவிட்டு பேச்சு மேசைக்கு அரசை வரும்படி அழைத்தபடியுள்ளனர். அம்மையாரை பேச்சு மேசைக்கு வரத்தூண்டவும் - எச்சரிக்கவும் தான் நோர்வே வெளிவிவகார அமைச்சரும், ஜப்பானியத் தூதுவரும் அண்மையில் இலங்கை வந்து தோல்வியுடன் சென்றனர்.

**- எல்லாளன் -**

ஆனால், புலிகள்தான் பேச்சுக்குவர மறுக்கின்றார்கள் என்றொரு மாயையை சர்வதேசத்திற்கு ஏற்படுத்தி - அவர்களை குழப்புவதற்கு அம்மையார் முயற்சிக்கின்றார்.

ஆனால், ஒருபக்கக் கருத்துக்களை மாத்திரம் செவிமடுத்து - சர்வதேச சமூகம் முடிவெடுத்த காலம் மலையேறிவிட்டது.

சர்வதேச சமூகத்திற்கு இப்போது தமிழர் தரப்பு நியாயமும் நன்கு தெரியும், சிங்கள அரசின் செயற்பாடுகளும் நன்கு தெரியும்.

சந்திரிகா அரசின் போர் வெறியைத் தடுக்கும் சக்தி சர்வதேசத்திற்கு இல்லாமல் போகலாம். ஆனால், கடந்த காலத்தைப்போல சிங்கள போர் இயந்திரத்திற்கு புதுப்பலம் வழங்கும் வேலையை சர்வதேச சமூகம் செய்யாது என்றே தமிழ்மக்கள் நம்புகின்றனர்.

சந்திரிகா அம்மையாரின் பதவி மோகத்திற்கும் - ஜே.வி.பியினரின் ஆட்சிக் கனவுக்கும் அவர்களைப் பொறுத்தவகையில் போர் தேவைப்படுகின்றது. ஆனால், அது சிங்கள மக்களின் தேசிய நலனுக்காக என்று சொல்லிக்கொண்டு சிங்கள மக்களை ஏமாற்ற முனைகின்றனர்.

இராணுவ அணுகுமுறை மூலம் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண அம்மையார் முயல்வார் என்பதே தமிழ் மக்களினது கருத்தாகும். அதுதான் உண்மை என்பது இப்போது நிரூபனமாகி வருகின்றது. ■


# விடுதலைக்கான வாழ்வு

கருணாகரன்

ஒரு பெண். அவளுக்கு ஏறக்குறைய முப்பத்தைந்து வயதிருக்கலாம். மூன்று பிள்ளைகள். எல்லாமே பதின்மூன்று வயதுக்குட்பட்டவை. அதுவொரு எல்லைப்படை மாவீரரின் குடும்பம். பிள்ளைகள் பள்ளிக்குப் போகிறார்கள். அவள் வேலைக்குப் போகிறாள்.

அவளுக்குள் ஒரு தீர்மானம் உண்டு. தன்னுடைய துணை எப்படியான இலட்சியத்தில் தன்னை ஈடுபடுத்தினானோ அந்த இலட்சியத்துக்கு நிகராக வாழவேண்டும் என்ற தீர்மானம் அது. பிறரின் அனுதாபமும் இரக்கமும் பரிந்துரைப்பும் அவளைச் சிறுமைப்படுத்திவிடக்கூடும் என்றவள் அஞ்சுகிறாள். தன்னுடைய ஆளுமைக்கும் ஆற்றலுக்கும் அவை சேதத்தையேற்படுத்தி விடுமென்று எண்ணுகிறாள்.

தன்னுடைய துணை ஒரு வீரனாக போர்க்களத்தில் உயிர் நீத்தது ஒரு வகையில் அவளுக்கு பெருமிதத்தைத் தருகிறது. ஒரு தேசக்கடமையை, பொருத்தமான சந்தர்ப்பத்தில் அவன் செய்த பணியை, ஒரு போராட்டத்தில் அவன் செய்த தியாகத்தை அவள் பெருமையுடன் நினைக்கிறாள். இந்தப் பெருமிதம் அவளை எல்லாவகையான துயரங்கள், துன்பங்களிலிருந்தும் மீட்கிறது:



புதிய எழுச்சியுடன் அவளை முன்கர வைக்கிறது.

தன்னுடைய பிள்ளைகள் தந்தையின் செயலால் என்றைக்கும் பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கலாம் என்பது அவளுக்கு எல்லாக் கஸ்ரங்களையும் எதிர்கொள்ளக் கூடிய மனப்பக்குவத்தைக் கொடுக்கிறது. இன்றைய வாழ்க்கையை எதிர்கொள்ளும் சிரமம் பெரிதுதான். துணையற்ற தனிமை கொடுமைதான். தந்தையை இழந்த பிள்ளைகளின் வாழ்க்கை சிரமம்தான். இந்த எல்லாப் பிரச்சினைகளையும் அவளும் அவளுடைய பிள்ளைகளும் அந்த வீரனின் தியாகத்துக்காக எதிர்கொள்கிறார்கள். அவன் செய்த பங்களிப்புக்கு நிகராக அவர்களுடைய தியாகமும் இருக்கிறது. அவள் போர்க்களத்தில் தன்னை ஈந்தான். அவர்கள் போர்க்களத்துக்கு அவனை ஈந்தார்கள்.

வரலாறு இத்தகைய அரிய செயல்களாலும் தியாகத்தாலும் இவ்வாறான பெறுமதிமிக்க உணர்வுகளாலும் முன்னகர்கிறது.

இந்த உணர்வைத் தந்தது எது? வாழ்வை அதன் அருகிருந்து உண்மையாகப் பார்த்ததும் நேசித்ததுமே. வரலாற்றை உணர்வோடும் அறிவோடும் அனுபவபூர்வமாக உணர்ந்ததே.

ஒருபக்கம், வன்னிமீது போரைத் திணித்த அரசு. கிராமங்களையும் பட்டினங்களையும் ஆக்கிரமித்த இராணுவம். மறுபக்கம் பொருளாதாரத் தடையும் இறுக்கங்களும் நெருக்கடிகளும்.

இதெல்லாம் மக்களிடத்தில் கொதிப்பை உண்டாக்கியிருந்தது. முடிவற்ற விதமாக ஓய்வின்றித் தொடர்ந்த இராணுவத் தாக்குதல்களில் போராளிகள் சந்தித்த நெருக்கடிகளையும் சிரமங்களையும் உணர்ந்த மக்கள் எதிரிமீதான கோபத்துக்கு பதிலடி கொடுக்கத் தயாரானார்கள்.

*****

உண்மையில் ஒரு மக்கள் போராட்டத்துக்கான அடிமனக் கிளர்ச்சியை உருவாக்குவது. ஒடுக்குமுறையாளர்களே. வரலாறு எத்தனை தடவைதான் இதைத் திரும்பத் திரும்பச் சொன்னாலும் ஒடுக்குமுறையாளர்களுக்கு இது புரிவதில்லை. மக்களின் எழுச்சி மனதைப் புரிந்துகொண்டு அதை போராட்டத்துக்கான வடிவத்துக்கு மாற்றினார் தலைவர் பிரபாகரன் அவர்கள். அவருடைய மதிநுட்பமான இந்தச் செயல் எல்லைப் படையாக உருவாகியது.

எதிரிப்படைகள் மேலும் முன்னகராது தடுப்பதில் எல்லைப் படை போராளிகளுடன் இணைந்து போராடியது. இராணுவம் உள் நுழைந்து விடாதவாறு எல்லைப் படை முன்னரங்கம் நீளவும் காவல் நின்றது.

அப்போது வயது வேறுபாடின்றி, பால் வேறுபாடின்றி எல்லோரும் போர்ப் பயிற்சியெடுக்கத் திரண்ட காட்சி எவரையும் சிலிர்க்க வைக்கும். அதுவொரு அதிசயம் போல, ஒவ்வொரு பயிற்சித் திடலிலும் சனத்திரள் திரண்டிருந்தது. குடும்பம், பொறுப்புகள், மனைவி, பிள்ளைகள், அவர்களுடைய பாதுகாப்பு, அவர்களுக்கான உதவி, ஆதரவு என எதையும் பொருட்படுத்தாமல் எதிரிக்குப் பதில் கொடுக்க வேண்டும் என்ற தவிப்பு மேலெழுந்திருந்த கணங்களவை. காடுகளில், வீதியோரங்களில் துயிலாத கண்களோடு, ஓய்வின்றிக் காவலரண்களிலிருக்கும் போராளிகளுக்குத் தோள் கொடுக்க வேண்டுமென்ற உணர்வின் உந்துதலுக்கு வழிதேடிய வேளையது.

தங்களின் வாழ்வு ஒரு தூசுக்குச் சமம். தேச விடுதலையே பெரிது, அதுவே வாழ்வின் பொருள் பொதிந்த வழியும் வாழ்க்கையுமென அதற்காகப் போராடத் துணிந்த பொழுதுகள் அவை.

ஒரு பக்கம் இடப்பெயர்வு. அகதி வாழ்க்கை. நோயும் பிணியும் சூழ்ந்த அவல வாழ்க்கை. பிறந்த ஊரில், சொந்த வீட்டில் வாழ முடியாத கொடுமை. பசிக்கும் வயிற்றுக்குத் தீனிபோட முடியாது உழைப்பின்றி, வருமானமின்றிய பழி வாழ்க்கையை எத்தனை நாளுக்குத்தான் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்?

இந்தத் துன்பியல் தொடருக்கு ஒரு முடிவுகாண தினந்தினம் ஆயிரக்கணக்கில் பயிற்சித் திடலிலும் போர்க்களங்களிலும் திரண்ட எல்லைப்படை வீரர், போராளிகளுக்குப் புதிய உற்சாகத்தைத் தந்தனர். புதிய வேகத்தைத் தந்தனர். மேலும் நம்பிக்கையைத் தந்தனர். பின்தள வேலைகளில் தொடங்கி போர்முனை (களம்) வரையில் எல்லைப் படை வீரரின் பங்களிப்புகள் பெருகியது.

ஜெயசிக்குறுவின் பின் விரிந்த இராணுவ நடவடிக்கைகளை முறியடிப்பதில் எல்லைப்படை வீரர்களின் தீரமிகு செயல்கள் இருந்தன. போர்க்கள அனுபவத்தைப் பெறும் களமாகவும் அது அமைந்தது. பெருகிவந்த இராணுவத் தொடரை கட்டுப்படுத்தவும் கண்காணிக்கவும் கூட எல்லைப்படை மிகப்பெரும் பங்காற்றியது. ஒரு மக்கள் படையின் சிறப்பம்சத்துடன் எல்லைப்படை ஆற்றிய பங்களிப்புகள் நெருக்கடிக் காலத்தை வெல்வதற்கான ஆயுதமாகவும் கவசமாகவுமிருந்தது.

தேசப்பற்றும், விடுதலை வேட்கையுமிணைந்த புதிய கட்டுமானமாகக் குறுகிய காலத்தில் வளர்ச்சிபெற்ற எல்லைப்படை, தலைவரின் கரத்தைப் பலப்படுத்தியது. போர்க்களத்தின் போக்கையும் நிலைமைகளையும் மாற்றி புதிய சவால்களை எதிர்கொள்ளக் காத்திருந்தது. அப்போது தலைவர் வகுத்திருந்த புதிய தாக்குதல் திட்டம் 'ஓயாத அலைகள் - 03'. எல்லைப்படையின் வளர்ச்சியையும் அதன் போரிடுந் திறனையும் மதிப்பிட்ட தலைவர், ஓயாத அலைகள் மூன்றின்போது எல்லைப்படையை மிகக் காத்திரமான முறையில் பயன்படுத்தத் திட்டமிட்டார். அந்தத் திட்டத்தை மிகச் சிறப்பாக, வெற்றியை நோக்கிச் செய்துமுடித்தது எல்லைப்படை.

மக்கள் படையொன்று பலம் பெற்றிருக்கும்போது எந்தப் பலமான எதிரியாலும் ஆக்கிரமிப்பையோ, ஒடுக்குமுறையையோ செய்யமுடியாது என்பதை எல்லைப் படை நிரூபித்தது.

வியட்நாம் சீன விடுதலைப் போரில் மக்களாற்றிய பங்களிப்புகளுக்கு நிகராக எமது சூழலில் எல்லைப்படையின் போர்ப்பங்கேற்பிருந்தது. நெருக்கடியை உணர்ந்து, அதனை முறியடிப்பதற்காக ஒன்று திரண்ட அந்த உணர்வு விடுதலையை விரும்புகின்ற மக்களின் அடையாளத்தைத் வெளிக்காட்டியது.

விடுதலையுணர்வு ஒருவருக்கு ஏற்பட்டு விட்டதென்றால், அதைநோக்கிய பயணத்தில் ஒருவர் கலந்துவிட்டாரென்றால் ஏனைய துன்ப துயரங்களெல்லாம் அவருக்குச் சிறிதாகிவிடும். எல்லைப்படையில் இணைந்திருந்த வீரர்களின் மனவுணர்வு விடுதலையில் மையங்கொண்டிருந்தது. வீடு, குடும்பம் என்ற பொறுப்புகள் அவர்களுக்கிருந்த போதும் அதை மீறியிருந்த விடுதலையுணர்வு அவர்களை போர்க்களத்தில் போரிடும் முனைப்போடு வைத்திருந்தது.

ஜெயசிக்குறுவின் முறியடிப்புச் சமரிலும் தற்காப்புச் சமரிலும் போராளிகளுக்குத் துணையாக நிற்கையில் கண்களால் அந்தக் களத்தைப் பார்த்த, போராளிகளின் பாடுகளைக்கண்ட மக்கள் படைக்கு தொடர்ந்து இறுதி வெற்றிவரை போரிடுவதென்ற முடிவுக்கு வருவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. ஏனெனில், வருடக் கணக்காகத் தொடர்ந்த ஜெயசிக்குறுவை எல்லா முனைகளிலும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்த எதிர்கொள்ளலில் ஓய்வின்றிப் போராளிகள் ஈடுபடவேண்டியிருந்தது. இது அசாதாரணமானதொரு சூழல். அது மிக அசாதாரணமானதொரு வாழ்க்கை. அந்த வாழ்க்கையைப் பார்த்த பின் எவர்தான் அதனோடிணையாதிருக்க முடியும்?

வன்னியின் தென் பகுதியை ஓயாத அலைகள் மூன்றின் தொடக்கம் மீட்டது. இந்த மீட்பில் பெற்ற வெற்றி எல்லைப்படைக்கு பெருத்த மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் அளித்தது. தொடர்ந்து வன்னியின் வடபகுதியான பரந்தனிலிருந்து முகமாலை வரையான பகுதியை ஓயாத அலைகள் மூன்றின் அடுத்ததொரு கட்டம் கைப்பற்றியது. இந்தக் களத்திலும் எல்லைப்படையின் பங்களிப்பு உச்சத்திலிருந்தது. களங்களில் அனுபவம் பெறப்பெற போரிடும் திறன் எல்லைப்படைக்குக் கூடியது. இது எல்லைப்படையின் நம்பிக்கையை வலுவாக்கிற்று. தொடர்ந்து எல்லைப் படைக்குக் கிடைத்த வெற்றி அதன் போரிடும் ஆர்வத்தை கூட்டியது. போர்நிறுத்த உடன்படிக்கை வரையில் போர்க்களங்களில் எல்லைப் படை போரிடும் ஆர்வத்தோடு நின்றமை குறிப்பிடத்தக்கது.

உண்மையில் எல்லைப் படையினரின் வாழ்க்கை மிகவும் வித்தியாசமானது. ஒருபக்கம் நேரடியாகவே அவர்களில் தங்கியிருக்கும் குடும்பம். மறுபக்கம் தீவிரமடைந்திருந்த போர்ச்சூழலும் போர்க் களமும். இரண்டு தவிர்க்கமுடியாத - அவசியமான தெரிவுகளுக்கிடையில் தேசப்பணியை தேர்ந்தது எல்லைப் படைவீரரின் பெறுமதிக்குரிய உணர்வே. தமது குடும்பத்தின் எதிர்காலத்தை தேசத்திடம் கையளித்து விட்டு போர்க்களத்தில் அவர்கள் இறங்கியமையை நாம் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டியதாகும்.

குறுகிய காலத்தில் எல்லைப்படை சாதித்த விடயங்கள் வரலாற்றில் முக்கியமானவை. இந்தச் சாதனைச் செயல்களில் 280 எல்லைப்படை மாவீரர்கள் வீரச்சாவடைந்தார்கள். களத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட இந்த வீரர்களின் கடைசிக் கணத்தின் உணர்வுகள் எப்படியிருந்திருக்கும்?

வன்னியை முற்றுகையிட்டிருந்த படையை விரட்ட வன்னியிலிருந்த மக்கள் திரண்டிருந்ததுபோல தமிழீழமெங்குமுள்ள படையை வெளியேற்ற முழுத் தமிழ்மக்களும் முயலவேண்டும். முயன்றால் நாங்கள் பெற்ற வெற்றிபோல நிச்சயம் முழு வெற்றியைப் பெறலாம் என்றார் எல்லைப்படை வீரரொருவர். இந்த உணர்வும் உண்மையும்தான் எல்லா வீரரிடமும் இருந்தது.

ஒருபக்கம் தேசத்தையும் ஒருபக்கம் குடும்பத்தையும் நினைத்தபடி விடுதலைக்காக தம்முயிரை ஈந்த வீரத் தியாகிகளின் நினைவோடு வரலாறு நகர்கிறது. ■



> **"அப்போது வயது வேறுபாடின்றி, பால் வேறுபாடின்றி எல்லோரும் போர்ப் பயிற்சியெடுக்கத் திரண்ட காட்சி எவரையும் சிலிர்க்க வைக்கும். அதுவொரு அதிசயம்போல, ஒவ்வொரு பயிற்சித்திடலும் சனத்திரள் திரண்டிருந்தது. குடும்பம், பொறுப்புகள், மனைவி, பிள்ளைகள், அவர்களுடைய பாதுகாப்பு, அவர்களுக்கான உதவி, ஆதரவு என எதையும் பொருட்படுத்தாமல் எதிரிக்குப் பதில் கொடுக்கவேண்டும் என்ற தவிப்பு மேலெழுந்திருந்த கணங்களவை. காடுகளில், வீதியோரங்களில் துயிலாத கண்களோடு, ஓய்வின்றி காவலரண்களிலிருக்கும் போராளிகளுக்குத் தோள்கொடுக்க வேண்டுமென்ற உணர்வின் உந்துதலுக்கு வழிதேடிய வேளையது."**

# மாவீரர் நாள் போஸ்ரர்களும் பிற வெளியீடுகளும்

**"நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும், நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும், மாண்ட வீரர் கனவு பலிக்கும், மகிழ்ச்சிக் கடலில் தமிழ்மண் குளிக்கும்."**

- தமிழீழ எழுச்சிப்பாடல் வரிகள். மாவீரர் நாள் போஸ்ரர்கள் பலவற்றில் இவ்வரிகளைக் காணலாம் -

ஒரு விற்பனைப்பொருள், நடக்கவிருக்கும் நிகழ்ச்சி அல்லது வரவிருக்கும் முக்கிய தினம் பற்றிய செய்தியைப் பொது மக்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கும் அச்சு ஊடகம் என்று போஸ்ரர் (POSTER) வரையறை செய்யப்படுகிறது. இவ்வாங்கிலச் சொல்லிற்கு பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள விளம்பரங்கள், சுவரொட்டிகள் என்று தமிழில் விளக்கம் தரப்படுகிறது. போஸ்ரர், விளம்பரம் என்ற நிலையைக் கடந்து தனியொரு கலைப் பிரிவாக இன்று இயங்குகிறது. பரந்துபட்ட ஓவியக் கலையின் ஒரு பகுதியாகவும் போஸ்ரர் கலை கணிப்பிடப்படுகிறது. பொதுவாகச் சுவரொட்டிகள் உயிரற்றவையாகவும், தற்காலிகமானவையாகவும் இடம்பெறுகின்றன. போஸ்ரர்கள் மூச்சும் வீச்சும் கொண்ட கலை வடிவமாகத் திகழ்கின்றன.

போஸ்ரர் என்ற சொல்லிற்கு அர்த்தமுள்ள தமிழ்ச்சொல் உருவாகும் வரை நாம் போஸ்ரர் என்று கூறுவோம். போஸ்ரர் பற்றிய ஆரம்ப வரலாறு கிடைக்கவில்லை, நிட்சயம் அது அச்சுக்கலையுடன் தொடர்புடையது என்பதை மாத்திரம் கூறிவைக்கிறோம். ஆகக் குறைந்தளவு சொற்களைப் பயன்படுத்தியவாறு படத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது போஸ்ரரின் இயல்பு. பார்வையாளர்மீது கூடுதல் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் போஸ்ரர் படம் தீட்டப்பட வேண்டும். படத்திலும் கூடிய கவன ஈர்ப்பைப் போஸ்ரரில் பொறிக்கப்பட்ட சொற்கள் பெறுமாயின் அது போஸ்ரரின் இலக்கை மழுங்கடித்துவிடும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு காலத்தில் மேற்கு நாடுகளில் தொழிற்புரட்சி ஆரம்பித்தபோது தொழிற்சாலை ஆக்கங்களைச் சந்தைப் படுத்துவதற்காக நவீன போஸ்ரர் கலை உருவாகியது. பலவர்ண லிதோகிராபி அச்சுக்கலையின் தோற்றம் போஸ்ரர்களின் தரத்தையும் கவர்ச்சியையும் தூக்கி நிறுத்தின. பிரான்சு நாட்டு ஓவியர் ஹென்றி தி தூலொஸ் லோத்றெக் (HENRE DE TOULOUSE - LAUTREC 1864-1901) தீட்டிய போஸ்ரர்கள் கலை உலகில் நிலையான இடம்பிடித்துள்ளன. ஜேன் அவ்றில் என்ற பிரெஞ்சுப் பாடகியை அவர் போஸ்ரர் ஓவியமாகத் தீட்டி தனக்கும் அந்தப் பெண்ணுக்கும் அழியாப் புகழ் தேடியுள்ளார்.

முதலாம் உலகப்போர் காலத்தில் படைக்கு ஆட்சேர்க்கும் போஸ்ரர்கள் மேற்கு நாடுகளில் வெளியிடப்பட்டன. அரும்பொருள் காட்சியகங்களில் அவற்றில் சிலவற்றை இன்றும் பார்வையிடலாம். 1917ஆம் ஆண்டில் அமெரிக்க இராணுவம் வெளியிட்ட போஸ்ரர் பற்றி இன்றும் பேசப்படுகிறது. இதில் மூன்று வண்ணங்கள் - கறுப்பு, சிவப்பு, வெள்ளை என்பன மாத்திரம் உள்ளன. போஸ்ரரைப் படிப்பவர்களை நோக்கி அமெரிக்க அரசை உருவகப்படுத்தும் 'சாம் மாமாவின்' (UNCLE SAM) உருவம் சுட்டுவிரலைக் காட்டியபடி 'அமெரிக்க இராணுவத்திற்கு (நான்) உன்னை வா என்கிறேன்' என்கிறது. இந்தச் செய்தி பெரிய கொட்டை எழுத்துக்களிலும், அண்மையிலுள்ள ஆட்சேர்ப்பு மையம் என்ற சொற்கள் சிறிய எழுத்துக்களிலும் அதில் காணப்படுகின்றன. ஒரு உருவமும் பத்து ஆங்கிலச் சொற்களும் கொண்ட இப்போஸ்ரர் போஸ்ரர் ஓவியர்களுக்கு வழிகாட்டியாக அமைகிறது.

பொதுவுடமை நாடுகளிலும் சர்வாதிகார ஆட்சி நிலவும் நாடுகளிலும் மக்கள் அதிகமாக நடமாடும் இடங்களில் பிரசாரப் போஸ்ரர்கள் நிரந்தரமாக வைக்கப்படுகின்றன. முன்னாள் சோவியத் ஒன்றியம், செஞ்சீனா ஆகியவற்றில் இந்த வழமை இருப்பது கண்கூடு. எளிதாகப் பார்க்கக்கூடிய உயரத்தில் இப்போஸ்ரர்கள் பொருத்தப்படுவதால் அவற்றைப் பார்க்காமல் செல்வது கடினமாக இருக்கும். இதை ஒருவகை மூளைச்சலவை என்றும் சொல்லலாம். 'உலகத் தொழிலாளர்களே ஒன்றிணையுங்கள், கொமியூனிசத் தலைமையைப் போற்றுங்கள்', 'தேசிய நலனுக்காகச் சேமியுங்கள்', 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' போன்ற செய்திகள் இப்போஸ்ரர்களில் பொதுவாகக் காணப்படுகின்றன. மக்கள் சமுதாயத்தை ஒன்றிணைக்கும் வலு புகைப்படத்திற்கும் போஸ்ரர்களுக்கும் இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்த நோக்கில் போஸ்ரர்கள் 'சமுதாயச் சித்திரம்' (SOCIAL ARTS) என்று அழைக்கப்படுகின்றன.

ஆசியாவில் எவ்வாறு விளம்பரம் செய்கிறார்கள் என்ற ஆய்வுநூலில் ஆசியாவின் 90 நாடுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. (HOW ASIA ADVERTIES BY JIM AITCHISON) இந்த நாடுகள் செய்யும் விளம்பரங்களின் தரம், கைக்கொள்ளும் வழிமுறைகள், சர்வதேச பாணிகளுடன் ஒப்பீடு போன்றவை இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. "சிறிலங்காவில் செய்யப்படும் வர்த்தக விளம்பரங்களில் ஒன்று மாத்திரம் உலக தரத்திற்கு இருக்கிறது. சிறிலங்கா இராணுவத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் சிறப்புச் செய்தி பற்றிய பிரசார விளம்பரங்கள்தான் அந்த ஒன்றாகும்" இராணுவம் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாகச் செய்யும் பிரசாரத்திற்கு வலுவூட்டும் விதத்தில் அது மக்கள் பார்வைக்கும் பொது இடங்களில் வைக்கும் பிரசாரப் போஸ்ரர்கள் இடம்பெறுகின்றன. சிறிலங்காவில் உள்நாட்டுப்போர் நடந்த காலத்தில் சிங்கள இராணுவத்திற்காக ஒரு விளம்பர நிறுவனத்தால் நடத்தப்பட்ட பலதரப்பட்ட பிரசாரம் இராணுவத்தின் விம்பத்தை உயர்த்தியதாக மேற்கூறிய நூல் கருத்துத் தெரிவிக்கின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் கிரமந் தவறாது முக்கிய தினங்களில் வெளியிடும் போஸ்ரர்கள் அனைத்துலக மட்டத்தில் கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளன. எதிர்வரும் நிகழ்ச்சியை பொதுமக்களுக்கு இப்போஸ்ரர்கள் நினைவுறுத்து கின்றன என்பது உண்மையே. ஆனால் மிகப் பெரியதொரு இன்னுமோர் விளக்கம் இதுபற்றிக் கூறப்படுகிறது. விடுதலைப்புலிகள் நடாத்தும் மக்கள் மயப்படுத்தப்பட்ட போரில் மக்கள் யாபேரையும் உள்வாங்கும் நோக்கத்துடனும் இதற்கான கருத்தூட்டலுக்குமாகவே இவை வெளியிடப்படுகின்றன. விடுதலைப்புலிகள் தலைமையில் தமிழீழ மக்கள் நடாத்தும் விடுதலைப்போரின் முக்கிய குறியீடாக இப்போஸ்ரர்கள் கணிப்பிடப்படுகின்றன. மேலும் மக்களிடையே கலை உணர்வை ஏற்படுத்தும் நோக்கையும் அவை கொண்டுள்ளன. போர்ச் சூழலிலும் எம்மத்தியில் கலை வளரமுடியும் என்பதற்குச் சாட்சியமாக அவை அமைகின்றன. மக்கள் உணர்வுகளைச் சரிவரப் புரிந்துகொண்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் தாம் வெளியிடும் போஸ்ரர்கள் ஊடாக உணர்வுக்கு உருவமும் கலை வடிவமும் கொடுத்துள்ளனர்.




327 மாவீரர்களின் நினைவாக 1986 யூலை, 25இல் பொதுவாக வெளியிடப்பட்டது

தமது இத்தகைய வெளியீடுகள் மூலம் தமிழீழத்தில் புதியதொரு மரபைப் புலிகள் உருவாக்கியுள்ளனர். ஒவ்வொரு மரபும் ஒரு காலகட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க பொதுத் தேவைக்காகவே உருவாக்கப்படுகின்றது. கலைப் படைப்புக்களும் இந்த நியதிக்கு உட்படுகின்றன. சுருங்கக் கூறுவதாயின் ஈழத் தமிழினத்தின் பொதுத் தேவைக்காகப் புலிகள் அவற்றை உருவாக்கியுள்ளனர். இதை THE COLLECTIVE EXPRESSION OF A PEOPLE DURING A PARTICULAR PERIOD IN HISTORY என்று ஆய்வாளர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர். அதாவது ஒரு வரலாற்றுக் காலகட்டத்தில் ஒரு மக்கள் இனத்தின் வெளிப்பாடாக அவை இடம்பெறுகின்றன. அவற்றை யார் தீட்டினார்கள் அல்லது வடிவமைத்தார்கள் என்று பார்க்க வேண்டியதில்லை. எந்த இன மக்கள் வெளியிட்டார்கள், எப்போது, எதற்காக என்பதுதான் முக்கியம்.

இன்று போஸ்ரர் ஒரு தனித்துவமான கலைவடிவமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. போஸ்ரர் கலையின் சாரம் யாதெனில் அதை பார்ப்பவர்களுக்கு உடனடிப் புரிதல் ஏற்படுகின்றது. தமது தேவைகளுக்காகப் புலிகள் அதைத் தெரிவு செய்ததற்கு இது முக்கிய காரணமாக இருக்கலாம். புலிகளுடைய போஸ்ரர்கள் தத்ரூப ஓவியம் (REALISTIC ART) அல்ல. எதற்காக அது அச்சிடப்படுகிறதோ அந்த இலக்கை எட்டுவதற்காகவே அது வரையப்படுகிறது. போஸ்ரர் ஒரு வாய்பேசாத தொடர்பு சாதனம் (NON ORAL COMMUNICATION TOOL). அதே சமயத்தில் போஸ்ரர் ஒரு சர்வதேசிய மொழி. முக்கிய நிகழ்ச்சியின் சாரத்தை பிழிந்து குறைந்தளவு சொற்களையும் கூடுதலான குறியீட்டுப் படங்களையும் இணைத்துப் புலிகளுடைய போஸ்ரர்கள் உருவாக்கப்படுகின்றன. நவீன ஓவியம்போல் போஸ்ரர்களில் மர்மமோ, புதிரோ இல்லை. பார்ப்பவர்களுக்கு ஏற்கனவே தெரிந்த அல்லது சுலபமாக ஊகிக்கக்கூடிய படிமத்தை அல்லது நிகழ்ச்சியை புலிகளின் வெளியீடுகள் கொண்டிருக்கின்றன.

*போஸ்ரர் ஒரு வாய்பேசாத தொடர்பு சாதனம்* (NON ORAL COMMUNICATION TOOL). *அதே சமயத்தில் போஸ்ரர் ஒரு சர்வதேசிய மொழி. முக்கிய நிகழ்ச்சியின் சாரத்தைப் பிழிந்து குறைந்தளவு சொற்களையும் கூடுதலான குறியீட்டுப் படங்களையும் இணைத்துப் புலிகளுடைய போஸ்ரர்கள் உருவாக்கப்படுகின்றன. நவீன ஓவியம்போல் போஸ்ரர்களில் மர்மமோ புதிரோ இல்லை. பார்ப்பவர்களுக்கு ஏற்கனவே தெரிந்த அல்லது சுலபமாக ஊகிக்கக்கூடிய படிமத்தை அல்லது நிகழ்ச்சியை புலிகளின் வெளியீடுகள் கொண்டிருக்கின்றன.*

வருடாவருடம் கிரமம் தவறாது பின்வரும் தேசிய நிகழ்ச்சிகளைப் புலிகள் சிறப்பிக்கிறார்கள்:

1. கேணல் கிட்டு நினைவு நாள் - சனவரி 16
2. அனைத்துலகப் பெண்கள் நாள் - மார்ச்சு 05
3. அன்னை பூபதி நினைவு நாள் - ஏப்பிரல் 19
4. தமிழீழ மாணவர் நாள் - சூன் 06
5. கரும்புலிகள் நாள் - சூலை 05
6. தியாகி திலீபன் நினைவு நாள் - செப்தெம்பர் 26
7. பன்னிரு வேங்கைகள் நினைவு நாள் - ஒக்தோபர் 05
8. மாலதி, தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் - ஒக்தோபர் 10
9. மாவீரர் நாள் - நவம்பர் 27

இவற்றுள் மாவீரர் தினம் கூடுதல் முக்கியத்தும் வாய்ந்ததாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதற்கு இரு காரணங்கள் உண்டு. அன்று மாவீரர்களின் துயிலும் இல்லம் சென்று தீபம் ஏற்றும் நாள். அடுத்தது தேசியத் தலைவர் அவர்கள் நாட்டு மக்களுக்கு ஆற்றும் மாவீரர் நாள் உரை அன்று வெளியாகிறது. மிகக் கூடுதலான போஸ்ரர்கள் வெளியிடப்பட்ட தேசிய தினமாக நவம்பர் 27 இடம் பெறுகிறது. மாவீரர்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் வெளியிட்ட முதலாவது பொதுவான போஸ்ரர் 1986 சூலை 25ஆம் நாள் வெளிவந்தது. பெரியதொரு கடதாசியின் மேற்புறத்தில் நீலவண்ணமும் அதன்மேல் சிவப்பு எழுத்துக்களில் "தமிழீழ விடிவிற்காக இன்றுவரை தம்மை அர்ப்பணித்துக்கொண்ட எமது இயக்கத்தின் தியாகச் சுடர்கள் முன்னூற்றி இருபத்தியேழு" என்ற வாசகம் காணப்படுகிறது. இதே போஸ்ரரில் நடு நாயகமாகப் பெரியளவில் தோளில் தொங்கும் ஆயுதத்துடன் ஒரு புலிவீரன் ஒவ்வொரு கையில் ஒரு சிறுவனையும் சிறுமியையும் அழைத்துச்செல்லும் காட்சி கறுப்பு மையால் தீட்டப்பட்டுள்ளது. போஸ்ரரின் அடிப்பகுதியில் பெரிய எழுத்துக்களில் "இது அழுவதற்காக அமைக்கப்பட்ட சமாதியல்ல உறுதியின் உறைவிடம் இது" என்ற உணர்ச்சி பொங்கும் வாசகம் 327 என்ற பெரிய வெள்ளை வண்ண எண்ணின் மேல் பொறிக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களின் எண்ணிக்கையை புலிகள் ஒருபோதும் குறைத்தோ கூட்டியோ வெளியிட்டதில்லை. அவர்கள் செய்த தியாகத்தை உரியமுறையில் புலிகள் கௌவித்து வருகின்றனர். இது சம்பந்தமாக திகதியிடப் படாத போஸ்ரர் ஒன்றை வெள்ளைக் கடதாசியில் நீல எழுத்துக்களில் தேசியத் தலைவரின் படம் மற்றும் வாசகத்துடன் புலிகள்




1986ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளால் முதன்முதலாக வெளியிடப்பட்ட போஸ்ரர்

# மாவீரர் நாள் போஸ்ரர்களும் பிற வெளியீடுகளும்

**"நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும், நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும், மாண்ட வீரர் கனவு பலிக்கும், மகிழ்ச்சிக் கடலில் தமிழ்மண் குளிக்கும்."**

- தமிழீழ எழுச்சிப்பாடல் வரிகள்.

மாவீரர் நாள் போஸ்ரர்கள் பலவற்றில் இவ்வரிகளைக் காணலாம் -

ஒரு விற்பனைப்பொருள், நடக்க விருக்கும் நிகழ்ச்சி அல்லது வரவிருக்கும் முக்கிய தினம் பற்றிய செய்தியைப் பொது மக்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கும் அச்சு ஊடகம் என்று போஸ்ரர் (POSTER) வரையறை செய்யப்படுகிறது. இவ்வாங்கிலச் சொல்லிற்கு பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள விளம்பரங்கள், சுவரொட்டிகள் என்று தமிழில் விளக்கம் தரப்படுகிறது. போஸ்ரர், விளம்பரம் என்ற நிலையைக் கடந்து தனியொரு கலைப் பிரிவாக இன்று இயங்குகிறது. பரந்துபட்ட ஓவியக் கலையின் ஒரு பகுதியாகவும் போஸ்ரர் கலை கணிப்பிடப்படுகிறது. பொதுவாகச் சுவரொட்டிகள் உயிரற்றவையாகவும், தற்காலிகமானவையாகவும் இடம்பெறுகின்றன. போஸ்ரர்கள் மூச்சும் வீச்சும் கொண்ட கலை வடிவமாகத் திகழ்கின்றன.


போஸ்ரர் என்ற சொல்லிற்கு அர்த்தமுள்ள தமிழ்ச்சொல் உருவாகும் வரை நாம் போஸ்ரர் என்று கூறுவோம். போஸ்ரர் பற்றிய ஆரம்ப வரலாறு கிடைக்கவில்லை, நிட்சயம் அது அச்சுக்கலையுடன் தொடர்புடையது என்பதை மாத்திரம் கூறிவைக்கிறோம். ஆகக் குறைந்தளவு சொற்களைப் பயன்படுத்தியவாறு படத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது போஸ்ரின் இயல்பு. பார்வையாளர்மீது கூடுதல் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் போஸ்ரர் படம் தீட்டப்பட வேண்டும். படத்திலும் கூடிய கவன ஈர்ப்பைப் போஸ்ரரில் பொறிக்கப்பட்ட சொற்கள் பெறுமாயின் அது போஸ்ரரின் இலக்கை மழுங்கடித்துவிடும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு காலத்தில் மேற்கு நாடுகளில் தொழிற்புரட்சி ஆரம்பித்தபோது தொழிற்சாலை ஆக்கங்களைச் சந்தைப் படுத்துவதற்காக நவீன போஸ்ரர் கலை உருவாகியது. பலவர்ண லிதோகிராபி அச்சுக்கலையின் தோற்றம் போஸ்ரர்களின் தரத்தையும் கவர்ச்சியையும் தூக்கி நிறுத்தின. பிரான்சு நாட்டு ஓவியர் ஹென்றி தி தூலொஸ் லோத்றெக் (HENRE DE TOULOUSE - LAUTREC 1864-1901) தீட்டிய போஸ்ரர்கள் கலை உலகில் நிலையான இடம்பிடித்துள்ளன. ஜேன் அவ்றில் என்ற பிரெஞ்சுப் பாடகியை அவர் போஸ்ரர் ஓவியமாகத் தீட்டி தனக்கும் அந்தப் பெண்ணுக்கும் அழியாப் புகழ் தேடியுள்ளார்.

முதலாம் உலகப்போர் காலத்தில் படைக்கு ஆட்சேர்க்கும் போஸ்ரர்கள் மேற்கு நாடுகளில் வெளியிடப்பட்டன. அரும்பொருள் காட்சியகங்களில் அவற்றில் சிலவற்றை இன்றும் பார்வையிடலாம். 1917ஆம் ஆண்டில் அமெரிக்க இராணுவம் வெளியிட்ட போஸ்ரர் பற்றி இன்றும் பேசப்படுகிறது. இதில் மூன்று வண்ணங்கள் - கறுப்பு, சிவப்பு, வெள்ளை என்பன மாத்திரம் உள்ளன. போஸ்ரரைப் படிப்பவர்களை நோக்கி அமெரிக்க அரசை உருவகப்படுத்தும் 'சாம் மாமா வின்' (UNCLE SAM) உருவம் சுட்டுவிரலைக் காட்டிய படி 'அமெரிக்க இராணுவத்திற்கு (நான்) உன்னை வா என்கிறேன்' என்கிறது. இந்தச் செய்தி பெரிய கொட்டை எழுத்துக்களிலும், அண்மையிலுள்ள ஆட்சேர்ப்பு மையம் என்ற சொற்கள் சிறிய எழுத்துக்களிலும் அதில் காணப்படுகின்றன. ஒரு உருவமும் பத்து ஆங்கிலச் சொற்களும் கொண்ட இப்போஸ்ரர் போஸ்ரர் ஓவியர்களுக்கு வழிகாட்டியாக அமைகிறது.

பொதுவுடமை நாடுகளிலும் சர்வாதிகார ஆட்சி நிலவும் நாடுகளிலும் மக்கள் அதிகமாக நடமாடும் இடங்களில் பிரசாரப் போஸ்ரர்கள் நிரந்தரமாக வைக்கப்படுகின்றன. முன்னாள் சோவியத் ஒன்றியம், செஞ்சீனா ஆகியவற்றில் இந்த வழமை இருப்பது கண்கூடு. எளிதாகப் பார்க்கக்கூடிய உயரத்தில் இப்போஸ்ரர்கள் பொருத்தப்படுவதால் அவற்றைப் பார்க்காமல் செல்வது கடினமாக இருக்கும். இதை ஒருவகை மூளைச்சலவை என்றும் சொல்லலாம். 'உலகத் தொழிலாளர்களே ஒன்றிணையுங்கள், கொமியூனிசத் தலைமையைப் போற்றுங்கள்', 'தேசிய நலனுக்காகச் சேமியுங்கள்', 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' போன்ற செய்திகள் இப்போஸ்ரர்களில் பொதுவாகக் காணப்படுகின்றன. மக்கள் சமுதாயத்தை ஒன்றிணைக்கும் வலு புகைப்படத்திற்கும் போஸ்ரர்களுக்கும் இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்த நோக்கில் போஸ்ரர்கள் 'சமுதாயச் சித்திரம்' (SOCIAL ARTS) என்று அழைக்கப்படுகின்றன.

ஆசியாவில் எவ்வாறு விளம்பரம் செய்கிறார்கள் என்ற ஆய்வுநூலில் ஆசியாவின் 90 நாடுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. (HOW ASIA ADVERTIES BY JIM AITCHISON) இந்த நாடுகள் செய்யும் விளம்பரங்களின் தரம், கைக்கொள்ளும் வழிமுறைகள், சர்வதேச பாணிகளுடன் ஒப்பீடு போன்றவை இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. "சிறிலங்காவில் செய்யப்படும் வர்த்தக விளம்பரங்களில் ஒன்று மாத்திரம் உலக தரத்திற்கு இருக்கிறது. சிறிலங்கா இராணுவத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் சிறப்புச் செய்தி பற்றிய பிரசார விளம்பரங்கள்தான் அந்த ஒன்றாகும்" இராணுவம் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாகச் செய்யும் பிரசாரத்திற்கு வலுவூட்டும் விதத்தில் அது மக்கள் பார்வைக்கும் பொது இடங்களில் வைக்கும் பிரசாரப் போஸ்ரர்கள் இடம்பெறுகின்றன. சிறிலங்காவில் உள்நாட்டுப்போர் நடந்த காலத்தில் சிங்கள இராணுவத்திற்காக ஒரு விளம்பர நிறுவனத்தால் நடத்தப்பட்ட பலதரப்பட்ட பிரசாரம் இராணுவத்தின் விம்பத்தை உயர்த்தியதாக மேற்கூறிய நூல் கருத்துத் தெரிவிக்கின்றது.




1986ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளால் முதன்முதலாக வெளியிடப்பட்ட போஸ்ரர்

தமிழீழ விடுதலைப்புலிகள் கிரமந்தவறாது முக்கிய தினங்களில் வெளியிடும் போஸ்ரர்கள் அனைத்துலக மட்டத்தில் கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளன. எதிர்வரும் நிகழ்ச்சியை பொதுமக்களுக்கு இப்போஸ்ரர்கள் நினைவுறுத்து கின்றன என்பது உண்மையே. ஆனால் மிகப் பெரியதொரு இன்னுமோர் விளக்கம் இதுபற்றிக் கூறப்படுகிறது. விடுதலைப்புலிகள் நடாத்தும் மக்கள் மயப்படுத்தப்பட்ட போரில் மக்கள் யாபேரையும் உள்வாங்கும் நோக்கத்துடனும் இதற்கான கருத்தூட்டலுக்குமாகவே இவை வெளியிடப்படுகின்றன. விடுதலைப்புலிகள் தலைமையில் தமிழீழ மக்கள் நடாத்தும் விடுதலைப்போரின் முக்கிய குறியீடாக இப்போஸ்ரர்கள் கணிப்பிடப்படுகின்றன. மேலும் மக்களிடையே கலை உணர்வை ஏற்படுத்தும் நோக்கையும் அவை கொண்டுள்ளன. போர்ச் சூழலிலும் எம்மத்தியில் கலை வளரமுடியும் என்பதற்குச் சாட்சியமாக அவை அமைகின்றன. மக்கள் உணர்வுகளைச் சரிவரப் புரிந்துகொண்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் தாம் வெளியிடும் போஸ்ரர்கள் ஊடாக உணர்வுக்கு உருவமும் கலை வடிவமும் கொடுத்துள்ளனர்.

தமது இத்தகைய வெளியீடுகள் மூலம் தமிழீழத்தில் புதிய தொரு மரபைப் புலிகள் உருவாக்கியுள்ளனர். ஒவ்வொரு மரபும் ஒரு காலகட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க பொதுத் தேவைக்காகவே உருவாக்கப்படுகின்றது. கலைப் படைப்புக்களும் இந்த நியதிக்கு உட்படுகின்றன. சுருங்கக் கூறுவதாயின் ஈழத் தமிழினத்தின் பொதுத் தேவைகளுக்காகப் புலிகள் அவற்றை உருவாக்கியுள்ளனர். இதை THE COLLECTIVE EXPRESSION OF A PEOPLE DURING A PARTICULAR PERIOD IN HISTORY என்று ஆய்வாளர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர். அதாவது ஒரு வரலாற்றுக் காலகட்டத்தில் ஒரு மக்கள் இனத்தின் வெளிப்பாடாக அவை இடம்பெறுகின்றன. அவற்றை யார் தீட்டினார்கள் அல்லது வடிவமைத்தார்கள் என்று பார்க்க வேண்டியதில்லை. எந்த இன மக்கள் வெளியிட்டார்கள், எப்போது, எதற்காக என்பதுதான் முக்கியம்.




327 மாவீரர்களின் நினைவாக 1986 யூலை, 25இல் பொதுவாக வெளியிடப்பட்டது

***போஸ்ரர் ஒரு வாய்பேசாத தொடர்பு சாதனம் (NON ORAL COMMUNICATION TOOL). அதே சமயத்தில் போஸ்ரர் ஒரு சர்வதேசிய மொழி. முக்கிய நிகழ்ச்சியின் சாரத்தைப் பிழிந்து குறைந்தளவு சொற்களையும் கூடுதலான குறியீட்டுப் படங்களையும் இணைத்துப் புலிகளுடைய போஸ்ரர்கள் உருவாக்கப்படுகின்றன. நவீன ஓவியம்போல் போஸ்ரர்களில் மர்மமோ புதிரோ இல்லை. பார்ப்பவர்களுக்கு ஏற்கனவே தெரிந்த அல்லது சுலபமாக ஊகிக்கக்கூடிய படிமத்தை அல்லது நிகழ்ச்சியை புலிகளின் வெளியீடுகள் கொண்டிருக்கின்றன.***

இன்று போஸ்ரர் ஒரு தனித்துவமான கலைவடிவமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. போஸ்ரர் கலையின் சாரம் யாதெனில் அதை பார்ப்பவர்களுக்கு உடனடிப் புரிதல் ஏற்படுகின்றது. தமது தேவைகளுக்காகப் புலிகள் அதைத் தெரிவு செய்ததற்கு இது முக்கிய காரணமாக இருக்கலாம். புலிகளுடைய போஸ்ரர்கள் தத்ரூப ஓவியம் (REALISTIC ART) அல்ல. எதற்காக அது அச்சிடப்படுகிறதோ அந்த இலக்கை எட்டுவதற்காகவே அது வரையப்படுகிறது. போஸ்ரர் ஒரு வாய்பேசாத தொடர்பு சாதனம் (NON ORAL COMMUNICATION TOOL). அதே சமயத்தில் போஸ்ரர் ஒரு சர்வதேசிய மொழி. முக்கிய நிகழ்ச்சியின் சாரத்தை பிழிந்து குறைந்தளவு சொற்களையும் கூடுதலான குறியீட்டுப் படங்களையும் இணைத்துப் புலிகளுடைய போஸ்ரர்கள் உருவாக்கப்படுகின்றன. நவீன ஓவியம்போல் போஸ்ரர்களில் மர்மமோ, புதிரோ இல்லை. பார்ப்பவர்களுக்கு ஏற்கனவே தெரிந்த அல்லது சுலபமாக ஊகிக்கக்கூடிய படிமத்தை அல்லது நிகழ்ச்சியை புலிகளின் வெளியீடுகள் கொண்டிருக்கின்றன.

வருடாவருடம் கிரமம் தவறாது பின்வரும் தேசிய நிகழ்ச்சிகளைப் புலிகள் சிறப்பிக்கிறார்கள்:

1. கேணல் கிட்டு நினைவு நாள் - சனவரி 16
2. அனைத்துலகப் பெண்கள் நாள் - மார்ச்சு 05
3. அன்னை பூபதி நினைவு நாள் - ஏப்பிரல் 19
4. தமிழீழ மாணவர் நாள் - சூன் 06
5. கரும்புலிகள் நாள் - சூலை 05
6. தியாகி திலீபன் நினைவு நாள் - செப்தெம்பர் 26
7. பன்னிரு வேங்கைகள் நினைவு நாள் - ஒக்தோபர் 05
8. மாலதி, தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் - ஒக்தோபர் 10
9. மாவீரர் நாள் - நவம்பர் 27

இவற்றுள் மாவீரர் தினம் கூடுதல் முக்கியத்தும் வாய்ந்ததாக ஏற்றுக்கொள்ளப் படுகிறது. அதற்கு இரு காரணங்கள் உண்டு. அன்று மாவீரர்களின் துயிலும் இல்லம் சென்று தீபம் ஏற்றும் நாள். அடுத்தது தேசியத் தலைவர் அவர்கள் நாட்டு மக்களுக்கு ஆற்றும் மாவீரர் நாள் உரை அன்று வெளியாகிறது. மிகக் கூடுதலான போஸ்ரர்கள் வெளியிடப்பட்ட தேசிய தினமாக நவம்பர் 27 இடம் பெறுகிறது. மாவீரர்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் வெளியிட்ட முதலாவது பொதுவான போஸ்ரர் 1986 சூலை 25ஆம் நாள் வெளிவந்தது. பெரியதொரு கடதாசியின் மேற்புறத்தில் நீலவண்ணமும் அதன்மேல் சிவப்பு எழுத்துக்களில் "தமிழீழ விடிவிற்காக இன்றுவரை தம்மை அர்ப்பணித்துக்கொண்ட எமது இயக்கத்தின் தியாகச் சுடர்கள் முன்னூற்றி இருபத்தியேழு" என்ற வாசகம் காணப்படுகிறது. இதே போஸ்ரரில் நடு நாயகமாகப் பெரியளவில் தோளில் தொங்கும் ஆயுதத்துடன் ஒரு புலிவீரன் ஒவ்வொரு கையில் ஒரு சிறுவனையும் சிறுமியையும் அழைத்துச்செல்லும் காட்சி கறுப்பு மையால் தீட்டப்பட்டுள்ளது. போஸ்ரின் அடிப்பகுதியில் பெரிய எழுத்துக்களில் "இது அழுவதற்காக அமைக்கப்பட்ட சமாதியல்ல உறுதியின் உறைவிடம் இது" என்ற உணர்ச்சி பொங்கும் வாசகம் 327 என்ற பெரிய வெள்ளை வண்ண எண்ணின் மேல் பொறிக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களின் எண்ணிக்கையை புலிகள் ஒருபோதும் குறைத்தோ கூட்டியோ வெளியிட்டதில்லை. அவர்கள் செய்த தியாகத்தை உரியமுறையில் புலிகள் கௌரவித்து வருகின்றனர். இது சம்பந்தமாக திகதியிடப் படாத போஸ்ரர் ஒன்றை வெள்ளைக் கடதாசியில் நீல எழுத்துக்களில் தேசியத் தலைவரின் படம் மற்றும் வாசகத்துடன் புலிகள்

வெளியிட்டுள்ளனர். தேசியத் தலைவரின் வாசகம், "இந்த மண்ணின் மைந்தர்களைப் பெற்ற பெற்றோர்களே! உங்களது குழந்தைகள் சாகவில்லை, சரித்திரமாகிவிட்டார்கள்" என்கிறது. நவம்பர் 27 மாவீரர் நாளாகக் கொள்ளப்படுவதற்கு எமது விடுதலைப்போரில் களப்பலியான முதலாவது மாவீரன் லெப். சங்கர் காரணமாவர். இவர் வீரச்சாவடைந்த தினம் 1982 நவம்பர் 27. இவருடைய படம் தாங்கிய முழு அளவு போஸ்ரரை, வெளியீட்டுத் திகதி இடாமல் புலிகள் பிரசுரித்துள்ளனர். அதில் பின்வரும் வாசகம், "முற்றுகையில் முன் நின்றாய், முதற்சாவு நீ கண்டாய். லெப்டினனன்ட் சத்திய நாதன் (சங்கர்/சுரேஷ்) தோற்றம் 19.06.1961, வீரமரணம் 27.11.1982" என பொறிக்கப்பட்டுள்ளது.




தமிழீழக் கோரிக்கையை வலியுறுத்தும் மாவீரர் நாள் போஸ்ரர் 1990இல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் இலங்கைத்தீவின் வரைபடம் பொறிக்கப்பட்டுள்ளது. அதை ஆண் பெண் போராளிகள் கடப்பாரை, சுத்தி போன்ற ஆயுதம் கொண்டு இரு கூறாக்கு கிறார்கள். இக்கறுப்பு வெள்ளைப் படத்தின்கீழ் கவிதை வடிவில் இவ்வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன.

**செந்தமிழ்த் திசைகள் யாவும் சிவக்கும்,**
**இந்து மாகடலில் இன்னொரு நாடு பிறக்கும்.**

அதே வருடம் நவம்பரில் இன்னுமோர் அதிமுக்கியத்துவம் வாய்ந்த போஸ்ரர் வெளிவந்தது. இதில் வரிச்சீருடை தரித்த ஆண் பெண் போராளிகள் முன்னேறிச் செல்கிறார்கள். அவர்களுக்குப் பின்புறத்தில் எரிந்து கொண்டிருக்கும் சிதை ஒன்று காணப்படுகிறது. முன்னேறும் போராளிகளின் வலது புறத்தில் கல்லறைகள் தெரிகின்றன. வித்துடல்களை எரியூட்டும் மரபை விடுத்து கல்லறைகளைத் துயிலும் இல்லங்களில் எழுப்பும் பழந்தமிழர் மரபைக் கைக்கொள்ளும் மாற்றத்தை இது காட்டிநிற்கிறது.

மாவீரர் நாள் போஸ்ரர்களில் மிகப் பழையதும் முன்னோடியுமானதாக 1989 நவம்பர் வெளியீடு கருதப்படுகிறது. இப்போஸ்ரரில் கறுப்பு வண்ணம் ஆதிக்கம் செலுத்துகிறது. போஸ்ரரின் வலது மேற்புறத்தில் மஞ்சள் வண்ணத்தில் விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளது. இடதுபக்க கீழ்ப்புறத்தில் பச்சைவண்ண இலைகளுடன் கூடிய பெரிய சிவப்புநிற ரோஜாப்பூ படம் பொறிக்கப்பட்டுள்ளது. போஸ்ரரின் வலது பக்கத்தில் மேலிருந்து கீழாகப் பின்வரும் கவிதை வரிகள் தரப்பட்டுள்ளன.

**'களம் கண்ட தோழர்களே!**
**உலக வரலாற்று நியதியின்**
**ஒப்பற்ற சுதந்திரச் சிற்பிகளே!**
**எமது மக்களின் விடிவிற்காக**
**பயத்தை வென்றீர்கள், சுயத்தைக் கொன்றீர்கள்,**
**சாவை அணைத்து சாகாவரம் பெற்றீர்கள்**
**சத்தியம் உங்களுக்குச் சாட்சி சொல்லும்**
**தர்மம் நீதி சொல்லும்**
**சரித்திரம் உங்கள் இலட்சியத்தைச் சாகவிடாது,**
**உங்கள் உன்னதப் பாதையில் எமது வீரப்பயணம் தொடர்கிறது,**
**பிறக்கப்போகும் புதிய நாட்டிற்கு,**
**புலிகளின் கல்லறைகள்**
**அத்திவாரமாகத் திகழும்'**

மாவீரர்களின் கல்லறையை மையப்படுத்தும் முதலாவது போஸ்ரர் நவம்பர் 1991இல் வெளிவந்தது. இதில் ஒரு இளம் பெண், ஒரு மூதாட்டி, ஒரு சிறுவன் கல்லறைக்கு அஞ்சலி செலுத்தும் படம் வரையப்பட்டுள்ளது. கல்லறையில் சாற்றப்பட்டுள்ள துவக்கை சிறுவன் எட்டித் தொடுகிறான். கல்லறையில், "எம் மண்ணின் விடிவுக்காகப் போராடிய மாவீரர்கள் இங்கே விதைக்கப்பட்டுள்ளனர். எமது தாயகத்தின் பிறப்புக்காக வேங்கைகளின் இறப்புக்கள் தொடருகின்றன. புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற வரிகளுடன் இக்கட்டுரையின் தலைப்பில் 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்' என்று தொடங்கும் கவிதையும் பொறிக்கப்பட்டுள்ளன. இதே வருடம் விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மக்கள் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு, மாவீரனின் வித்துடலை புலி வீரர்கள் சுமந்து செல்லும் ஓவியம், குத்திய துவக்கு தொப்பி இராணுவ மரியாதைச் சின்னம் ஆகியவற்றுடன் ஒரு சிறந்த போஸ்ரரை வெளியிட்டுள்ளது. மேலும் அதே வருட மாவீரர் நாளுக்கெனத் தேசியத் தலைவர் அவர்கள் தெரிவித்த விசேட செய்தியும் பிறிதோர் போஸ்ரராக வெளியிடப்பட்டுள்ளது.

**இழப்புக்களும் அழிவுகளும்**
**எமது ஆன்ம உறுதிக்கு**
**உரமாக அமைந்துவிட்டால்,**
**உலகத்தில் எந்த சக்தியாலும்**
**எம்மை அடக்கிவிட முடியாது.'**

இப்போஸ்ரரையும் மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு, தமிழீழ விடுதலைப்புலிகள் வெளியிட்டுள்ளனர்.

1992ஆம் ஆண்டு மாவீரர் நாளைச் சிறப்பிக்கும் விதமாக ஐந்திற்கும் மேற்பட்ட போஸ்ரர்கள் வெளியிடப்பட்டன. முதலாவதில் தமிழீழ வரைபடமும், நிறுத்திய வாளும், உயர்த்திய முஷ்டியும் படமாக வரையப்பட்டுள்ளன. அதன்கீழ்,

**'அங்கம் முழுவதும் துடிக்கும் - புலி**
**ஆக்கினிக் குழியிலும் குதிக்கும்**
**சிந்தும் குருதி தெறிக்கும் - அதில்**
**செந்தமிழீழம் பிறக்கும்'**

என்ற கவிதை வரிகள் அச்சிடப்பட்டுள்ளன. இரண்டாவதில் கல்லறைகளுக்கு நடுவே வானளாவிய குன்றுபோல் கையில் ஆயுதத்தோடு ஆண் பெண் இருபாலாரும் உயர்ந்து நிற்கிறார்கள். உச்சியில் ஒரு மரக்கன்று தழைக்கின்றது அதன்கீழ்,

**'வாழையடி வாழை என**
**மாவீரர் வழிவந்தோம்**
**விழவிழ எழுந்து - நம்**
**தமிழீழ மண் மீட்போம்'**

என்ற பாடல் வரிகள் காணப்படுகின்றன. மூன்றாவது போஸ்ரர் மட்டக்களப்பில் வெளியிடப்படுகிறது. இதில் "தமிழீழ தேசிய வீரர் நாள், தமிழீழ எழுச்சி நாள், தமிழீழ விடுதலையின் வீரமிகு திருநாள், தாய் மண்ணின் விடுதலைக்காய் வீரகாவியமான மாவீரர்களே உங்கள் வரலாறு என்றும் நிலையானது" என்ற நீண்ட வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

1992ஆம் ஆண்டின் நான்காவது போஸ்ரர் மிகவும் புதுமையானது. பூகோள உருண்டையில் இருந்து தமிழீழம் பிறக்குமாப்போல் சித்திரம் இதில் வரையப்பட்டுள்ளது. ஒரு ஆண் ஒரு பெண் போராளிகள் உயர்த்திய சுடுகலன்களுடன் நிற்கிறார்கள். சிவப்பு வர்ணத்தில் 'செந்தமிழீழத் திசைகள் யாவும் சிவக்கும், இந்து மாகடலில் இன்னொரு நாடு பிறக்கும்' என்ற வரிகள் போஸ்ரரின் மேற்பகுதியிலும், "உலகமே எங்கள் உணர்வைப் புரிந்துகொள்" என்ற சொற்கள் அதன் கீழ்ப்புறத்திலும் தீட்டப்பட்டுள்ளன. ஐந்தாவது மிகவும் எளிமையாக வெள்ளை சிவப்பு வண்ணங்களில் உருவாக்கப்பட்டுள்ளது. உயரத்தில் தெரியும் நட்சத்திரங்களை நோக்கி மனிதப் பாதச்சுவடுகள் செல்கின்றன. நடுவே நீல வண்ணத்தில் ஆயுதமேந்திய கரம். அதன் கீழ் மீண்டுமொரு பாதச்சுவடு, அதில் மூன்று புலி வீரர்கள் நடந்து செல்கிறார்கள். 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்' என்ற பாடல் போஸ்ரரின் அடிப்பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கடந்த தொண்ணூறுகளில் தமிழீழத் தேசியக்கொடியின் வண்ணங்களான மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய நாநிறங்களை முக்கிய கவனமெடுத்து மாவீரர் நாள் போஸ்ரர்களில் பயன்படுத்தும் வழமை தோன்றியது. மஞ்சள் எமது விடுதலைப்போரின் நியாயப்பாட்டையும், சிவப்பு எமது சமுதாயத்தில் செய்யப்படவேண்டிய புரட்சிகர மாற்றங்களையும், கறுப்பு விடுதலை இலட்சியத்தில் எமது உறுதிப்பாட்டையும், வெள்ளை எமது அமைப்பு, எமது போராட்டம் ஆகியவற்றின் தூய்மையையும் காட்டுகின்றன.

முதலாவது போஸ்ரரில் கல்லறைகள் வரையப்பட்டுள்ளன. சில கல்லறைகள் திறந்தபடி விடப்பட்டு அதில் சீருடைதரித்த மாவீரர் உறங்கும் மெய்சிலிர்க்கும் காட்சி சித்திரமாக்கப்பட்டுள்ளது. சுற்றிலும் தீபங்கள் எரிகின்றன. போஸ்ரரின் அடிப்பகுதியில் 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்' என்று தொடங்கும் பாடல் வரிகள் அச்சிடப்பட்டுள்ளன. இரண்டாவது போஸ்ரரில் நான்கு கல்லறைகள், ஏழு தீபங்கள், சீருடை தரியாத ஒரு ஆண் ஒரு பெண் இளவயதினர், உயர்த்திப் பிடித்த தீப்பந்தங்கள் என்பன கூட்டாக வரையப்பட்டுள்ளன. இப்போஸ்ரரில் பின்வரும் பாடல்வரிகள் பதிவாகியுள்ளன.

**அதிர்வோடு மணியோசை நள்ளிரவு கேட்கும்,**
**தீச்சுடர்கள் உயர்ந்து உங்கள் இலட்சியத்தைக் காட்டும்,**
**கனவோடு சென்றவரே உங்கள் வழி தொடர - புதுக்**
**கால்கள் வந்தெங்கள் அணியுடன் சேரும்.'**

மார்க் தோபி (MARK TOBEY) என்ற கலை விமர்சகர் கூறுவதுபோல் ஒரு ஓவியத்தின் உட்பொருள் காலம், இடம், வரலாறு என்பனவோடு பிணைந்துள்ளது. அது மனித குலத்தின் உள்ளார்ந்த நம்பிக்கைகளோடு தொடர்புபட்டது. புலிகளுடைய மாவீரர் நாள் போஸ ர்கள் இவ்வுண்மைகளை உணர்த்துகின்றன. அவை எமது இனத்தின் வரலாறாகவும், சமூகச் சித்திரமாகவும் இடம் பெறுகின்றன. எளிமையும் அத்தியாவசியங்களுக்குள் சுருக்கப்பட்ட சிக்கனமும் கொண்டவையாக அசாதாரண கலையுணர்வோடு அவை மிளர்கின்றன. அவற்றின் கற்பனைகளும் உருவங்களும், குறியீடுகளும் எமது விடுதலைப் போரிலிருந்தே பெறப்பட்டன. அவற்றைப் போரியல் ஆவணமாகக் கருதுவதில் தவறில்லை.

ஒரே செய்தியைச் சொல்லும் மூன்று போஸ்ரர்களை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை 1994இல் வெளியிட்டுள்ளது. முதலாவது போஸ்ரரின் வலது மேற்பகுதியில் ஒலிக்கும் மணியின் படமும், இடது மூலை யில் தமிழீழ வரைபடமும், நடுப்பகுதியில் ஒரு தொகுதி தீபங்களும், தீபச் சுவாலை யில் மாவீரர் முகங்களும் காணக் கூடியதாக இருக்கிறது. இதில் பின் வரும் பாடல் பொறிக்கப்பட்டுள்ளது:

**'விடியும் வரையும் விடியும்**
**வரையும் தொடரும்**
**எங்கள் பயணம்**
**சுடரில் தெரியும் முகங்கள்**
**நினைவில் இரவில்**
**மணிகள் அசையும்'**

இரண்டாவது போஸ்ரரில் மலர்தூவிய ஒற்றைக் கல்லறையும், முன்னேறிச் செல்லும் பள்ளிச் சிறுவர்களும், தமிழீழ வரைபடமும் தீட்டப்பட்டுள்ளன. பின்வரும் வரிகள் சிவப்பு எழுத்தில் பொறிக்கப்பட்டுள் ளன. 'ஒளிகள் சுடரும் வழியில் இனியும் பயணம் தொடரும், விடி யும் பொழுதில் இளைஞர் உலகம் சரிதம் எழுதும் எழுதும்.' மூன்றாவது மிகப் பிரமாண்டமான போஸ்ரராக இடம்பெறுகிறது. திறந்த கல்லறையில் சீருடையுடன் உறங்கும் புலிவீரர் படமும், குத்திய துவக்கும் அதன்மேல் தொப்பியும், கரம் உயர்த்திய உருவங்களும், தீபங்களும் இதில் காணப்படுகின்றன. 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்' என்று தொடங்கும் பாடல் அதில் பிரசுரமாகியுள்ளது.

1995ஆம் ஆண்டிற்குப்பின் தமிழீழ வரலாறு புதிய திருப்பம் காண்கிறது. இடப்பெயர்வும் போர் அனர்த்தங்களும் எம்மை வாட்டுகின்றன. என்றாலும் நாம் உறுதி தளரவில்லை. இதை 1996ஆம் ஆண்டின் மாவீரர் நாள் போஸ்ரர் எடுத்துக் காட்டுகிறது. மஞ்சள் வட்டத்திற்குள் வானுயர்ந்து நிற்கும் எமது தேசியக் கொடியின் படம் இதில் கண்ணைக் கவருகிறது. போஸ்ரரின் நடுப்பகுதியில் கல்லறைகளும், எழும்பி நிற்கும் மனிதக் கரங்களும், எரியும் தீபங்களும் காட்சி தருகின்றன. கீழ்ப்பகுதியில் புலி இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளது. 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்' என்ற பாடல் இதில் மீண்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. 1996தொடக்கம் எமது தேசியப் பத்திரிகையான ஈழநாதம் மாவீரர் நாளைச் சிறப்பிக்கும் விதத்தில் பத்திரிகை இணைப்புக்களாக சிறிய போஸ்ரர்களை வெளியிடுகின்றன.

1998இல் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் இரு வெளியீடுகள் தோன்றின. பிரகாசமான பல வண்ணங்களின் கலவையில் தீட்டப்பட்ட ஒரு வித்தியாசமான

கலாநிதி
**க.சோமாஸ்கந்தன்**

போஸ்ரரை மட்டு-அம்பாறை அரசில்துறை வெளியிட்டது. இதில் தடித்த நீலம், பச்சை, கறுப்பு, மஞ்சள் வண்ணங்கள் பயன்படுத்தப்பட்டன. மேலே பறக்கும் புலிக்கொடி, தமிழீழ வரைபடம், நடுவே கல்லறைகள், குத்திய துவக்கின்மேல் தொப்பி, கீழே 'மாவீரர்களின் இரத்தத்தால் எமது வரலாறு எழுதப்படுகின்றது' என்ற பெரிய சிவப்பு எழுத்துக்களும் காணப்படுகின்றன. இரண்டாவது 1998 ஆண்டுப் போஸ்ரரின் நடுவே பச்சை நிறத்தில் ஒரு மாபெரும் விருட்சமும் அதில் தமிழீழ வரைபடமும் இடம்பெறுகின்றன. கறுப்பு வெள்ளை வண்ணத்தில் மாவீரர் கல்லறைகளும், தீபங்களும், கல்லறைகள்மீது சிவப்பு மலர்களும் போஸ்ரரின் நடுப்பகுதியில் தீட்டப்பட்டுள்ளன. புலி இலச்சினையுடன் பின்வரும் வரிகள் கீழே காணப்படுகின்றன:

**'வேராக விழுதாக விடுதலைப் போர்**
**தாங்கும் - மாவீரர்**
**உம் கனவுகள் விரைவில்**
**நிறைவேறும்'**

தமிழீழ விடுதலைப்புலிகள் 1999 ஆம் ஆண்டின் மாவீரர் நாளுக்காக வெளியிட்ட போஸ்ரர் நம் விமானப்படைப் பலத்தை பெறும் கட்டத்தை நெருங்கும் செய்தியைக் கூறுகிறது. நீல வானத்தில் பறக்கும் விமானத்தில் இருந்து இரு புலிப் போராளிகள், ஒரு பெண் ஒரு ஆண், மாவீரர் கல்லறைகள் மீது பூச்சொரியும் காட்சி இதில் வரையப்பட்டுள்ளது. கல்லறைக்கு இரு பக்கமும் ஆயுதம் தரித்த இரு போராளிகள், ஒரு ஆண் ஒரு பெண் காவல் நிற்கின்றனர். கல்லறைகள் தமிழீழ வரைபடத்தின்மீது எழுப்பப்பட்டுள்ளது. தீபங்கள் பிரகாசமாக எரிகின்றன. 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்' என்ற பாடல் வரிகள் இதில் அச்சிடப்பட்டுள்ளன.

**'நெய் விளக்கு ஏற்றி**
**நினைவுக்குப் பூச்சொரிந்து**
**கைகூப்பித் தொழுது**
**கல்லறையில் தாழ் பணிவோம்'**

என்று கூறி நிறைவு செய்கிறோம். வளப் பற்றாக்குறையாலும் போஸ்ரர்கள் வரையப்பட்ட கடதாசியின் தரக்குறைவாலும் எமது வெளியீடுகள் பல சிதையும் தறுவாயில் இருக்கின்றன. எமது வரலாற்றுச் சான்றுகளை இவற்றை நுண்படப் பிரதிகளாக்கிப் பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பு. ●

*தமது இத்தகைய வெளியீடுகள் மூலம் தமிழீழத்தில் புதியதொரு மரபை புலிகள் உருவாக்கியுள்ளனர். ஒவ்வொரு மரபும் ஒரு காலகட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க பொதுத் தேவைக்காகவே உருவாக்கப்படுகின்றது. கலைப்படைப்புக்களும் இந்த நியதிக்கு உட்படுகின்றன. சுருங்கக் கூறுவதாயின் ஈழத்தமிழினத்தின் பொதுத் தேவைக்காகப் புலிகள் அவற்றை உருவாக்கியுள்ளனர். இதை THE COLLECTIVE EXPRESSION OF A PEOPLE DURING A PARTICULAR PERIOD IN HISTORY என்று ஆய்வாளர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர். அதாவது ஒரு வரலாற்றுக் காலகட்டத்தில் ஒரு மக்கள் இனத்தின் வெளிப்பாடாக அவை இடம்பெறுகின்றன.*

"ஒரு பிச்சைக்காரனின் வயிறு, எளிய சுமை, வலிமை ஏறிய கால்கள்" ஒரு கெரில்லாப் போராளி கொண்டிருக்கவேண்டிய தகுதிகள் இவைகள்தான். உலகின் தலை சிறந்த விடுதலை வீரன் சேகுவேராவின் இதயத்திலிருந்து உதிர்ந்த வார்த்தைகள் அவை. இதை வாசிக்கும்போது என்னுள் ஓடோடி வந்தவர்களுள் நிலவனும் ஒருவன்.

# ஒரு சுமைதாங்கியின் வாழ்வு

இடுப்பில் ரவைதாங்கிக்குக் கீழே எப்போதும் கட்டப்பட்டிருக்கும் 'சரம்' ஒன்றை மட்டுமே நம்பி வன்னியின் கானகங்களுக்குள் மாதக்கணக்கில் அவன் திரிந்திருக்கிறான். விடுதலைப்போரைத் தொய்ந்துபோக விடாது மக்களைப் போராட்டத்தின்பால் அணி திரட்டிச் செல்லும் பணியில் வன்னியின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் அவன் துவிச்சக்கர வண்டிப் பயணம் செய்திருக்கிறான். கஞ்சியும், கத்தரிக்காயும்தான் சாப்பாடாய் இருந்த காலத்தில் கண்டதில் எல்லாம் 'அயிற்றம்' போட்டு வயிறு நிரப்பும் போராளிகளுள் ஒருவனாய் அவனும் இருந்திருக்கிறான். எல்லாச் சோதனைகளுக்குள்ளாலும் போராட்டத்தையும் தனது ஆற்றலையும் வளர்த்துச்சென்ற ஒரு அற்புதமான போராளி அவன்.

வெள்ளை நிறத்தில் ஒரு வட்டமுகம் அவனுக்குச் சொந்தமானது. தலை எப்போதும் சீராக மேவி இருக்கும். அளவான உயரம். வலது கன்னத்தில் இருக்கும் சிறிய பருவைக் கையால் உருட்டி உருட்டி வாசித்தபடி யோசிக்கும்போது மட்டுமே அவனில் அமைதி குடிகொண்டிருக்கும். ஏனைய நேரங்களில் எல்லாம் அவன் கலகலப்பாகவே இருப்பான்.

நிலவனின் போராட்ட வாழ்வில் பெருமளவிலான காலங்கள் புதிய போராளிகளைப் புடம்போடும் ஆரம்ப இராணுவப் பயிற்சிக் கல்லூரிகளிலேயே கழிந்திருக்கின்றன. பல் வேறுபட்ட பணிகளை அவன் ஆற்றியிருந்தாலும் கூட முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பணிபற்றியே நான் அதிகம் கூறவேண்டியிருக்கிறது. ஏனெனில் பயிற்சிக் கல்லூரிகளில் அன்று அவன் ஆற்றிய பணிகள் அக்காலத்தில் எமது ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு மிகவும் காத்திரமான பங்காற்றின.

வன்னிப் போர்க்களம் இறுக்கமாக இருந்தது. நாளாந்தம் சராசரியாகப் பத்திற்கும் மேற்பட்ட போராளிகள் காயமடைந்தும் வீரச்சாடைந்தும் களத்தைவிட்டு அகற்றப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் போரோ மேலும் மேலும் தீவிரம் பெற்றுக்கொண்டிருந்தது. அந்தக் காலகட்டத்தில் வன்னியிலிருந்த சில இலட்சம் மக்களுக்குள் இருந்து இந்தக் கள இழப்பீட்டை நிவர்த்திப்பதோடு மட்டுமல்லாமல் மேலதிகமான படையணிகளையும் உருவாக்க வேண்டும். இப்படியானதொரு காலகட்டத்தில் வேகமாக இயங்கிக்கொண்டிருந்த எமது பயிற்சித் தளங்களில் குறுகிய காலங்களுக்குள்ளேயே தெளிவும், உறுதியும், வீரமும் மிக்க போர்வீரர்களை உருவாக்குவதில் நிலவன் ஆற்றிய பணி மிகவும் உன்னதமானது.

காடுகளுக்குள் இருக்கும் அந்த உலகம் வித்தியாசமானது. வேதனைகளுடன் கூடியதொரு இனிமையான கலவை வாழ்வு அங்கிருக்கும். தமது குடும்பங்களைவிட்டு அப்போதுதான் புறப்பட்டு வந்திருந்த போராளிகள் தமது வாழ்வில் சந்திக்கும் மிகவும் கோரமான கணங்களை அந்தக் கானக உலகத்துள்தான் அனுபவிப்பார்கள்.

திடீரென நினைவில் தோன்றும் தனது பாசத்தைக் கொட்டிவைத்திருந்த அம்மாவை, அழுது கண்ணீர் வடிப்பதுபோல் தோன்றும் தனது கம்பீரமான அப்பாவை, தன் பிரிவால் துடித்துப்போயிருக்கும் சகோதரர்களை, நண்பர்களோடு கூடித்திரிந்த வாழ்வை என அப்போது தான் பிரிந்து வந்தவற்றின் நினைவுகளால் ஒவ்வொருவரும் வேதனையுற்றிருப்பர். தாம் பிரிந்தவற்றிற்கும் புதிதாக வகுத்துக்கொண்ட இலட்சியத்திற்கும் இடையே அவர்கள் அப்போதும் போராடிக்கொண்டே இருப்பார்கள். அத்தகையதொரு காலப்பகுதியைக் கடப்பதற்கு, அந்தக் கணங்களில் நூற்றுக்கணக்கான போராளிகளுக்கு அருகிருந்து துணை நின்றிருக்கிறான் நிலவன்.

பயிற்சித் தளங்களில் பயிற்சி ஆசிரியனாய் மட்டுமல்லாது பயிற்சியாளனாய், ஒரு விளையாட்டு வீரனாய், சமையலாளனாய், கலைஞனாய், தொழில்நுட்ப வல்லுனனாய், போராளிகளின் அறிவுத் தேடலுக்குத் தீனி போடக்கூடிய நூலகமாய்... என எல்லா ஆளுமைகளும் நிறைந்த கவர்ச்சிகரமாக ஒரு ஆசிரியன் அவன்.

அவனது அந்த அற்புதமான பணியாற்றலுக்கு அவனின் அடிப்படை இயல்புகளும் ஒரு காரணமாய் இருந்தது. நிலவனின் குடும்பத்தில் அவன் மூத்தபிள்ளை. ஏனையவர்கள் மூவரும் பெண்கள். இவன் வீட்டிலிருந்த காலங்களிலேயே தங்கைகள் இருவர் போராடப் புறப்பட்டுவிட்டார்கள். இவையெல்லாம் அவனுள் ஒரு ஆழமான பொறுப்புணர்வை ஏற்படுத்தியிருந்ததுடன் கடுமையான பாசவலைக்குள் இருந்த அவனை ஏனையவர்கள் மீதும் பாசம் செலுத்தும் ஒரு மனிதனாகவும் ஆக்கி இருந்தது.

**— அ.பார்த்தீபன் —**

திருகோணமலையிலிருந்து தமிழீழத்தின் பெரும்பாலன இடங்களில் இடம் பெயர்ந்து வாழ்ந்த குடும்பம் அவனுடையது. அயல்நாடான இந்தியாவரை கூட அவர்கள் இடம்பெயர வேண்டியிருந்தது. இந்த வாழ்வு மூலமும் அவன் பெற்றிருந்த சமூக அறிவும் விரிந்த பார்வையை அவனுள் வளர்த்திருந்தது. எல்லா இன்னல்களுக்குள்ளும் தம் ஒரே புதல்வனைப் படிப்பித்து ஆளாக்கவேண்டும் என அவனது பெற்றோர்கள் எடுத்த முயற்சியால் அவன் சிறந்த கல்வியறிவைப் பெற்றிருந்தான். அவனது குடும்பத்திற்கென இயல்பாகவே இருந்த சமூக ஈடுபாடும் வாசிப்புப் பழக்கமும் கூட இவனுள் நிறையத் தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன. பரந்த அரசியல், அறிவியல் அனுபவம் அவனுள் இருந்தது.

நிலவனின் ஆசிரியப்பணி தனியே பயிற்சி முகாம்களுடன் மட்டும் நின்றுவிடவில்லை. ஒரு போராளி புதிதாக இணைந்த குறுகிய நாட்களில் இருந்து அவன் போராடும் போர்க்களத்தின் முன்னணி நிலைவரை நிலவன் சுழன்றுகொண்டே இருப்பான். போராளிகள் குறுகிய காலத்துக்குள்ளேயே சடுதியான சூழல் மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டியிருந்த களச்சூழல் அவனது இந்தப் பணியை அத்தியாவசியமாக்கியது.

தான் உருவாக்கும் போராளிகளைத் தேடிப் பயிற்சி முகாம்களில் இருந்து வன்னியில் பரந்து விரிந்த போர்க்களங்கள் எங்கும் கால் நடையாகத் திரிவான் அந்த ஆசிரியன். அந்தக் காலத்தில் நாம் பயணிக்கும் பிரதானமான போக்குவரத்துச் சாதனமாக இருப்பது "அண்ணை வரட்டோ" என்பதுதான். வீதியால் போய்வரும் எந்த வாகனத்தையும் மறித்து அப்படிக் கேட்டுக்கேட்டு போய்ச்சேருவதையே போராளிகள் அவ்வாறு பகிடியாக அழைப்பார்கள். ஆனால் வன்னியின் போர்க்களங்களுக்கு 'அந்த வாகனத்தில்' மட்டும் போய்ச்சேர முடியாது. எந்தவொரு வாகனப் போக்குவரத்து மற்ற பலபத்துக் கிலோமீற்றர்களைக் கடப்பது 'நடராசா'வில்தான். அத்தகைய காலங்களிலெல்லாம் ஓய்வற்று இயங்குவான் நிலவன்.

நிலவனுக்கு தான் ஆற்றும் பணியில் ஈடுபாடு அதிகம் இருந்தாலும் மனரீதியாக அடைந்த வேதனைகளும் நெருக்கடிகளும் ஏராளம். அந்தத் துன்பகரமான உணர்வுகளுக்குள் அவன் அடிக்கடி உழல்வதைப் பார்த்திருக்கிறேன். தான் வளர்த்தெடுத்த போராளிகள் மிகக் குறுகிய காலத்திலேயே களங்களில் வீழ்ந்து உயிர்விடும் வேளைகளில் எல்லாம் அவன் துன்பத்தில் துவண்டு போவான். வெறுமனே மரணங்கள் தரும் வேதனைகளுக்கும் அப்பால் ஒவ்வொரு போராளியிலும் அவன் ஆழமாகக் கொண்டிருக்கும் உறவு அதை மேலும் அதிகப்படுத்தும்.

பலபோராளிகள் தமது தனிப்பட்ட சோகங்களை ஒப்புவிக்கும் இடமாக நிலவனின் இதயம் இருக்கும். அவற்றையெல்லாம உள்வாங்கி ஆறுதல்படுத்திவிட்டுத் தனியே இருந்து வதைபடும் அவனை அருகிலிருந்தவர்கள் அறிவார்கள். அப்படியான இதயம் படைத்தவனாக அவன் இருந்ததால்தான் தனது பணிக்கும் மேலதிகமாக இன்னுமொரு பணியையும் அவன் ஆற்றினான். வீரச்சாவடைந்த தனது போராளிகளின் வீடுதேடிச் சென்று அவர்களை ஆறுதல் படுத்துவதுதான் அது. அதற்காக அவனது பயணிக்கும் தூரம் இன்னுமின்னும் அதிகரித்தது.

அவனது வலிய கால்கள் சலிப்பின்றி எங்கும் நடந்து திரிந்தன. மென்மையான இதயம் வலிமையான சோகங்களையெல்லாம் தாங்கியது. துப்பாக்கிகளோடு மட்டும் இயங்கும் மனிதனாக இல்லாது ஏனையவர்களின் துயரங்களைத் தாங்கும் போராளியாகவும் அவன் இருந்தான். தனது மனதில் குடிகொள்ளும் துயரங்களை அகற்றிவிடும் எந்தவொரு 'மந்திரத்தையும்' அவன் வைத்திருந்ததாக நான் அறியவில்லை. எல்லாவற்றையும் அவனது இதயம் தனக்குள் அடக்கிக் அடக்கிக் கொண்டே இருந்தது. அதனால்தான் எங்காவது சண்டைகள் என்றால் களத்தின் முன்னணிக்குச் சென்று சமரிடும் சந்தர்ப்பத்திற்காகத் தனது பொறுப்பாளருடன் சண்டைபிடிப்பான். அதன்மூலம் அவன் பல சந்தர்ப்பங்களையும் பெற்றான்.

நாடோடியாக எங்கும் அலைந்து திரியும் நிலவன் முகாமுக்கு வந்துவிட்டால் அங்கிருப்பவர்களுக்கெல்லாம் குதூகலம் தான். அவன் அங்கிருந்தால் நல்ல சமையல் இருக்கும். இனிமையான சண்டைகள் இருக்கும். ஆரோக்கியமான பகிர்வுகள் இருக்கும். எல்லாவற்றையும் தரும் 'அட்சய பாத்திரம்' அவன்.

அப்போது நாங்கள் பத்துப்பேர் கற்கைநெறி ஒன்றிற்காக ஒரு முகாமில் தங்கியிருந்தோம். எங்களைப் பொறுத்தவரை நிலவன் ஒரு மூத்த சகோதரன். எல்லோரை விடவும் அவன்தான் வயதில் மூத்தவன். அறிவாலும் அனுபவத்தாலும் கூடவேதான். அப்போதெல்லாம் எமக்கு ஆறுதலாகவும், ஆலோசகனாகவும் இருந்தவன் அவன்தான்.

நெருக்கடியான அந்தக் காலம் உணவுக்கு மிகவும் மோசமான காலம். வாய் கொடுப்பதற்குக் கடினமான கஞ்சியுடன் ஆரம்பமாகும் உணவை மூன்று வேளையும் உண்டு முடிப்பதே பல சமயங்களில் பெரும் பாடாகிவிடும். நிலவன்தான் எமக்கு உள்ளூரில் கிடைக்கும் மலிவான பொருட்களுடன் உணவுக்கு மேலதிக சுவையூட்டும் தந்திரங்களைக் கற்றுத்தந்தான். காலைக் கஞ்சிக்கு இலை குழைகளில் சம்பல் அரைத்தும், பனம் பழத்தைப் பிழிந்துவிட்டுச் சுவையூட்டியும் அந்த உணவை வயிற்றுள் இறக்க வழி சொல்லித் தந்தான். வேட்டைக்குப்போய் இறைச்சி கொண்டுவந்து அதை நாம் என்றுமே அனுபவத்திராத சுவைதரும் கறியாக்கித் தருவான். நிலவன் சமையலில் கெட்டிக்காரன் என்று அவனை அறிந்தவர்கள் அனைவருக்கும் தெரியும்.

நிலவனின் வளர்ச்சி ஆறுவருடப் போராட்ட வாழ்வில் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. அனுபவத்தில் அவன் முதிர்ச்சியானதொரு நிலையை எட்டிக் கொண்டிருந்தான் நூற்றுக்கணக்கான மனித மனங்களை நெருக்கமாகக் கையாண்ட அனுபவம் அவனைப் பாரிய அளவில் வளர்த்துவிட்டிருந்தது. அவனது பொறுப்பாளரின் எதிர்கால நம்பிக்கைகளுள் ஒருவனாய் அவன் இருந்தான். அவனது முதிர்ச்சி நிலைக்கும் காலத்தின் தேவைக்கும் ஏற்ப வேறு ஒரு பணி காத்திருந்தது.

அது 2001ஆம் ஆண்டு காலப் பகுதி. 'ஓயாத அலைகள் - 03' முடிந்து எதிரியின் நடவடிக்கைகள் வட போர்முனையில் தீவிரம் பெற்றிருந்தன. தீச்சுவாலையின்



**மேஜர் இளநிலவன்**
**(இரங்கசாமி மதுசங்கர்)**
**திருகோணமலை**

தாயின் மடியில் :- 1972-09-18
தாயக மண்ணில் :- 2001-08-16

பின்னும் ஆனையிறவு போர்முழக்கத்தில் ஆழ்ந்திருந்தது. அரசியல்துறையில் இருந்து போராளிகள் திரட்டப்பட்டுச் சண்டையணியொன்று தயார்படுத்தப்பட்டது. புதிய பணியொன்றைப் பொறுப்பேற்பதற்காக அப்போது தான் அரசியல்துறை பொறுப்பாளரால் அழைக்கப்பட்டிருந்த நிலவன் உடனடியாக அணியொன்றின் தலைவனாக நியமனம் பெற்று களத்திற்குச் சென்றான். எதிரியின் நடவடிக்கை விரைவிலேயே முடிந்துபோக போராளிகளை பணிகளுக்காக மீள எடுப்பதே திட்டமாக இருந்தது.

போர்க்களம் பெரும் எதிர்ச் சமருக்காகத் தயார் படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. எப்போதும் போலவே ஓய்வின்றி உழைத்தான் நிலவன். 2001.08.16 அன்று அதிகாலை. பெரும் ஆரவாரத்துடன் எறிகணைகள் எமது நிலைகளை நோக்கிச் சரமாரியாகப் பொழியப் பட்டுக்கொண்டிருந்தன. பெரும் எறிகணைச் சமர் ஒன்று எதிரிக்கும் எமக்குமிடையே மூண்டுவிட்டது. எதிரி அணிகளின் வரவை எதிர்பார்த்திருந்தனர் போராளிகள். ஆனால் சிறிது நேரத்தில் அந்த ஆரவாரம் அடங்கிப் போனது. முன்னேறும் தனது திட்டத்தை எதிரி கைவிட்டிருந்தான். எமது எல்லா வீரர்களும் உயிரோடு இருந்தார்கள், நிலவனைத் தவிர. அந்தச் செய்தி எமது முகாமிற்கு வந்தபோது எவரும் இன்றியிருந்த அந்தப் 'பேய் வீட்டில்' ஓயாத அந்த உழைப்பாளிக்காகச் சிறிது நாட்களின் முன்னர்தான் வந்திருந்த துவிச்சக்கரவண்டி மட்டும் அழுதுகொண்டிருந்தது. •

**பல போராளிகள் தமது தனிப்பட்ட சோகங்களை ஒப்புவிக்கும் இடமாக நிலவனின் இதயம் இருக்கும். அவற்றையெல்லாம் உள்வாங்கி ஆறுதல் படுத்திவிட்டு தனியேயிருந்து வதைபடும் அவனை அருகிலிருந்தவர்கள் அறிவார்கள். அப்படியான இதயம் படைத்தவனாக அவன் இருந்ததால்தான் தனது பணிக்கும் மேலாக இன்னுமொரு பணியையும் அவன் ஆற்றினான். வீரச்சாவடைந்த போராளிகளின் வீடு தேடிச்சென்று அவர்களை ஆறுதல் படுத்துவதுதான் அது. அதற்காக அவனது பயணிக்கும் தூரம் இன்னுமின்னும். அதிகரித்தது.**



# பழிவேண்டி இறப்பதிலும் குழி வேண்டிச் சிறப்பதே மேல்.



வெளித்தெரியும் வடிவில் இல்லையெனவும்
உள்ளெரியும் சுடரில் இருப்பதெனவுமான
எம் செல்வங்காள்.
உங்களுக்கானது கார்த்திகை
நாளும். பூவும்.
நெடிய உருக்கொண்ட சோதிப்பிளம்பாய்
முன்னே சுடர்கின்றீர்.
அருபமாயினும் கார்த்திகை இருபத்தேழில்
எம் கண்ணில் தெரிவீர்.
பூக்கொண்டு வரும் போதில் பேசுவீர்.
நெய்விளக்கேற்றி பாடலெழும்போதில்
நீவிர் எம்முன்னே நிற்பீர்.
கண்டுபேசித் திரும்புவோம்.
இதுவே கார்த்திகைத் திருநாள் கனபரிமாணம்.
ஆணென்றும் பெண்ணென்றும் பேதங்களற்று
வீரத்தில் விளைந்தவர் நீங்கள்.
குலமானமொன்றே
உங்கள் குருதியில் குடியிந்தது.
நெடுங்காலம் துயிலிற்கிடந்த இனத்துக்கு
பூபாளம் பாடிய பிள்ளைகள் நீவீர்.
கல்விக்கும் செல்வத்துக்கும் கடைவிரித்த தலைமுறையில்
நீங்கள் விஜயதசமிக்கு உரியர்.
``மானம்`` பூ மகிடாசுரவர்த்தனிகள்.
அக்கினிக்குஞ்சுகள் ஆறுவதற்காகத்தான்
பேரிடிமழைநாளில்
உங்களுக்கான பெருநாள் வருகிறது.
ஈனப்பிறவிகளென்ற இழிநிலையகற்றி

இங்கே நாம் நெக்குருகி நிற்பது
கால நீட்சியில் நெகிழ்ந்து போகவல்ல.
கண்ணீர்விடுவது கரைந்துபோகவல்ல.
அழுபவனே எழுவானென்பது எமக்கே பொருந்தும்.
உம்மைபுரந்தளித்த தாயரும் தந்தையரும்
உடன்பிறந்த சோதரங்களும்
உறவும். சனமும்
ஆயிரமாயிரமாய் திரண்டிப்பது அழவல்ல.
நீவிர் விட்ட இடத்தை தொடக்கமாய் எடுத்து
மேலும் முன்னேறத்தான்.
நம்புங்கள்
நமது தலைப்பயணியை நம்புங்கள்.
எந்த மாரீசமுகில்களும் தடவா உயரத்திற்தான்
தலைவனின் முடியிருக்கிறது.
மயக்கவாசங்களை புறமொதுக்கிச் சுவாசிக்கும்
பக்குவம் பெற்றவன் எம் தலைவன்
கல்லாலின் கீழே கடுந்தவமியற்றும்
ஆலகண்டன் ஆடிச் சரியமாட்டான்.
இம்முறை ஏதும் கொண்டுவரவில்லையெனினும்
பாதை தவறாத பயணியர் நாம்.
முழுமையான விடுதலையின் திசைவழியிற்தான்
எம் பயணம் தொடர்கிறது.
நம்புங்கள்
உங்கள் மூச்சுக்கலந்த காற்றுலவும் தேசம்
இறுதி இலக்கு எட்டும் வரை
ஏற்றிய கனவுக்கு இரண்டகம் செய்யாது.
இன்றைய உலகப்பயணங்கள்







## உலைக்களம்

எமக்கு மானச்சால்வை போர்த்தியோர் நீவிர்.
ஈழத்தமிழனுக்கு அடையாளமும்
முகவரிக்கு முத்திரையுமிட்டவர் நீங்கள்தான்.
எம்மைச் சாரைப்பாம்பெனச் சீண்டியோர் முன்னே
நாகசர்ப்பமென நர்த்தனமிட்டீர்.
தமிழர் புனுகுப்பூனையெனும் படிமமழித்து
புலிகளென்பதை உணர்த்திப் போனீர்.
காலவடிவாய் பகைமுன்னே நின்று
தூலவடிவை இழந்து
கல்லறையில் துயில்கின்றீர்.
நீங்கள் அதிரதர்களுக்கும் முதன்மையான
மகாரதர்கள்.
காலம் கடந்து வாழும் பீஷ்மர்கள்.
துஷ்டநிக்ரக துர்க்கைகள்.
தோழர்களே!
தோழியரே!
தருவதற்கு ஏதுமின்றி
வெறுங்கையராய் வந்தோம் இன்று.
ஆயினும் எம்மனசெல்லாம் உம்கனவே
நிறைந்துளது.
இத்தனை பேரையும் குழியிட்டுவிட்டு
இலக்கில் தவறோமெனும் திடசங்கற்பத்துடன்தான்
விளக்கேற்ற வந்துள்ளோம்.
எவனெவனோவெல்லாம்
வலைவிரிப்பதாயெண்ணி வரலாம் போகலாம்.
எவனெவனோவெல்லாம்
சறுக்குமரம் ஏறச்சொல்லி
நிர்ப்பந்த நெருக்குவாரம் தரலாம்.
பாதிவழியில் பயணம் நிறுத்தச்சொல்லி
பத்தியம் நீட்டலாம்.
தம் பலத்தைக்கூடக் காட்டலாம்.
புதிய உலக ஒழுங்குபற்றிய புண்ணாக்குத் தீத்தலாம்.
தோழர்களே
தோழியரே
இன்றும் காலடியில் ஏற்றும் தீபத்தின் மீதான
எம் சபதம் கேண்மின்.



உல்லாசப் பயணங்களல்ல.
சுதந்திரத்துக்கான உழவும்
விடுதலைக்கான விதைப்புமெனக் கொள்க.
நட்சத்திர விடுதிகளின் நீராழி மண்டபங்களில்
நாமிறங்குவது ஜலக்கிரீடைக்கல்ல
உங்கள் குருதியில் குளித்தெழுவதற்கே.
குளித்தெழும்போது எமக்குக் குளிர்வதில்லை.
நெருப்பே தடவுகிறது.
பேச்சுகளும்.
ஒப்பந்தங்களும்.
விமானப் பறப்புகளும்.
வரவேற்புகளும்.
திசைவழியைச் செப்பனிடுகின்றனவே தவிர
இழிந்து இழிவுறச் செய்யாது.
இன்னும் பலம் கொண்டே விளங்குகின்றோம்.
பயணத்துக்குரியராய்.
நம்புங்கள்
பழிசுமந்து இறந்துபோவதிலும்
உமக்கருகிலோர் குழிவேண்டி
சிறந்துபோவதே மேலானது.
கண்தொடும் எல்லைவரை நிறைந்து கிடக்கும்
கல்லறைகளுக்குத் துரோகமிழைத்து
சயனிக்கப்போகாது இந்தச் சத்திரியசேனை.
உள்ளே சுடர உறங்குவோரே
உறுதியெடுக்கிறோம் உங்கள் முன்னே.
வெறுங்கையராய் அடுத்த பெருநாளுக்கும்
உங்கள் முன்னே வரோம்.
போரெனிலும்
பேச்செனிலும்
பேதங்கள் தெரியவில்லை நமக்கு.
இவையும் விடுதலைக்கான எறிகருவிகளே.
நம்பியிருங்கள்
நாங்கள் வென்றே திரும்புவோம்.
இப்போவிடைகொண்டோம்.
வீடு திரும்ப அல்ல



**— வியாசன் —**

# காலமெழுதிய காவியம்

## பதிப்படாத பக்கங்கள்

**ஆ.ந. பொற்கோ**

பகலவன் மேற்குவானில் பவனி வந்துகொண்டிருந்தான். போராளிகள் திட்டமிட்ட இராணுவமுகாம் தாக்குதலுக்கு தங்களைத் தயார்படுத்திக் கொண்டிருந்தார்கள். எல்லோர் முகங்களிலும் மகிழ்ச்சி களை கட்டியிருந்தது. தங்களுக்குத் தரப்பட்ட இராணுவமுகாம் பகுதிகளை குறித்த நேரத்தில் பிடிக்கவேண்டுமென்ற உத்வேகம் எல்லோர் மனங்களிலும் உச்சத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது.

அவன் தன்னிடமிருந்த சலனப்படக் கருவியை சரிபார்த்துக்கொண்டிருந்தான். இராணுவமுகாம் தாக்குதலைப் பதிவுசெய்வதே அவனுக்குத் தரப்பட்ட பணி. புகைப்படக் கருவியை கையிலெடுத்ததும் கடந்தகால நிகழ்வொன்று நினைவில் மோதி சிரிப்பூட்டியது.

வீட்டிலிருந்த நாட்களில் நண்பனின் வீட்டில் நிகழ்வொன்றுக்குப் போயிருந்தான். புகைப்படப் பிடிப்பாளனும் நண்பன் வீட்டாருடன் சேர்ந்து படமெடுக்க



வேண்டி யிருந்ததால் அவனிடம் புகைப்படக் கருவியைத் தந்து படமெடுக்கச் சொன்னார்கள். அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. படமெடுக்க வேறெவரும் இருக்கவில்லை. ஒருவாறு முயற்சித்து படமெடுத்துவிட்டான். பிறிதொரு நாளில் அந்த அல்பத்தைப் பார்த்தபோது அவனெடுத்த புகைப்படத்தில் புகைப்படப் பிடிப்பாளனின் கை மட்டுமே அகப்பட்டிருந்தது.

இன்று அவனொரு பட்டறிவான களப் படப்பிடிப்பாளன். எத்தனையோ சண்டைக் களங்களைப் பதிவு செய்திருக்கிறான். இராணுவ ஆக்கிரமிப்பால் மக்கள் படும் அவலங்களையும் விடுதலை எழுச்சி நிகழ்வுகளையும் ஆவணப்படுத்தியிருக்கிறான்.

தொடக்க காலங்களில் தொடர்ச்சியாக துப்பாக்கியோடு களமிறங்கியவன் இப்போது தொடர்ச்சியாக படப்பிடிப்பு கருவியோடு களமிறங்க வேண்டியிருந்தது. களப் படப்பிடிப்பின் முக்கியத்துவத்தை அவன் முழுமையாக உணர்ந்திருந்தான். எந்தப் பதிவாக இருந்தாலும் தெளிவாக இருக்கவேண்டுமென்பது அவனது அவா. சண்டைக் களங்களில் அருகில் நின்று படப்பிடிப்பில் ஈடு பட்டு விழுப்புண்ணோடு மயிரிழையில் உயிர் தப்பியிருக்கிறான்.

மாலைப்பொழுது மங்கி இருள் பரவத் தொடங்கியது. அணிகள் இராணுவமுகாம் நோக்கி நகரத்தொடங்கின. பனை வெளிகளூடே அவர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். தாக்குதலுக்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அந்தக் கணத்தை பதிவுசெய்ய அவனது சலனப்படக் கருவி தயாராக இருந்தது. டோப்பிடோக்கள் வெடிக்க தடையில் பெரிய ஒளிப்பிளம்பு தோன்றி மறைந்தது. அதனைப் பதிவு செய்தவன், அணிகளோடு ஓடி தடையைக் கடந்து முகாமுக்குள் பிரவேசித்தான்.

அவனது சலனப்படக்கருவி அணு அணுவாக களத்தை பதிவுசெய்துகொண்டிருந்தது. போராளிகளின் வீரச் செயல்களும் தியாகங்களும் பதிவாகின. சண்டை இறுதிக் கட்டத்தை நெருங்கிக்கொண்டிருந்தது. இராணுவத்தினர் தப்பியோடிக்கொண்டிருந்தார்கள். அவனது சலனப்படக்கருவி பின்தொடர்ந்து அதனையும் பதிவு செய்தது.

அடுத்த இராணுவ முகாமிலிருந்து ஏவிய எறிகணையொன்று அவனுக்குப் பக்கத்தில் விழுந்து வெடித்தது. அவன் சலனப்படக் கருவியை அணைத்தபடி நிலத்தில் விழுந்தான். எறிகணை மழைபொழிந்து ஓய்ந்த போது அவனது உடல் சிதைந்து குருதியில குளித்து குளிர்ந்துபோயிருந்தது. சலனப் படக்கருவி மட்டும் பாதிப் பற்று அவனது அணைப்பில் அகப்பட்டிருந்தது. ●

---

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்தனான்..." என்றான். இலைகளையும், குழைகளையும் உணவாக்கியிருக்கிறான். நுளம்புகள் அவனது உடலில் கால்பங்கு இரத்தத்தை உறிஞ்சியிருந்தன. பற்றை கிழித்த காயங்கள் வழி கால்வாசி இரத்தம் கசிந்து வெளியேறியிருந்தன. இழந்த தோழன் வந்தான் என்ற மகிழ்ச்சி பலகாலம் நீடிக்கவில்லையே. மீண்டுமொரு நடவடிக்கையில் அவனை இழக்க வேண்டியிருந்தது.

எல்லோருக்காகவும் பொழியும் மழை போல. எதையும் எதிர்பாராது தம்மை அழித்தவர்கள் எவ்வளவு உயர்வானவர்கள். சாவின் வாயிற்குள் தினம். தினம் சென்று மீழும் அவர்கள் வாழ்வு. எல்லோருக்கும் சந்தோசத்தை ஒரு மழைநாளினை எதிர்பார்த்துத்தானே முடிகிறது.

மழையே எப்போது பொழிவாய் யாருக்கும் சுடாத இனிய மொழியாய்...!

## மேகம் - 03

வானத்தாய் பொழியும் தண்ணீர் விரல்கள் தலை கோதுவதாக அந்த மழை இருக்கவில்லை. ஊசியாக குத்தியது. மழைத்துளிகளைத் தாங்கும் சக்தியைக்கூட உடல் இழந்திருந்தது. சாதாரண மனிதர்களின் மழைக்கால ஏக்கம் எதுவும் அவர்களிற்குள் இல்லை. கழுத்தில் தொங்கும் குப்பி எந்தக் கணமும் பற்களிற்குள் நொருங்கலாம். அது இராணுவ முகாம். வேவுக்காய் பகை முகாமில் அலைந்து ஓய்ந்த கால்கள் மழைத்தண்ணீரில் ஊறிக் கொண்டிருந்தன. முள்ளுக்கம்பி கிழித்த இடங்களிலிருந்து இரத்தம் கசிந்து பெருகிக்கொண்டிருந்தது.

"என்ன! நடக்கலாமே..." அணித் தலைவன் எல்லோரையும் கேட்டான். அவனது காலின் பெருவிரல் நகத்தை காட்டுவேர் சிதைத்திருந்தது. தொங்கிக் கொண்டிருக்கும் நகம்... கல். தடிக்குச்சி. சருகு. மழைத்துளி எதுபட்டாலும் மின்சாரம் ஏற்றியதுபோல கொதித்தது. மேற்சட்டையைக் கிழித்து விரலிற்குக் கட்டுப்போட்டான்.

விறைத்துப்போன தசைக்கூடுகள் மெல்ல எழுந்தன. உடைகளில் இருந்த தண்ணீர் வழிந்து கொண்டு இருந்தது. ஆற்றைக் கடந்தால் சற்று ஆறுதலாக இருக்கலாம். ஒவ்வொருவராக ஆற்றில் இறங்கினார்கள். காட்டு ஆறு மூர்க்கமாய் ஓடியது. கிழம்பிய நகத்தையும். தசையையும் மீன்கள் கொத்தின... முற்கம்பி கிழித்து சிதைந்துபோன கால்களை மீன்கள் கொத்தி இரையாக்கின. மீன்களே... மீன்களே... அந்தப் பாதங்களைத் தின்னாதீர்கள். அவை இன்னும் பயணிக்கவேண்டிய தூரம் எவ்வளவோ இருக்கு...

கரையேறியபோது எல்லாக் காயங்களின் வழியே ரத்தமும்.... கண்களில் கண்ணீரும்.. மழைத் தண்ணீரோடு கலந்து நிலத்தில் பரவின. அதற்குமேல் ஒரு அடியைக்கூட அவர்களால் எடுத்துவைக்க முடியவில்லை. கண்டி வீதியால் இராணுவத்தினரின் கனரக வாகனம் ஒன்று இரைந்தது. தற்காலிக பாது காப்பை ஏற்படுத்திவிட்டு மரங்களோடு சாய்ந்து தூங்கினார்கள். மது. இரத்தம் கசியும் கால்களிலே ஈரமண்ணை அள்ளி ஒற்றிக்கொண்டிருந்தான். அவனது காயத்தின் மேலே கண்ணீரும். மழைத்துளியும் ஒன்றாக விழுந்தன. அவன் அழுகிறான்... அணித் தலைவன் ஆச்சரியத்தோடு பார்த்தான். அவன் அழுகிறான்... எதற்கும் கரைந்துபோகாதவன்... எப்போதும் சிரித்துக் கொண்டிருப்பவன்... அழுகிறான். அணித் தலைவன் கையை ஊன்றி அவனுக்கு அருகாகத் தவழ்ந்தான். காயப்பட்டு கட்டிலில் கிடக்கின்ற வேளைகூட சிரித்துக்கொண்டிருந்தவன். இப்போது என்ன நடந்து அழுகிறான்.

"என்ன மச்சான்..?"

முகத்தைக் கூர்ந்து பார்த்தான். அழுதவனின் கண்ணீர் நின்றுவிட்டது. உதடுகள் துடித்தன...

"என்ன... ஏன் அழுதனி..?" விறைத்து குறண்டிப் போயிருந்த தன் விரல்களை நிமிர்த்தி. நீர் சொட்டிக் கொண்டிருந்த தோழனின் தலையை வருடினான்.

"கால் கொதிக்குதோ..?"

"இல்லை..."

"பசிக்குதோ..?"

"இல்லை..."

"நித்திரை..?"

"இல்லை..."

"அப்ப... ஏன்..?" அணித் தலைவன் இழுத்தான்.

"மழை..." என்றுவிட்டு மீண்டும் அழ ஆரம்பித்தான்.

"ஓ... மழை எங்களை நல்லா கஸ்ரப்படுத்திப் போட்டுது..."

"இப்பவில்லை. முந்தியும்" அணித் தலைவனுக்கு விளங்கவில்லை.

"அங்க... அந்த தேன் தூக்கி மரத்தைப் பாருங்கோ..."

"ஓ... அதுக்கு என்ன..?"

"அது என்ர... அம்மாவை ஞாபகப் படுத்திது!"

அணித் தலைவன் உற்றுப் பார்த்தான். மழையில் நனைந்து தண்ணீர் சொட்ட நிற்கும் அந்த மரம். காற்றின் அசைவுக்கு எண்ணற்ற கோலங்களை உருவாக்கிக் கொண்டிருந்த அதன் ஒருகிளை: கோணிப் பையால் முக்காடு போட்டு நனைந்தபடி யிருக்கும் ஒரு மூதாட்டிபோல இருந்தது.

"அம்மாவைப் பார்க்கவேணும்போல இருக்கு..."

இப்போது லேசாகச் சிரித்தான். இல்லை... அழுகையை மறைத்தான். இதைக் கேட்டதும் அணித் தலைவன் திகைத்துப்போனான். நடக்கக்கூடிய ஒன்றா... நிற்பதோ இராணுவப் பிரதேசம். மழையோ நிற்காது பெய்துகொண்டி ருக்கிறது. இன்னும் 20கி.மீ தூரம் நடந்தால்தான் அவர்களின் தங்குமிடத்தை அடையலாம். அதற்குள் என்ன நடக்குமோ கைக் குண்டோ. குப்பியோ.... இந் தக் காட்டிற்குள் அவனது வாழ்வின் முடிவை எழுதி விடும்... அணித் தலைவனின் மனசு அவனுக்காக ஏங்கியது. எங்களில் யார் போகாவிட்டாலும் அவன் போகவேணும்...

"மழை எங்களோட பகையா... நட்பா தெரியாது... சின்ன வயசில இருந்து எங்கட ஞாபகங்களைச் சுமக்கிறது அதுதான். ஒவ்வொரு மழைத் துளிக்கும் ஒவ்வொரு நினைவிருக்கு..."

எழுந்துசென்று தேன்தூக்கி மரத்தடியோடு அமர்ந்தான். அடியோடு தலைசாய்த்துப் படுத்திருந்தான். அணித் தலைவனும் எழுந்து சென்று அருகேயிருந்தான்.

"எங்கட வீடு ஒழுக்கு வீடு... மேச்சல் பிந்திப் போனதால... மழை பெஞ்சா வெள்ளம் ஓடும்... சுவர் கரையும்... வெள்ளத்தில கப்பல் விடுற ஆசையெல்லாம் இல்லை... எங்களிட்ட ஒரு மரக் கட்டிலிருக்கு அதுக்குக் கீழே எங்களையெல்லாம் குந்திக் கொண்டு இருக்கவிட்டு. அதுக்கு மேல எல்லாச் சாமன்களையும் வைச்சு அம்மா பாயால மூடுவா... ஆனா கட்டிலுக்கு கீழால தண்ணிவரும். அம்மா நனைஞ்சபடி குந்திக் கொண்டிருப்பா.. விடிஞ்சதும்.. இஞ்ச இதுமாதிரி" என்று மரத்தை கட்டிப்பிடித்து அழுதான்.

"கோணிப்பையை தலைக்குப் போட்டுக்கொண்டு. ஆரிட்டையும் அரிசி... காசு... கடன் கேட்கப் போவா... வரேக்குள்ள விறைச்சுப்போய். ஏலாம வருவா. சின்னவன்... பசியில அழுவான். நனைஞ்ச விறகோடயும். அடுப்போடயும் அம்மா சிரமப்பட்டுக் கொண்டிருப்பா..."

'சடக்' 'சடக்' சப்பாத்துக் கால்களின் சத்தம். முதலில் மதுதான் துப்பாக்கியை எடுத்தான். அணித்தலைவன் ஆபத்தை உணர்த்தி எல்லோருக்கும் சமிக்கை செய்தான். எல்லோரும் இல்லாவிட்டாலும். மழையோடு சேர்ந்து அழுதுகொண்டிருக்கும் அவனாவது தப்பிச் செல்வான் என்ற நம்பிக்கையோடு சண்டையிட்டார்கள்.

சண்டையைத் தவிர்த்து பின்வாங்கினார்கள். அணித்தலைவன் காயம். இன்னும் சில நிமிடத்திற்குள் அங்கே வரப்போகும் எதிரியைத் திசை திருப்பாது விட்டால் பதினைந்து நாட்கள் வருந்திப் பெற்ற தகவலோடு அவன் கதை முடியப்போகிறது. உடனடியாக திசை திருப்பும் தாக்குதல் ஒன்று செய்யவேண்டும். அணித் தலைவன் தகவல்களை அருகிலிருந்தவனிடம் ஒப்படைத்துவிட்டு புறப்பட்டான். காயப்பட்ட காலோடு சிரமப்பட்டு வந்து கொண்டிருந்தான். அவனுக்கு முன்னே இன்னொரு உருவம். அது மது!

"டேய் நீ... போ... நான் டைவேட் பண்ணிப்போட்டு. குண்டு சார்ஜ் பண்ணுறன்." (திசை திருப்பிப்போட்டு குண்டை வெடிக்க வைக்கிறன்)

"இல்லை நான் நிக்கிறன் நீங்கள் போங்கோ..."

"உன்ர வீடு..."

"அண்ணை எங்கன்ர வீடு மட்டும் ஒழுகேல்லை...



நீங்கள் வெளியில போனா வீட்டை போங்கோ..."

நின்று கதைக்க நேரமில்லை. தகவலின் பெறுமதியை மதித்து இலட்சியத்திற்காக பிரிந்தான்.

கால நீட்சியில் ஒரு மாதம் கழிந்தது. வேவு வேலைகள் முடிய பயிற்சிக்காக பின்னுக்கு வந்தான். அவன் சொன்ன குறிப்பின்படி வீடு போய்ச் சேரவேணும். உந்துருளியை வேகமாக்கினான். "சீ... மழை... தோழனை அழவச்ச மழையே! இன்னும் ஏன் பெய்துகொண்டிருக்கிறாய்..." எண்ணமிட்டபடி அந்தக் குடிசை முன்னே நின்றான். திண்ணையோரமாக முக்காடு போட்டு குடங்கியபடி ஒரு அம்மா... அது அவன் தோழனின் அம்மாதான்.

"அம்மா..." குரல் கொடுத்தான்.

அம்மா இருந்தபடியே பதில் சொன்னாள்

"ஆர்... மழையெல்லே பெய்யுது..."

வரிச்சீருடையில் நிற்கும் இவனை அம்மா பார்க்காதே பதில் பேசினாள்.

"அம்மா... நான்... வந்து பாருங்கோவன்..."

"நான் வரமாட்டன்..." அம்மாவின் குரலில் இறுக்கம். அவன் மெல்ல நடந்து வீட்டினுள் நுழைந்தான். அம்மாவிலிருந்து தண்ணீர் கொட்டிக்கொண்டிருந்தது. முழுமையாக நனைந்துவிட்டாள். தலை நிமிர்த்திப் பார்த்தபோது அவளிற்கு அழுகை வந்தது. எதை நினைத்து அழுகிறாள்... அது தெரியாது. ஆனால் அழுகையின் முடிவில். "மோனை இதைக் கொண்டுபோய் பேசில (முகாம்) வையன். இதாவது நனையாமல் இருக்கட்டும்..."

தோழனின் திருவுருவப் படத்தைக் கொடுத்தாள்... மழைத்துளியிலிருந்து பாதுகாத்து கண்ணீரில் நனைந்தபடி. மழையே எப்போது நிற்பாய்..? ●

எட்டாவது நாள். சிவா இனி வரமாட்டான் என்று மனம் உறுதியாக நம்பத் தொடங்கியது. அவன் வாழ்வின் வேவு நாட்கள் ஒன்றன் பின் ஒன்றாக நினைவில் தொடர்ந்தன. ஒன்பதாவது நாள் பத்திரிகையில் அவனது வீரச்சாவுச் செய்தியை வெளியிட ஆயத்தங்கள் செய்யப்பட்டுக்கொண்டிருந்தது. பத்தாவது நாள்... அதிகாலை அவன் வந்தான். தோற்றம் மாறியிருந்தது. பற்கள் பழுப்பேறியிருந்தன. முடிகள் கலைந்து, அழுக்காய் இருந்தது. நனைந்து கிழிந்துபோன ஆடைகளும் சேற்றில் ஊறியிருந்தது. காயங்களோடு கால்கள். மழை அவனை வலுவாகப் பாதித்திருந்தது. சீ மழையே! ஈரமில்லாத மழையே! இப்படிக் கொடுமைப்படுத்திவிட்டாயே...

# அட்டைப்பள்ளம்!

# மறக்கப்பட முடியாத விரட்டப்பட்ட வாழ்வு!

நிர்மலன்

போரினை சாதகமாகப் பயன்படுத்தி பேரினவாதக் கூலிப்படைகள் தமிழர் பிரதேசங்கள் பலவற்றை இருந்த இடம் தெரியாமல் இல்லாதொழித்தனர். பரம்பரையாக கட்டிக் காக்கப்பட்டுவந்த நிலங்களிலிருந்து தமிழ்மக்கள் கொன்று குவிக்கப்பட்டு அங்கிருந்து விரட்டியடிக் கப்பட்டனர்.



இவற்றில் தமிழர் பிரதேசங்களான எல்லைக் கிராமங்கள் சிலவற்றில் தமிழர்களை வெறியேற்றி அதனை சிங்கள தேசத்துடன் இணைக்கும் திட்டத்தினைத் தீட்டி, அதற்கான முயற்சியில் அப்போதைய பேரினவாத ஆட்சியாளர்கள் ஈடுபட்டனர். இதற்காக அரச கூலிப்படைகள், சிங்களக் காடையர்கள், முஸ்லிம் கும்பல்கள் போன்றோர் பயன்படுத்தப்பட்டனர். பொதுமக்களின் பாதுகாப்பு என்ற போர்வையில் இராணுவ முகாம்களை அமைத்து அதனை சித்திரவதைமுகாம், கொலை முகாம்களாகவும் மாற்றியிருந்தனர்.

கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு, தீ வைப்பு, காணாமல் போதல் என்று மக்கள் மீது தொடர் கொடுமைகள் தொடுக்கப்பட்டன. இதனால் வியர்த்துக் களைத்து, சேமித்த சொத்துக்களை விட்டுவிட்டு, கண்ணீர் சுமந்து, கையில் எடுத்த பொருட்களுடன் வெளியேறி சொந்த மண்ணிலே அகதிகளாக்கப்பட்டு வளமான தம் பூர்வீக கிராமங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்டு, வாழ்வில் துயரம் சுமந்தனர் அந்த மக்கள்.

தென்தமிழீழத்திலே வளம் கொழிக்கும் அழகிய கிராமங்கள் பல உண்டு. அவற்றிலே அம்பாறை மாவட்டத்தில், கிழக்கே கடலும் மேற்கே வாவியும் மறுதிசை இரண்டும் முஸ்லிம் கிராமங்களாலும் சூழப்பெற்ற அழகிய தமிழ்க்கிராமம் அட்டைப்பள்ளம். இங்குள்ள மக்கள் விவசாயத்தையும், மீன் பிடியையும் தமது பிரதான தொழிலாகக் கொண்டு சீவியம் நடாத்திவந்தனர். வயல் நிலங்கள் நிறைந்து காணப்படும் இக்கிராமத்தில் வறுமை என்ற சொல்லுக்கே இடமில்லை. வாரிக் கொட்டினார்கள், பூமாதேவியும், கடல் அன்னையும். வாழ்வின் வளம் குன்றாமல் மக்கள் பூரிப்புடன் வாழ்ந்தனர்.

இவர்களின் இந்த வாழ்க்கையினைப் பார்த்து சகிக்கமுடியாத சிங்களக் கூலிப்படைகளும், முஸ்லிம் கும்பல்களும் இக்கிராம்தின் மீதும் தங்கள் இனவெறியைக் காட்டத் தொடங்கினர். அவ்வப்போது கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு, தீவைப்பு என இம்மக்கள்மீது கொடுமைகளைத் தொடுத்தனர். 1989–1991 காலப்பகுதியில் இக்கிராமத்தில் தமிழர்கள் வகை தொகையின்றிக் கொல்லப்பட்டனர். காணாமல்போகச் செய்யப்பட்டனர – வெட்டப்பட்டோர – உயிருடன் எரிக்கப்பட்டோர் – புதைக்கப்பட்டோர் என நூற்றுக்கணக்கானோர் அழிக்கப்பட்டனர். பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு, கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டனர்.

இக்கிராமத்தின் அருகாமையில் அதிரடிப்படை முகாமினை அமைத்து அதனை கொலைக்கூடமாக மாற்றினர். சிங்களப் படையினரின் கொடூர நடவடிக்கைக்கு முஸ்லிம்கள் சிலரையும் கரம் கோர்த்துக்கொண்டனர். மக்கள் இவர்களை 'வெட்டுப்பாட்டி' எனவும் அழைத்தனர். கொலை செய்யப்பட்டதை, பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதை கண்ட மக்கள் வாய்திறந்து சொல்லமுடியாமல் மௌனிகளாய் நின்றனர். காரணம் தமது உயிருக்கும் உலை வைக்கப்பட்டு விடுமோ என்ற அச்சத்தின் காரணமாகவே மௌனிகளானார்கள்.

சிங்களப் படைகளால் அம்மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரத்தின் தாக்கம் இன்றுவரை அவர்களின் மனங்களில் எவ்வாறு பதிந்துள்ளது என்பதை அட்டைப்பள்ளம் கிராமத்திற்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடியபோது, அவர்களின் சுமையினை கண்ணீருடன் இறக்கி வைத்தனர்.

முதலில் தனது அழகிய மூன்று பெண் பிள்ளைகளையும், தனது சகோதரன், அவர்களின் பிள்ளைகளென மொத்தம் பத்துப்பேரை ஒரே தடவையில் சிங்களக் கூலிப்படைகளுக்கு பலிகொடுத்த கமலாதேவி இப்படிக் கூறினார்.

*"1990ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 21ஆம் திகதி என்ர தங்கச்சியின்ர கலியாணத்துக்காக கொழும்புக்கு பஸ்ஸில போனவங்கள வளத்தாப்பிட்டி எஸ்.ரி.எவ். செக் பொயின்ரில் வச்சி பஸ்ஸவிட்டு இறக்கினானுகள். பிறகு பத்துப்பேரையும் வெள்ளை வேன் ஒன்றில் ஏத்தி கேம்ப் பக்கம் கொண்டு போனானுகள். ஒரு முஸ்லிம் நபர் மூலம் எங்களுக்கு தகவல் கிடைச்சிது. பஸ்ஸில் இருந்து வடிவான குமருப் பிள்ளைகளையெல்லாம் இறக்கி ஒரு வெள்ளை வேனில் வளத்தாப்பிட்டி எஸ்.ரி.எவ் கேம்புப் பக்கம் கொண்டு போறானுகள் என்று. இதைக் கேள்விப்பட்டதும் நாங்கள் செய்வதறியாது திகைத்தோம். ஒப்பாரி வச்சு அழுதோம்.*

*வளத்தாப்பிட்டி செக் பொயின்டில போய் அவர்களை விசாரிச்சம். அப்படி யாரையும் இறக்கவும் இல்லை, பிடிக்கவும் இல்லையென அவனுகள் கூறினானுகள். எனது பிள்ளைகளையும் சகோதரர்களையும் நான் தேடாத, விசாரிக்காத இடமில்லை. கடைசியில இனம் தெரியாதவர்களினால் கொல்லப்பட்டு விட்டார்கள் எனக் கூறி கச்சேரியில போய்ப் பதிஞ்சி காசி எடுங்கோ என்று கூறினாங்கள். பணத்தைக் காட்டி எங்கள் உயிர் உறவுகளை மறந்துவிடச் சொன்னானுகள். அனால் நாங்கள் கச்சேரிக்குப்போய் எந்தப் பதிவுகளையும் செய்யவும் இல்லை பணம் எடுக்கவும் இல்லை.*

*பிறகு அறிந்தோம் முகாமுக்கு கொண்டுசென்ற எனது பிள்ளைகளையும் சகோதரனின் பிள்ளைகளையும் கதறக்கதற அந்த வெறிநாய்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொடூரமான முறையில் கொலை செய்தார்கள் என்று."* இத்தனையும் கூறிவிட்டு, அந்தப் பெண் ஒப்பாரி வைத்து தலையில் அடித்து அழுதவாறு கூறினார், *"அதன்பின் அனைவரையும் வாளால் வெட்டிக் கொலை செய்தார்கள். பஞ்சமா பாதகனுகள் என்ர பிள்ளைகளை எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தி கொன்றிருப்பானுகள். நினைச்சு, நினைச்சு நான் அழாத நாட்களே இல்லை என்னுடைய வயிறு நெருப்பாய் எரியுது.*

*பிறகு இந்த பஸ் றைவர் தர்மலிங்கத்தையும் கொண்டுபோய் கொலை செய்து விட்டானுகள். பத்துப்பேரையும் இறக்கி எடுத்ததை இவன் யாரிடமாவது கூறிவிடுவான் என்பதற்காக அவனையும் கொன்றுவிட்டானுகள். இப்படிக் கன பேரைக் கொண்டு கொண்டு கொலை செய்து விட்டானுகள் அந்த சிங்களப் பாதகனுகள்"* என ஆத்திரம் பொங்க இரண்டு கண்களிலிருந்தும் வெளிவந்த நீரினை துடைத்துக்கொண்ட அந்தப் பெண்மணி கூறினார்.

அடுத்து, கொலை வெறியர்களிடம் தனது கணவனைப் பறிகொடுத்த விதவைப் பெண்மணியொருவர் கூறுகையில், *"1990ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ஆம் திகதி விடியச்சாமம் கோழி கூவக்குள்ளே நிந்தவூர், திராய்க்கேணி, அட்டைப்பள்ளம் கிராமங்களை சுத்தி வெடி கேட்டவாறு இருந்திச்சு. நாங்களெல்லாம் பயந்து நடுங்கி பிள்ளைகளோட வீட்டில் இருந்தம். கிராமங்களைச் சுத்தி எஸ்.ரி.எவ் வளைச்சிட்டானுகள். நல்லா விடிஞ்சதும் ஒவ்வொரு வீடு வீடா புகுந்து ஆம்பிளயளப் பிடிச்சாங்கள். அதில நம்மட புருசனையும் பிடிச்சிட்டானுகள். என்ர புருசனோட ஐந்துபேரை பள்ளிப் பக்கம் கொண்டுபோய் அதிலேயே வைத்து சுட்டுப்போட்டானுகள். பிடிச்சுக்கொண்டு போன ஆண்களில இடையிடையே நான்கு பேர், ஐந்துபேர், ஆறுபேர் என சுட்டுச் சுட்டுப்போட்டு போனானுகள். ஊரெல்லாம் பிணமாய் கிடந்திச்சுது. நாய் நரிகளைக் கொல்வதுபோல் நம்மட உறவுகளைக் கொண்டு குவிச்சாங்க. பிறகு மிஞ்சிய ஆட்களை சாச்சுக்கொண்டு அட்டைப்பள்ளம் எஸ்.ரி.எவ் கேம்புக்குக் கொண்டு போய் ஐம்பத்தி இரண்டு பேரை சுட்டும், வெட்டியும் கொன்றானுகள்.*

*அதோட மக்களெல்லாம் கிராமங்களை விட்டு வெளியேறி காரைதீவு பள்ளிக்கூடத்தில இருந்தம். மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல் சிங்களப்படைகள் அங்கயும் வந்து அந்தப் பள்ளிக்கூடத்தை ரவுண்டப்பண்ணி அதில பிடிச்ச பதினெட்டு ஆண்களில் ஏழுபேரை அவ்விடத்திலேயே உறவுகளின் கண் முன்னால் சுட்டுக் கொன்றுவிட்டாங்கள். மற்றவர்களைக் கொண்டு போய் கேம்பில வச்சி அடிச்சிக் கொன்று போட்டானுகள்."* என்று அந்த விதவைப் பெண் தனது மனக் குமுறலை கண்ணீர் வழிந்தோட வெளியிட்டார்.

இவ்வாறு அட்டைப்பள்ள கிராமம், மற்றும் அயல் கிராமங்களைச் சேர்ந்த தமிழ்மக்கள் சிங்கள கூலிப்படைகள் அவர்களின் கைக்கூலிகளாய் செயற்பட்ட முஸ்லிம் கும்பல்களாலும் கொல்லப்பட்டனர். இவர்களால் அழிந்துபோன உயிர்கள் உடமைகள் கணக்கிட முடியாதவை. மக்கள்பட்ட துயரங்கள் சொல்ல முடியாதவை. இந்த இன அழிப்பு நடவடிக்கை அப்போது யார் கண்ணுக்கும் தெரியவில்லை. அம்பாறை மாவட்ட தமிழர்களின் பூர்வீக பிரதேசங்கள் சிங்களக் கொலை வெறியர்களின் கொலைக் களமாக மாறியிருந்ததை யார்தான் உணர்ந்தார்கள். ஆனால் அம்மக்களின் கண்ணீருக்கும் கதறல்களுக்கும் சிங்களம் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

தமது உறவுகள் சுடப்பட்ட வீதிகளில், அச்சத்துடன் அவர்களின் எல்லையோர வாழ்வு இன்றும் திகழ்கின்றது. அருகிருக்கும் முகாம்களும், அவர்களைச் சூழ்ந்த கிராமங்களும் மீண்டும் என்றோ ஒருநாள் தம் அமைதி வாழ்வில் ஏதிலிகளாவார்கள் என்றபோதும், அச்சம் கலந்த உறுதியுடன் எஞ்சிய அவர்களின் வாழ்வு தொடர்கிறது. ●

> ***''1990ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ஆம் திகதி விடியச்சாமம் கோழி கூவக்குள்ளே நிந்தவூர், திராய்க்கேணி, அட்டைப்பள்ளம் கிராமங்களைச் சுத்தி வெடி கேட்டவாறு இருந்திச்சு. நாங்களெல்லாம் பயந்து நடுங்கி பிள்ளையளோட வீட்டில இருந்தம். கிராமங்களைச்சுத்தி எஸ்.ரி.எவ் வளைச்சிட்டானுகள். நல்லா விடிஞ்சதும் ஒவ்வொரு வீடு வீடா புகுந்து ஆம்பிளயளப் பிடிச்சாங்கள். அதில நம்மட புருசனையும் பிடிச்சிட்டானுகள். என்ர புருசனோட ஐஞ்சு பேரை பள்ளிப்பக்கம் கொண்டுபோய் அதிலேயே சுட்டுப் போட்டானுகள். பிடிச்சுக்கொண்டுபோன ஆம்பிளயள்ள இடையிடையே நான்குபேர், ஐஞ்சுபேர், ஆறுபேர் என்று சுட்டுச் சுட்டுப்போட்டு போனானுகள். ஊரெல்லாம் பிணமாய்க் கிடந்திச்சுது''***

# இமாலய வியப்பு

தேசியத் தலைவரின் காலகட்டத்தினை நோக்கும்போது எனக்கு உண்மையிலேற்படுவது இமாலய வியப்புத்தான். நவீன போரியல் வளர்ந்த காலகட்டத்திலே கரந்துறை போராளியாக மிகச் சிறிய அணியை தொடக்கினார். இதுவே பல நூற்றாண்டுக்கால பின்தங்கிய போருத்தி. பனிப்போர் காலகட்டத்து வல்லரசின் பிராந்திய தலைமை நாடான இந்தியாவோடு மோதவும் அவர் முடிவெடுத்தார். பின்னர் 20 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே முதலாளியம் கொடிகட்டிப் பறந்த காலகட்டத்திலே அனைத்து நாடுகளுக்கும் எதிராகவே மறைமுகமாக அவர் பெரும் போரை எதிர் கொண்டு நடத்தினார்.

இங்கே கவனிக்க வேண்டிய விடயமென்னவென்றால் நவீன போரியலின் வளர்ச்சி, நவீன அறிவியலின் உச்ச வளர்ச்சி, தொடர்பாடல் துறையால் உலகம் கிராமமாகிவிட்ட நிலை, உலக மயமாக்கல் உச்சக்கட்டமாக அரங்கேறிய வேளை. தனி மனித மேம்பாடே தலையாய விதியாகிய வேளை. இந் நிலையில் இத்தகைய போக்குகளின் தாக்கத்தினையும் தாங்கி அதனையெதிர்த்துப் போராடும் மனிதரின் தாங்கு சக்தியின் ஆற்றலே என்னை பெருத்த சிந்தனையாளனாக்குகின்றது. எனவேதான் நாம் கூறுகின்றோம். இந்த நூற்றாண்டின் இணையற்ற விடுதலை மனிதர் அவர். இவரது இப் புதிய அரசியல் இராணுவப் பாங்கு இந்த நூற்றாண்டினதும் இனிப் பின் வரும் நூற்றாண்டினதும் விடுதலை வேண்டுவோருக்கான வழிகாட்டி.

எனது வியப்புக்களோ எல்லையற்றவை. இவற்றினை இங்கே சிறப்பித்து எழுதியமைக்கு பிரதான நோக்கம் மேம்பாடடைந்த ஆக்கத்திறன் மிக்க போரற்ற இசைவடைந்த வாழ்வினைப் பெற முயலும் மனித குலத்திற்கு அவரது சிந்தனைகள் எவ்வளவு பயன்படும் என்பதை உணர்த்தவேயாகும். மிகப்பெரும் பேராற்றலின் வித்தகனாகத் தோன்றிய அவர் இன்று அமைதியின் எளிமையின் ஆக்கத்திறனின் அறிவியல் வாழ்வின் குறியீடுமாகின்றார். போரை நடத்தி போரையே இல்லாமல் செய்து விட்டார். இன்னொரு போர் மூழுமானால் அதனையும் எதிர்கொள்ளவும் அவர் ஆயத்தமாயுள்ளார். சுவீடன் நாட்டு உப்சலா பல்கலைக் கழகத்தின் பெரும் நூலகத்தின் வாயிலே பொறிக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளிவை:



**"To Think freely is great**
**To think correctly is greater"**

சுதந்திரமாக சிந்தித்தலென்பதே மிகப்பெரிய விடயந்தான். ஆனால் மிகச் சரியாக சிந்திப்பது என்பது அதனையும்விட பாரிய விடயம். இதனையே எமது தேசியத் தலைவருக்கு நாம் எமது பேரன்பின் வரிவடிவமாக சூட்டுகின்றோம். ●

> **கீழ்மையடைந்து அடிமை வாழ்வை வாழ்கின்றோமே என்பதனை மறந்து சிதைந்து சீரழிந்து உதிரிகளாக பிளவுண்ட ஒரு தேசிய இனத்தினை எவ்வாறு அவர் ஒழுங்குபடுத்தினார்? ஒருமுகப்படுத்தி ஒன்றிணைத்தார்? இணைந்தவொரு ஆற்றல் மிக்க அரசியல், இராணுவ, இராசதந்திர வன்மை நிறைந்த அணியாக்கி அதனை சருவதேச மூன்றலிலே எவ்வாறு அவர் முன்னிறுத்தினார்?**

# 2004 மாவீரர் நாளன்று தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை

(01ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறவில்லை. எமது மக்கள் இன்னும் பூரண சுதந்திரம் அடைந்துவிடவில்லை.

தமிழீழத்தின் தொன்மைவாய்ந்த, வரலாற்றுப் புகழ் மிக்க நகரங்களும் பட்டினங்களும் அங்கு வாழ்ந்துவரும் எமது மக்களும் இன்னும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புப் பிடியிலிருந்து விடுபடவில்லை. அவர்கள் திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் அடைபட்டு, நசிபட்டு, மிதிபட்டு வாழ்கிறார்கள். தமது சொந்த மண்ணிலிருந்து வேர் அறுபட்டு இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கானோர், தாம் பிறந்து வாழ்ந்த நிலங்களுக்குத் திரும்பமுடியாது அகதி முகாம்களில் அல்லற்படுகிறார்கள். எமது மக்களின் துயரும் துன்பமும் தொடர்கிறது. தேச விடுதலை என்ற எமது இலட்சியம், எமது மாவீரர்கள் கனவுகண்ட அந்தச் சத்திய இலட்சியம் இன்னும் நிறைவுபெறவில்லை.

எனது அன்பான மக்களே,

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு, ஓர் இக்கட்டான, சிக்கலான சூழ் நிலையை நாம் இன்று எதிர்கொண்டு நிற்கின்றோம். போருமின்றி, நிலையான சமாதானமுமின்றி, இயல்பு நிலையுமின்றி, இடைக்காலத் தீர்வுமின்றி, இனப் பிரச்சி னைக்கு முடிவுமின்றி, நாம் ஒரு அரசியல் வெறு மைக்குள் வாழ்ந்து வருகின்றோம். இந்த அரசி யற் சூனிய நிலை நீடித்தால், அது எமது இலட்சி யப் போராட்டத்திற்குப் பெரும் பங்கத்தை ஏற் படுத்திவிடும் என்பது திண்ணம்.

மூன்று தசாப்தங்களாக முடிவின்றித் தொடர்ந்த ஆயுதப் போருக்கு நாம் ஓய்வு கொடுத்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. நாம் அமைதிகாத்த இக் காலவிரிப்பில், சமாதான வழிமூலமாகத் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண எம்மாலான சகல முயற்சிகளையும், நேர்மையுடனும் உறுதிப்பாட்டுடனும் நாம் மேற் கொண்டோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.


நோர்வே நாட்டை நடுநிலையாளராக ஏற்று, அந் நாட்டின் அனுசரணையுடன் உலக நாடுகள் சிலவற்றின் தலைநகர்களில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுக்களில் எமது விடுதலை இயக்கம் பங்கு பற்றியது. ஆறு மாதங்கள்வரை நீடித்த ஆறு சுற்றுப் பேச்சுக்களும் அர்த்தமற்றதாகப் பயனற்றுப்போயின. நெருக்கடி நிலை யைத் தணித்து, இயல்பு நிலையைத் தோற்றுவித்து, இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தவும் அவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கவும் போரினாற் பேரழிவுக்கு ஆளான கட்டுமானங்களைப் புனர்நிர்மாணம் செய்யவும் நிறுவப் பட்ட உப-குழுக்கள் செயலிழந்து செத்துப்போயின. இவை ஒருபுறமிருக்க, சிறீலங்கா அரசானது எமது விடுதலை இயக்கத்தை ஓரங்கட்டிவிட்டு வாஷிங்டனில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற் பங்குபற்றியது. இதனால், சமநிலைப் பங்காளி என்ற தகைமையிலிருந்து நாம் ஒதுக்கப்பட்டோம். இப்படியான புறநிலையிற்றான் பேச்சுக் களைத் தற்காலிகமாக இடைநிறுத்த எமது இயக்கம் முடி வெடுத்தது. எமது அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தவே நாம் இந்த முடிவை எடுத்தோம். பேச்சுக் களை ஒரேயடியாக முறித்து, சமாதான முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட நாம் விரும்பவில்லை. பேச்சுக்களை இடைநிறுத்தம் செய்த இடைவெளியில், ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான திட்ட வரைவை முன்வைக்கு மாறு ரணில் விக்கிரமசிங்காவின் அரசிடம் வேண்டுகோள் விடுத்தோம். நீண்டகாலப் போரினாலே பாதிக்கப்பட்ட எமது மக்களுக்குப் புனர்வாழ்வு பெற்றுக்கொடுக்கவும் சிதைந்து போன தமிழர் தேசத்தை மீள் நிர்மாணம் செய்யவும் கணிசமான அதிகாரத்துடன் ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசிய மென்பதை வலியுறுத்தினோம்.

ஒன்றுக்குப் பின் ஒன்றாக ரணிலின் அரசு முன் வைத்த, இடைக்கால நிர்வாகம் பற்றிய மூன்று வரைவு களும் எமக்குத் திருப்தியை அளிக்கவில்லை. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களுடன் நிர்வாக வலுவற்ற தாக இத் திட்ட வரைவுகள் அமையப் பெற்றதால் எம்மால் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இறுதியில், ஓர் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவை நாமாகத் தயாரித்துக்கொடுக்க முடிவெடுத்தோம். பல மட்டங்களிலே தமிழீழ மக்களின் கருத்தைப் பெற்று, வெளிநாடுகளிற் புலம்பெயர்ந்து வாழும் அரசியல் அறிஞர்கள், சட்ட வல்லுனர்கள், அரசியலமைப்பு நிபுணர்கள் ஆகியோரின் கலந்தாலோசனையுடன் ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தைத் தயாரித்தோம். இத்திட்டம் புதுமையானது. நடைமுறைச் சாத்தியமானது. எமது மக்க ளின் அவசரமான வாழ்நிலைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இதன் கட்டமைப்பு நெறிப்படுத்தப் பட்டுள்ளது. தமிழர் தாயகத்தில் மீள்குடியமர்வு, புனர் வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி ஆகிய பணிகளைத் தாமதமின்றிச் செயற்றிறனுடன் நிறைவுசெய்ய வழிவகுக் கும் உருப்படியான அதிகாரங்களைக் கொண்டதாக இத் திட்டம் அமையப்பெற்றது.

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தைச் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி நாம் ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கத்திடம் சமர்ப்பித்ததுடன், ஊடகங்கள் வாயிலாகப் பொதுசன அரங்கிலும் பகிரங்கப்படுத்தினோம்.

சர்வதேச நாடுகள் பல, எமது இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தை வரவேற்கத் தவற வில்லை. நீண்ட காலத்தின் பின்பு முதற்றடவையாக விடு தலைப்புலிகள் தமது அரசியற் சிந்தனைகளைத் தெளி வாகவும் விரிவாகவும் எழுத்தில் வடித்திருக்கின்றார்களென இந் நாடுகள் திருப்தி தெரிவித்தன.

நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதி காரசபைத் திட்டத்தை ரணில் விக்கிரமசிங்காவின் அர



சாங்கம் நிராகரிக்கவில்லை. தாம் சமர்ப்பித்த வரைவுகளைப் பார்க்கிலும் எமது திட்டம் வித்தியாசமானது என்று குறிப் பிட்ட அரசாங்கம், எமது யோசனைகளின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பிக்க இணங்கியது. ஆனால், அதே சமயம், எமது இடைக்கால நிர்வாகத் திட்டத்தைக் கடுமையாக விமர்சித்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி, அது தமிழீழத் தனியரசுக்கு இடப்பட்ட அத்திவாரமெனக் கண்டித் தது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் ஜனாதி பதியுமான சந்திரிகா குமாரதுங்கா ஒருபடி மேலே சென்று அதிரடி நடவடிக்கையை எடுத்தார். எமது இடைக்கால நிர்வாகத் திட்டம் அறிவிக்கப்பட்ட நான்காவது நாளே சந்திரிகா அம்மையார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கை தென்னிலங்கை அரசியலைப் பெரும் நெருக்கடிக்குள்ளே தள்ளியது. பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுகளை ஜனாதிபதி சந்திரிகா பறித்தெடுத்துக் கொண்டதால் ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சிபீடம் அதிகார வலுவிழந்து ஆட்டம் கண்டது. இதனைத் தொடர் ந்து மூன்று மாதத்திற்குள் ஜனாதிபதி சந்திரிகாவினாற் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் விளைவாக ரணில் அரசாங்கம் கவிழ்ந்தது.

இவ்வாண்டு முற்பகுதியில் நிகழ்ந்த பொதுத் தேர்தல் சிங்கள, தமிழ்த் தேசங்கள் மத்தியிலான இன முரண்பாட்டினை மேலும் கூர்மையடையச் செய்தது. சமாதானத்திற்கும் இன இணக்கப்பாட்டிற்கும் விரோதமான சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள், என்றுமில்லாதவாறு தென்னிலங்கை அரசியல் அரங்கில் மேலாண்மை வகிக்க இப் பொதுத்தேர்தல் வழிவகுத்தது. இனவாதமும் மத வாதமும் பழமைவாதக் கம்யூனிசமும் ஒன்றுகலந்த குழறு படியான கருத்தியலில் ஊறித் திளைத்த, தமிழர் விரோதக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) இத் தேர்தலில் கணிசமான ஆசனங்களைப்பெற்று மூன்றாவது பிரதான அரசியற் கட்சியாக வெற்றிபெற்றது. இந்த இன வாதக் கட்சியை முக்கிய தோழமைப் பங்காளியாக அர வணைத்து, ஒரு கூட்டணி அரசாங்கத்தை அமைத்தார் சந்திரிகா அம்மையார். தமிழரின் தேசியப் பிரச்சினை குறித்து மாறுபட்ட போக்கும் முரண்பட்ட கொள்கையு முடைய அரசியல் இயக்கங்களின் ஒவ்வாத கூட்டாக இந்த அரசாங்கம் அமையப்பெற்றது.

பொதுசனத் தீர்ப்பின் வாயிலாக, தென்னிலங்கை அரசியலரங்கிற் சிங்களப் பௌத்த மேலாண்மைவாதம் வலுப்பெற்ற அதே சமயம், தமிழரின் தாயகமான வட கிழக்கில், ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாகத் தமிழ்த் தேசியம் எழுச்சிபெற்றது. எமது விடுதலை இயக் கத்தின் அரசியல் இலட்சியத்திற்கு மக்கள் சக்தியின் ஏகோபித்த ஆதரவு கிட்டியது. தமிழீழ மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற வெகுசன அங்கீகாரமும் எமது விடு தலை இயக்கத்திற்கு வழங்கப்பட்டது. எமது இயக்கம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்திற்கு எமது மக்களின் மனுவும் கிடைத்தது. விடு தலைப் புலிகளின் இலட்சியக் குரலாக, அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சனநாயக சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருபத்திரெண்டு ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியது. இப் பொதுத் தேர்த லானது என்றுமில்லாதவாறு தமிழ், சிங்கள இனங்களை வேறுபட்ட இரு தேசங்களாகப் பிளவுபடுத்தியது. கருத்தா லும் உணர்வாலும் இலட்சியத்தாலும் வேறுபட்டு, மாறு பட்டு, முரண்பட்டு நிற்கும் இரு மக்கள் சமூகங்களாகப் பிரிவுறச் செய்தது.

தென்னிலங்கையில் ஆட்சிமாற்றம் நிகழ்ந்து, அரசிய லதிகாரம் இனவாத சக்திகளிடம் சென்றடைந்தபோதும் நாம் தொடர்ந்தும் அமைதி பேணி, சமாதான முயற்சியை முன்னெடுக்க விரும்பினோம். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பிக்க நாம் தயாரென்பதை நோர்வே அனுசர ணையாளர்கள் மூலமாகச் சந்திரிகாவின் கூட்டணி அரசாங்கத்திற்கு அறிவித்தோம். அவ்வேளைதான் அரச கூட்டணிக்குள் குழப்பமும் கொள்கை முரண்பாடும் தலைதூக்கின.

அரச கூட்டணிக்குள் ஆதிக்க வலுவுடைய கட்சியான ஜே.வி.பி, சமாதானப் பேச்சுக்கள் வாயிலாகத் தமிழ்மக்களுக்கு அரசியல் உரிமை யும் ஆட்சியதிகாரமும் வழங்கப்படுவதைக் கடுமையாக எதிர்த்தது. மூன்றாந் தரப்பு நடுநிலை யாளராகச் செயற்பட்ட நோர்வே அரசையும் வன்மையாகக் கண்டித்தது. நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட் டத்தை முற்றுமுழுதாக நிராகரித்தது. எமது திட்டத்தின் அடிப்படையிற் பேச்சுக்கள் ஆரம்ப மானால் அரச கூட்டணியிலிருந்து வெளியேறி விடப் போவதாகவும் மிரட்டியது. சமாதானப் பேச்சுக்கும் சமரச முயற்சிக்கும் எதிரான ஜே.வி.பி யினரின் தீவிரவாதக் கடும்போக்கு, சந்திரிகா அம்மையாருக்குப் பெரும் சவா லாக அமைந்தது. இந்நிலையே தொடர்ந்தும் நீடிக்கிறது.

சமாதான வழிமுறையைப் பேணி இனப் பிரச்சி னைக்குத் தீர்வுகாணவேண்டுமென்ற சர்வதேச அழுத்தம் ஒருபுறமும், பேச்சுக்கள் ஆரம்பமாகி முன்னேற்றம் ஏற்படும் போதுதான் உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த பெருந் தொகைக் கடனுதவி கிடைக்குமென்ற நிர்ப்பந்தம் மறுபுற மும், பாதாளம் நோக்கிச் சரிந்து செல்லும் இலங்கையின் பொருளாதாரம் இன்னொரு புறமுமாக, சந்திரிகாவின் அரசு பலமுனைகளில் நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது. இந்த நெருக்கடிக்கு முகம் கொடுப்பதாயின் விடுதலைப் புலிக ளுடன் பேச்சுக்களை நடத்தியே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அரச கூட்டணிக்குள் நிலவும் உள்முரண்பாடும், அடிப்படை யான கொள்கை வேறுபாடும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குப் பெரும் இடையூறுகளாக எழுந்துள்ளன. தமிழரின் தேசிய இனப்பிரச்சினை குறித்து அரச கூட்டணிக்குள் அங்கம்வகிக்குங் கட்சிகள் மத்தியில் ஒரு தெளிவான கொள்கைத் திட்டமோ பொதுவான அணுகு முறையோ இருக்கவில்லை. தமிழர் விரோத இனவாதத் திலும் போர்வெறி பிடித்த இராணுவவாதத்திலும் சிங்களப் பௌத்த மேலாதிக்கத்திலும் ஊறித் திளைத்த தீவிரவாதச் சக்திகளுடன் அதிகாரக் கூட்டுறவு வைத்திருக்கும் சந்தி ரிகா அம்மையாரால் ஒரு தெளிவான கொள்கைத் திட்டத் தின் அடிப்படையிற் சமாதான முயற்சியை முன்னெடுக்க முடியவில்லை. இதுதான் தென்னிலங்கையில் நிலவும் உண்மையான அரசியல் யதார்த்த நிலை. அரச கூட்டணிக் குள் கருத்தொற்றுமையில்லையென்ற அரசியல் உண்மை யானது மிகவும் சாதுரியமான முறையில், சர்வதேச சமூகத்திற்கு இருட்டடிப்புச் செய்யப்பட்டுவருகிறது.

ரணில் விக்கிரமசிங்கா அரசாங்கத்துடன் நாம் நிகழ்த்திய பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாக, அதன் இறுதிக் கட்டத்திலேயே எமது இடைக்கால நிர்வாக யோசனைகளை முன்வைத்தோம். அந்த யோசனைகளை அடிப்படையாக வைத்து உடன் பேச்சுக்களைத் தொடங்க லாம் என்ற எமது நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக்

(உரையின் தொடர்ச்சி 16ஆம் பக்கத்தில்)

# 2004 மாவீரர் நாளன்று தமிழீழத்தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைமை ஆதரிக்கிறது. ஆனால் எமது நிலைப்பாட்டிற்கு மாறாக, சந்திரிகாவின் அரசு ஒரு நிபந்தனையை விதிக்கிறது. அதாவது, எந்த வகையான இடைக்கால நிர்வாக அமைப்பும் ஒரு நிரந்தரமான தீர்வுத் திட்டத்தின் இணைபிரியாத அங்கமாக அமையவேண்டும் என வலியுறுத்துகிறது. நாம் ஓர் இடைக்கால நிர்வாக ஒழுங்கை வேண்டிநிற்க, சந்திரிகாவின் அரசு இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுபற்றி பேச விரும்புகிறது.

கால தாமதமின்றி, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தமிழர் தாயகத்தில் அமையப்பெற வேண்டுமென நாம் வலியுறுத்துவதற்கு முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. நீண்ட காலமாகத் தொடர்ந்த கொடிய போரினாற் பாதிக்கப்பட்ட எமது மக்கள் மிகவும் அவசரமான வாழ்நிலைத் தேவைகளையும் பாரிய மனிதாபிமானப் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு நிற்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் அகதி முகாம்களில் அவல வாழ்க்கை வாழ்ந்துவருகிறார்கள். போரினாற் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்குவதற்கு உதவி வழங்கும் நாடுகள் பெருந்தொகையில் நிதி ஒதுக்கீடு செய்ய முன்வந்துள்ளன. துன்பப்படும் எமது மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்கவும் அழிவுற்ற தமிழர் தேசத்தை மீளக் கட்டியமைக்கவும் தகுந்த அதிகாரங்களுடன் வடகிழக்கில் ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு நிறுவப்படுதல் அவசியம்.

போர்நிறுத்தம் செய்து, மூன்று ஆண்டு காலமாக அமைதி பேணி, ஆறு மாதங்கள்வரை பேச்சுக்களை நடத்தியபோதும் சமாதானத்தின் பலாபலன்கள் இன்னும் எமது மக்களைச் சென்றடையவில்லை. தாங்கமுடியாத அளவிற்கு அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளின் சுமை எமது மக்களை நசுக்கி வருகிறது. முதலில், உடனடியாகத் தமது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டவேண்டுமென்பதையே எமது மக்கள் ஆவலாக எதிர்பார்த்து நிற்கின்றார்கள். எனவேதான், நாம் முன்வைத்த யோசனைகளின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பித்து வெகு சீக்கிரமாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவவேண்டுமென நாம் விரும்புகின்றோம். நாம் தெரிவித்த யோசனைகளிற் சில சர்ச்சைக்குரியனவாகத் தென்பட்டால் அவைபற்றிப் பேச்சுவார்த்தை மேசையில் விவாதித்துத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். முதலில், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவி, அது செம்மையாகச் செயற்படத் தொடங்குவதை அடுத்தே இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுபற்றிப் பேச்சுக்களை நடத்தலாம் என்பதே எனது நிலைப்பாடு. எமது கோரிக்கை நியாயமானது. தமிழர் தாயகத்தில் நிலவும் வாழ்நிலை நிதர்சனத்தைக் கருத்திற்கொண்டே நாம் இக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

ஆனால், சந்திரிகா அம்மையாரோ இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதுபற்றிப் பேச வருமாறு எமக்கு அழைப்பை விடுத்து வருகிறார். எந்த வடிவத்திலான இடைக்கால நிர்வாகத் திட்டமும், முழுமையான நிரந்தரத் தீர்வுத் திட்டத்தின் அங்கமாக அமையவேண்டும் என்பது அவரது நிலைப்பாடு. தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என அவர் வலியுறுத்துவதற்குப் பல காரணங்களை நாம் சுட்டிக் காட்டலாம். முதலாவதாக, அரசுக் கூட்டணிக்குள் அங்கம் வகிக்கும் தீவிரவாத இனத்துவேசச் சக்திகளைத் திருப்திப்படுத்துவதற்காக இருக்கலாம். அதுவும் குறிப்பாக, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தை வன்மையாக எதிர்த்து நிற்கும் ஜே.வி.பி யினரைச் சமாதானப்படுத்தும் நோக்கமாக இருக்கலாம். இரண்டாவதாக, தமிழரின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் உண்மையான அக்கறை கொண்டவர்போன்று சர்வதேசச் சமூகத்திற்கு ஏமாற்றுவித்தை காட்டுவதற்காக இருக்கலாம். மூன்றாவதாக, தமிழரின் சிக்கலான இனப் பிரச்சினை பற்றி விவாதிப்பது என்ற சாக்கிற் பேச்சுக்களை முடிவின்றி இழுத்தடிப்பதற்காகவும் இருக்கலாம். இப்படிப் பல காரணங்களை நாம் சுட்டிக் காட்டலாம். எப்படியான காரணங்களாக இருந்தாலும் ஒன்றைமட்டும் நாம் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகின்றோம். அதாவது, சந்திரிகா அம்மையாரின் முரண்பட்ட, ஒன்றுக்கொன்று மாறுபட்ட நிலைப்பாடுகளைப் பார்க்கும்பொழுது, அவரது அரசானது தமிழ் மக்களுக்கு ஓர் இடைக்காலத் தீர்வையோ நிரந்தரமான தீர்வையோ வழங்கப்போவதில்லை என்பது புலனாகும்.

தமிழ்மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுவேண்டிக் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நாம் சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேச்சுக்களை நடத்திய கசப்பான வரலாறு பற்றி நான் இங்கு விபரிக்க விரும்பவில்லை. காலத்தாற் சாகாது, ஈழத் தமிழ் இனத்தின் கூட்டு அனுபவத்திற் புதைந்து கிடக்கும் அரசியல் உண்மை இது. மொழியுரிமை என்றும் சம உரிமை என்றும் பிரதேச சுயாட்சி என்றும் சமஷ்டிக் கூட்டாட்சி என்றும் காலங்காலமாக நாம் பேச்சுக்களை நடத்தி, உடன்பாடுகள் ஒப்பந்தங்கள் செய்து, ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்பட்ட வரலாற்றுப் பாதையில் மீள நடைபோட எமது விடுதலை இயக்கந் தயாராக இல்லை.

சிங்களப்பௌத்தப் பேரினவாதச் சகதிக்குட் புதைந்து கிடக்கும் அரசியல் அமைப்புகளும் அவற்றின் தலைமைகளும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருபொழுதும் புரிந்துகொள்ளப் போவதில்லை. சிங்களத் தேசத்தின் பிரதான அரசியற் கட்சிகள் எவையுமே தமிழரின் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைகளைக்கூட அங்கீகரிக்கத் தயாராக இல்லை. வடகிழக்கு மாநிலமானது தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகம் என்பதையோ, தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக் கட்டமைப்பைக்கொண்ட மக்கள் சமூகம் என்பதையோ தமிழீழ மக்களுக்குப் பிரிந்து செல்லும் உரிமையுடனான சுயநிர்ணய உரிமையுண்டு என்பதையோ எந்தவொரு சிங்கள அரசியல் இயக்கமும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை. தமிழரின் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைகளைப் புரிந்துகொண்டு அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் பெருந்தன்மையும் மதிநுட்பமும் இல்லாதது ஒருபுறமிருக்க, தென்னிலங்கை அரசியல் இயக்கங்கள் மத்தியில் ஒத்திசைவற்ற, ஒன்றுக்கொன்று மாறுபட்ட, முரண்பாடுகள் நிறைந்த கருத்துக்களையும் கொள்கைகளையுமே காணக்கூடியதாக இருக்கிறது. இப்படிக் குழறுபடியான கொள்கைகளை வரித்துக்கொண்டு, அப்பட்டமான இனவாதம் பேசும் கட்சிகளின் கூட்டணிக்குத் தலைமைவகிக்கும் சந்திரிகா அம்மையார், இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதுபற்றி அக்கறை காட்டுவது எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. ஜனாதிபதி சந்திரிகாவிடமும் அவர், கூட்டாட்சி அமைத்திருக்கும் கட்சிகளிடமும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடமும் எமது விடுதலை இயக்கம் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறது. அதாவது, தமிழ் மக்களது இனப் பிரச்சினையின் அடிப்படைகள் குறித்து, அவர்களது மூலாதாரக் கோரிக்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை குறித்து, உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாகப் பகிரங்கப்படுத்துங்கள்.

தென்னிலங்கை அரசியலரங்கில் தமிழரின் அடிப்படை அரசியல் அபிலாசைகள் குறித்துத் தெளிந்த பார்வையும் நேரிய தரிசனமும் ஒத்திசைவான நிலைப்பாடும் நிலவுமானால் எமது மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமுண்டு. அல்லாத பட்சத்தில், நிரந்தரத் தீர்வு குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை. தமிழர் பிரச்சினை குறித்துப் பிளவுபட்டு, முரண்பட்டுக் குழம்பி நிற்கும் சிங்கள அரசியல் தலைமைகளிடமிருந்து எமது மக்களுக்கு நியாயமான நிரந்தரத் தீர்வு கிடைக்கப்போவதில்லையென்ற உண்மையை உணர்ந்துதான் நாம் இடைக்காலத் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்தோம். எமது மக்களின் வாழ்க்கைத் தேவைகளுக்காவது நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடனேயே நாம் இத் திட்டத்தை முன்வைத்து, பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு விருப்பம் தெரிவித்தோம். ஆனால் சந்திரிகாவின் அரசு எமது நியாயமான நிலைப்பாட்டை நிராகரித்து, நிரந்தரத் தீர்வு என்ற சாக்குச் சொல்லி, சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டுவருகிறது. சமாதானத்தின் விரோதிகளையும் இனவாத சக்திகளையும் அவர்களது குளறுபடியான கொள்கைகளையுந் தனது கூட்டாட்சித் திரைக்குள் மூடிமறைத்து, விடுதலைப் புலிகள் மீது வீண்பழி சுமத்த முனைகிறார் சந்திரிகா அம்மையார். சமாதான முகமூடி அணிந்து நடிக்கும் சந்திரிகா அரசின் உண்மையான முகத்தைச் சர்வதேச சமூகம் அடையாளம் கண்டுகொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி, நாம் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்தும் சிறைபட்டுக் கிடக்கமுடியாது. சிங்களத் தேசமானது தமிழினத்தை அரவணைத்து, இணைத்து வாழவும் விரும்பவில்லை. அதே சமயம், பிரிந்து சென்று தனித்து வாழவும் விடுவதாக இல்லை. இரண்டுங்கெட்டான் நிலையில் விடிவின்றி, விடுதலையின்றி, எதிர்காலச் சுபீட்சமின்றி சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்து வாழமுடியாது. பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் எல்லைக்கோடுகளுள்ளன.



2003 கோப்பிலிருந்து

அந்த எல்லைக்கோடுகளை நாம் அடைந்துவிட்டோம். இந்த நெருக்கடியான சூழ்நிலையிற் சிறீலங்கா அரசுக்கு நாம் அவசரமான அழைப்பு ஒன்றை விடுக்க விரும்புகின்றோம். அதாவது, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில், நிபந்தனையற்ற முறையில், காலந்தாமதிக்காது பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்து, எமது மக்களின் துயர வாழ்வை நீடித்துச்செல்ல சிங்கள அரசு முற்படுமானால், நாம் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை. எமது இந்த இக்கட்டான நிலையை, தமிழரின் இனப் பிரச்சினையில் அக்கறையுடைய உலக நாடுகள் கருத்தில் எடுத்து, எமது நியாயமான நிலைப்பாட்டின் அடிப்படையிற் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி சிறீலங்கா அரசிற்கு அழுத்தம்கொடுக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

எமது மண்ணின் விடிவிற்காகவும் எமது மக்களின் விடுதலைக்காகவும் களமாடி வீழ்ந்த எமது மாவீரர்களை நினைவுகூரும் இப் புனித நாளில், தேச விடுதலை என்ற அவர்களது இலட்சியக் கனவை, எத்தகைய இடர்கள், சவால்களை எதிர்கொண்டபோதும் நிறைவுசெய்வோமென நாம் உறுதி பூணுவோமாக.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

**புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்**